இன்னா நாற்பது-
இனியவை நாற்பது

அம்சவேணி பெரியண்ணன் உரை

இன்னா நாற்பது
இனியவை நாற்பது

அம்சவேணி பெரியண்ணன் உரை

(மூலமும்-எளிய உரையும்)

அம்சவேணி பெரியண்ணன் M.A.,

வனிதா பதிப்பகம்

11, நானா தெரு, தியாகராய நகர்,
சென்னை-600 017. ☎ 044-42070663

இன்னா நாற்பது-இனியவை நாற்பது அம்சவேணி பெரியண்ணன் உரை ❐ அம்சவேணி பெரியண்ணன் ❐ பதிப்பு 2019 ❐ பக்கங்கள்: 112 ❐ வெளியீடு: வனிதா பதிப்பகம், எண். 11, நானா தெரு, தி.நகர், சென்னை-17. ❐தொலைபேசி:42070663 ❐ ஒளி அச்சு: லதா கம்பியூட்டர், சென்னை. ❐ அச்சிட்டோர்: பத்மாவதி ஆப்செட், சென்னை.

விலை: ரூ.100.00

பதிப்பாளர்: டாக்டர். பெ. மயிலவேலன்,

M.Sc., M.Ed., M.Phil., Ph.D.

எச்சரிக்கை

காப்பிரைட் சட்டத்தின்கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர். பெ. மயிலவேலன், M.Sc., M.Ed., M.Phil., Ph.D.,

Copyright Warning: No part of this book may be reproduce or transmitted in any form or by any means electronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieval system without permission in writing from **Dr. P. MAILAVELAN, M.Sc., M.Ed., M.Phil., Ph.D., Chennai.** Any violations of these conditions, legal action will be initiated in civil and criminal proceedings under the Copyright Act 1957.

ENNA NARPADHU - ENIYAVAI NARPADHU HAMSAVENI PERIANNAN URAI ❐ HAMSAVENI PERIANNAN ❐ Edition: 2019 ❐ Pages: 112 ❐ Published by: Vanitha Pathippagam, No.11, Nana Street, Pondy Bazaar, T.Nagar, Chennai-17 ❐ Phone: 42070663 ❐ Typeset: Latha Computer, Chennai ❐ Printed at: Padmavathi Offset, Chennai.

Price: **Rs. 100.00**

Publisher: Dr. P. MAILAVELAN,

M.Sc., M.Ed., M.Phil., Ph.D.

பதிப்புரை

இரண்டு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை பாடப் பெற்றவை கீழ்க்கணக்கு நூல்களாகும்.

கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்துமே வெண்பாக்கள். குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா; நேரிசை வெண்பா; இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பாக்களால் யாக்கப் பெற்றவை.

> "நாலடி நான்மணி நால்நாற்ப தைந்திணைமுப்
> பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
> இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பவே
> கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு."

கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு

1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இன்னா நாற்பது, 4. இனியவை நாற்பது, 5. கார்நாற்பது, 6. களவழி நாற்பது, 7. அய்ந்திணை அய்ம்பது, 8. அந்திணை எழுபது, 9. திணைமொழி அய்ம்பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. கைந்நிலை (இன்னிலை), 12. திருக்குறள், 13. திரிகடுகம், 14. ஆசாரக்கோவை, 15. பழமொழி நானூறு, 16. சிறுபஞ்சமூலம், 17. முதுமொழிக் காஞ்சி, 18. ஏலாதி ஆகியவை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். இதில் திருக்குறள் முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். திருக்குறளுக்கு முப்பால் என்ற பெயர்தான் அப்பொழுது வழங்கப் பெற்றன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இன்னா நாற்பது - இனியவை நாற்பது என்னும் நூல் மிகவும் எளிமையாகவும், இனிமையாகவும் அம்சவேணி பெரியண்ணன் அவர்கள் உரை எழுதி யுள்ளார். இவர் தமிழகத்தின் முதல் பெண் பதிப்பாளராக 3000க்கும் மேற்பட்ட நூல்களை பதிப்பித்துள்ளார்.

இந்நூல் கடல் நீரை வடிக்கட்டி குவளையில் கொடுக்கப் பெற்றுள்ளது. கரும்பைக் கசக்கிப் பிழிந்து வெல்லக் கட்டியாக்கித் தரப்பெற்றுள்ளது. சுவைப்பீர்! பயன் பெறுவீர்!!

இன்னா நாற்பது

விளக்கவுரை

கடவுள் வாழ்த்து

முக்கண் பகவன் அடிதொழா தார்க்கின்னா
பொற்பனை வெள்ளையை உள்ளா(து) ஒழுகின்னா
சக்கரத்தானை மறப்பின்னா ஆங்கின்னா
சத்தியான் தாள்தொழா தார்க்கு.

விளக்கவுரை

மூன்று கண்களையுடைய சிவபெருமானின் திருவடியை வணங்குவதே இன்பமாகும். அவ்வாறு தொழாதவர்கள் துன்பம் அடைவர். கலைமகளின் துணைவரான பிரம்ம தேவரை வணங்கவேண்டும். கையில் சங்கு சக்கரத்தை ஏந்திய திருமாலை வணங்க வேண்டும். இவர்களை வணங்காவிடில், துன்பம் நேரும். இப்பொருளில் இக்கடவுள் வாழ்த்து உள்ளது.

இன்னா நாற்பது என்ற நீதி நூலைத் தொடங்குவதற்கு முன், ஆசிரியர் கடவுள் வாழ்த்தை வழங்குகிறார். மூன்று கண்களையுடைய சிவபெருமானின் திருவடியை வணங்குவது இன்பம். அவ்வாறு வணங்காதவர்கள் துன்பம் அடைவர் என்று கூறப் பட்டது. முழுமுதற் பொருளாகிய சிவபெருமானை, மதிக்கத் தவறிய தட்சன் என்பவன் அழிக்கப்பட்டான். ஆகவே, கருணைக் கடலாகிய சிவபெருமானை வணங்குவதே வாழ்வின் இன்பம் என்பதாகும். அதேபோல் கல்விக்கு அரசியாக விளங் கும் மகாசரஸ்வதியின் கணவரும், படைப்புத் தொழிலை செய்பவருமான பிரம்மதேவரை வணங்கவேண்டும். தீயவர்

களை அழித்து நல்லோரைக் காக்கும் சங்கு சக்கர தாரியான திருமாலை வணங்கவேண்டும் என்று கூறப்பட்டது. இந்த மும்மூர்த்திகளை மறந்தால் துன்பம் வரும். உலக நலனுக்காக முத்தொழிலை இயற்றும் இந்தத் தெய்வங்களை நன்றியுடனும், அன்புடனும் போற்றி வணங்க வேண்டியது நம் கடமையாகும். கடமையை யார் மறந்தாலும் அவர்கள் துன்பம் அடைவது உறுதி. ஆகவே, மும்மூர்த்திகளையும் தினசரி போற்றி, நாம் வணங்க வேண்டும். நல்ல செயல்களையே செய்ய வேண்டும். தீமைகளை விலக்க வேண்டும். எப்போதும் தெய்வ சிந்தனை யுடன் பணிகளைச் செய்ய வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

முக்கண் பகவன்-மூன்று கண்கள் உடைய சிவபெருமான். சக்கரத்தானை-திருமாலை. வெள்ளையை உள்ளாது-வெள்ளைத் தாமரையில் எழுந்தருளிய சரஸ்வதியின் கணவரை நினையாது.

❐ ❐ ❐

1. நூல்

பந்தமில் லாத மனையின் வனப்பின்னா
தந்தையில் லாத புதல்வன் அழகின்னா
அந்தணர் இல்லிருந்து ஊண்இன்னா ஆங்கின்னா
மந்திரம் வாயா விடின். 1

விளக்கவுரை

தன் சுற்றத்தார்களிடம் குற்றம் எதுவும் காணாமல் வாழும் வாழ்க்கையே சிறந்தது. அப்படிப்பட்ட உறவினர்கள் இல்லாத வாழ்க்கை துன்பம் தரும். தந்தையை நீங்கி மகன் வாழ்ந்தால் அவனுக்குத் துன்பம் உண்டாகும். அனைத்தையும் துறந்த துறவிகள் இருப்பிடம் சென்று உணவு உண்பது துன்பமாகும். ஏனெனில், அவர்கள் முற்றும் துறந்தவர்கள். அவர்கள் சிரமப்படக்கூடாது என்பதால் இப்படிச் சொல்லப் பட்டது. மந்திரங்களின் உச்சரிப்புப்படி ஒழுக்கங்களை கடைப்பிடிக்க வண்டும். இல்லாவிடில் மந்திரத்தால் பயன் விளையாது. இப்பொருளில்இப்பாடல் அமைந்துள்ளது. குற்றம் பார்க்கின் சுற்றமில்லை. ஆகவே, சுற்றத்தாரிடம் குற்றத்தைக் காணாமல் குணத்தையே கொள்ள வேண்டும். முடிந்த அளவுக்கு அவர்களுக்கு உதவிகள் செய்து கொண்டே இருக்க வேண்டும். தானாக உறவினர்கள் நல்வழிக்குத் திரும்பு வார்கள். அப்படிப்பட்ட வாழ்க்கையே சிறந்தது என்பதாகும். தந்தையை நீங்கி மகன் வாழ்ந்தால் அவன் துன்பமுறுவான். தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்று அதனால்தான் சொல்லப்பட்டிருக்கிறது. மகன் தந்தையை விட்டு நீங்கியிருக் கிறான் என்று தெரிந்தால், மற்ற சுற்றத்தினர் அந்த மகனை அவமதிப்பார்கள். பல சங்கடங்கள் வரும். ஆனால், தந்தை நல்லவராக இருக்க வேண்டும் என்பது அவசியம். அதேசமயம் தந்தையிடம் சிறுசிறு குறைகள் இருந்தபோதும், மகன்

அதைப் பொருட்படுத்தாமல் அவரை அனுசரித்து வாழ வேண்டும் அதுவே பெருமை என்பதாகும். அனைத்தையும் துறந்த துறவிகளின் இருப்பிடம் சென்று, உணவு உண்பது துன்பம் என்று கூறப்பட்டது. அனைத்தையும் துறந்த துறவி களிடம் செல்வவளம் இருக்காது. உணவுகூட போதுமான தாக இருக்காது. அப்படிப்பட்ட நிலையில் அவர்களுக்குச் சிரமம் தரக்கூடாது என்பதாகும். மந்திரங்கள் சரியாக உச்சரிக்கப்பட வேண்டும். உச்சரிப்பவர் தூய்மையுடையவ ராக இருக்க வேண்டும். அப்போதுதான் அது பலிதமாகும். இல்லாவிடில் பலன் இல்லை என்பது கருத்து.

அ.பொ.

பந்தமில்லாத-சுற்றமில்லாத. தந்தையில்லாத புதல்வன்-தந்தையிடம் நீங்கி வாழும் மகன்.

பார்ப்பாரில் கோழியும் நாயும் புகலின்னா
ஆர்த்த மனைவி அடங்காமை நன்கின்னா
பாத்தில் புடைவை யுடையின்னா ஆங்கின்னா
காப்பாற்றா வேந்தன் உலகு. 2

விளக்கவுரை

அந்தணர்கள் மாமிசம் புசிக்காதவர்கள். அவர்கள் வீட்டுக்குள் கோழி, நாய் செல்ல அனுமதிக்கக்கூடாது. ஆசாரம் கெட்டு, துன்பம் அடையும்படி செய்யக்கூடாது. கணவனுக்கு அடங்காத மனைவி துன்பத்தைக் கொடுப்பாள். ஒரே ஆடையை வைத்துக் கொண்டு, அதனைச் சலவை செய்யாமல் தொடர்ந்து அதையே பயன்படுத்துவது துன்பம் தருவதாகும். குடிமக்களின் நலன் கருதாமல் மன்னன் கொடுங்கோலனாக இருந்தால், அந்த நாடு துன்பத்தைச் சந்திக்கும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. அந்தணர்கள் என்று கூறப்பெறும் சுத்தமானவர்கள் மாமிசம் புசிக்க மாட்டார்களே! அவர்கள் வீட்டில் கோழி, நாய் போன்றவை செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய ஆசாரம் கெட்டு துன்பம் அடையும்படி செய்யக்கூடாது

என்பது கருத்து. கணவனுக்கு அடங்காத மனைவி துன்பத்தைக் கொடுப்பாள். நமது கலாசாரத்தின்படி கணவனுக்குக் கட்டுப்பட்டு வாழும் கற்புக்கரசிகள் தெய்வத்திற்குச் சமமானவர்கள் என்று போற்றப்படுகிறார்கள். மும்மூர்த்திகளையே ஒரு கற்புக்கரசி குழந்தைகளாக்கிய புராண வரலாறு நமக்குத் தெரியும். சத்தியவான் உயிரை எமனிடமிருந்தே மீட்டாள் கற்புக்கரசி சாவித்திரி. கொடுமையான நோய் பற்றியிருந்த தன் கணவனைக் கூடையில் சுமந்து பாதுகாத்தாள் நளாயினி. இப்படிப்பட்ட கற்புக்கரசிகளை இன்றுவரை நாம் போற்றி வணங்குகிறோம். ஆனால், கணவனுக்குக் கட்டுப்படாத மனைவியர் தங்கள் கணவனக்குத் துன்பத்தையே தருவார்கள். அடங்காத மனைவி குடும்ப வாழ்க்கைக்கு அருகதையற்றவள். அவளால் மகாலட்சுமி வருத்தமடைந்து விலகுவாள். கலைமகளும் நீங்குவாள். அதனால், கணவன் பல்வேறு துன்பங்களை அடைவான் என்பது பொருளாகும். ஒரே ஆடையை வைத்துக் கொண்டு அதனைச் சலவை செய்யாமல் அதையே பயன்படுத்துவது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. கந்தையானாலும் கசக்கிக்கட்ட வேண்டும். அழுக்கு உடை, அழுக்கு உடல் ஆகியவை உடல் நலத்திற்குக் கேடு. மனநலத்திற்குக்கேடு என்பதை அறியவேண்டும். மன்னன் கொடுங்கோலனாக இருந்தால் மழைபொழியாது. அதனால் குடிமக்கள் மிகவும் துன்பம் அடைவார்கள் என்பது கருத்து.

அ.பொ.

பார்ப்பாரில்-அந்தணரின் வீட்டுக்குள். கோழியும், நாயும் புகலின்னா-கோழி, நாய் ஆகியவை நுழைந்தால் தீமை. அடங்கா-அடங்காத மனைவி.

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு. 3

விளக்கவுரை

கொடுங்கோல் ஆட்சிக்கு உட்பட்டு வாழ்வதைவிட, வேறு நாட்டிற்கு இடம் பெயர்ந்து செல்வதே நல்லது. இல்லாவிடில் துன்பம் தொடரும். வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது நீந்திச் செல்ல நினைக்கக்கூடாது. ஏதேனும் உபகரணம் கொண்டு கடக்க முயலவேண்டும். இல்லையேல் துன்பம் வரும். நண்பர்கள் கூடும்போது இனிய சொற்களையே சொல்ல வேண்டும். கடுமையான சொற்களைக் கூறுதல் துன்பத்தைத் தரும். மக்கள் எல்லா விஷயங்களிலும் தெளிவுடன் இருக்க வேண்டும். தடுமாற்றம் இருந்தால் துன்பமே வரும். இப் பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. கொடுங்கோல் ஆட்சிக்கு உட்பட்டு வாழ்வதை விட, வேறு நாட்டிற்கு இடம் பெயர்ந்து செல்வது நல்லது என்று கூறப்பட்டது. கொடுங் கோல் மன்னன் அதர்ம வழிகளில் செல்வான். அதற்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தால், அந்தப் பாவம் குடிமக் களையும் சாரும். மன்னனை எதிர்த்து மக்கள் திருந்தவேண்டும். இயலாவிடில் நாட்டை விட்டு வெளியேறுவதே சிறந்தது என்பதாகும். வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது நீந்திச் செல்லக்கூடாது. ஏதேனும் உபகரணத்தை உபயோகப்படுத்தி பாதுகாப்பாக மீளவேண்டும் என்று சொல்லப்பட்டது. வெள்ளப் பெருக்கில் நீந்தினால் வழியில் பாறைகளில் மோத நேரலாம். அல்லது ஏதேனும் இரும்புக் கம்பிகளில் சிக்க நேரலாம். அல்லது ஏதேனும் விஷக்கடிகளுக்கு உள்ளாகலாம். ஆகவே, படகு போன்ற உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது பொருளாகும். நண்பர்கள் கூடும்போது எப்போதும் இனிமையான மொழிகளையே பேசவேண்டும். கடுமையான சொற்கள் நட்பைக் கெடுக்கும் என்பதாகும். எல்லா விஷயங்களிலும் மக்கள் தெளிவுடன் இருக்கவேண்டும். தடுமாற்றம் இருந்தால் துன்பம்வரும் என்று சொல்லப்பட்டது. குடும்பப் பிரச்சனையாக இருந்தாலும் சரி, வியாபாரமாக இருந்தாலும் சரி, திருமணம் சம்பந்தமாக முடிவு எடுப்பதானாலும் சரி, நன்கு ஆராய்ந்து தெளிந்த மனத்துடன் முடிவு

செய்ய வேண்டும். தடுமாற்றம் இருந்தால் எந்தக் காரியத்தை யும் வெற்றிகரமாக நடத்த முடியாது என்பதாகும்.

அ.பொ.

கொடுங்கோல்-கொடுங்கோல் மன்னன். கீழ்வாழ்தல் இன்னா- அவன் ஆட்சியில் வாழ்வது துன்பம். நெடுநீர்-வெள்ளம் ஏறபட்டும் காலத்தில்.

எருதில் உழவர்க்கு போ(கு) ஈரம் இன்னா
கருவிகள் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா
திருவுடை யாரைச் செறலின்னா; இன்னா
பெருவலியார்க் கின்னா செயல். 4

விளக்கவுரை

உழவுத் தொழில் செய்வோர்க்கு எருவைப்பது அவசியம். ஆகவே, எருதுகளை வளர்த்தால் நன்மை வரும். உரம் வைக்காமல் உழவு செய்தால் துன்பம் தரும். யுத்த களத்தில் படைகள் வீரத்துடன் முன் செல்ல வேண்டும். புறம்காட்டி ஓடினால், துன்பமும் தோல்வியும்தான் வரும். செல்வ வலிமை படைத்தவர்களிடம் கோபத்தைக் காட்டினால் அவர்களால் துன்பம் வரும். செல்வர்கள் அயோக்கியர் களாக இருந்தால், சாதுரியமான வழிகளைக் கையாண்டு வெல்ல வேண்டும். கோபப்பட்டு தகாத செயல்களைச் செய்தால் அவர்களால் துன்பமே வரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. உழவுத் தொழில் செய்யும்போது எரு இடவேண்டும். அப்போதுதான் பயிர் வளமாக விளையும். ஆகவே, எருதுகள் வளர்ப்பது உழவுத் தொழிலுக்கு அவசிய மாகும். எரு என்பது உடலுக்கு உணவு வலுசேர்ப்பது போல, பயிருக்கு வலிமை சேர்ப்பதாகும். எரு இடாமல் பயிர் செய்தால் விளைச்சல் குறையும். நஷ்டம் ஏற்படும் என்பது கருத்து. யுத்தம் வரும்போது படைவீரர்கள் வீரத்துடன் முன்னேறிச் செல்லவேண்டும். பயந்து பின்வாங்கினால், தோல்வியும் துன்பமும்தான் வரும். படை சிறியதாக இருந் தாலும் ஊக்கமுள்ள படை வெற்றியடைய முடியும். படை

பலம் அதிகம் இருந்தாலும், உற்சாகமின்றி போர் செய்தால் தோல்வி ஏற்படும் என்பது பொருளாகும். செல்வவளம் உள்ளவர்களிடம் கோபத்தைக் காட்டினால், அவர்களால் துன்பம் வரும் என்று கூறப்பட்டது. அதாவது, பணத்தை இறைத்து, பொய் சாட்சிகளை அமைத்து, இன்னும் பல வழிகளில் துன்பம் தருவார்கள். செல்வம் படைத்தவர்களைப் புத்தி சாதுரியத்தால் வெல்ல முடியும். அறிவுக் கூர்மைக்கு முன்னால், செல்வ பலம் செயலிழக்கும் என்பதை மறக்கக்கூடாது. கோபப்பட்டு செயல்களைச் செய்தால் வெற்றியடைய முடியாது. நம்மிடம் நியாயம் இருந்தாலும் சாதுரியமான வழிகளில் நியாயத்தை நிலைநிறுத்த வேண்டும் என்று இன்னா நாற்பது கூறுகிறது.

அ.பொ.

எருதில்-எருஇடாமல். உழவர்க்கு-உழவு செய்தல். இன்னா-துன்பம் வரும். பெருவலியார்க் கின்னா செயல் இன்னா-வலிமை உடையவர்க்கு கெடுதல் செய்தால் துன்பம் வரும்.

சிறையில் கரும்பினைக் காத்தோம்பல் இன்னா
உறைசோர் பழங்கூரை சேர்ந்தொழுகல் இன்னா
முறையின்றி ஆளும் அரசின்னா இன்னா
மறையின்றிச் செய்யும் வினை. *5*

விளக்கவுரை

வேலியிடாமல் கரும்பை நட்டு வைத்தால், பாதுகாப்பு இல்லாமல் அது அழியும். மழை பெய்யும் முன்பே வீட்டுக் கூரையைச் சரி செய்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் வீட்டுக்குள்ளே மழை நுழைந்து பெரிய துன்பம் தரும். நாட்டை ஆளும் மன்னன் நீதி தவறாமல் ஆளவேண்டும். இல்லாவிடில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அவப் பெயர் ஏற்பட்டு அரியணைப் பறிபோகும். மன்னன் எந்த விஷயமாக இருந்தாலும், அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும். தன்னிச்சையாக செயல்பட்டால் துன்பம் வரும். இப்பொருளில் இப்பாடல்

அமைந்துள்ளது. வேலியின்றி கரும்பை நட்டால், அது அழியும். மழை பொழியும் முன்பே வீட்டுக் கூரையைச் சரி செய்து கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. அழிவதற்கு முன்பே கரும்புப் பயிருக்கு வேலியிடவேண்டும். மழை பொழியும் முன்பே வீட்டுக் கூரையைச் செப்பனிட்டால்தான் துன்பமின்றிக் குடியிருக்க முடியும். எதையும் காலம் கடந்து செய்யக் கூடாது. வீடாக இருந்தாலும், வயலாக இருந்தாலும் பாதுகாப்புதான் கவசம் போல் இருந்து, நமக்கு நன்மை விளைவிக்கும் என்பது பொருளாகும். நாட்டை ஆளும் மன்னன் நீதிமானாக இல்லாவிட்டால் அரியணை பறிபோகும் என்று கூறப்பட்டது. நீதிதான் மன்னனைக் காக்கிறது. நீதி தவறினால் குடிமக்கள் மன்னனை வெறுப்பார்கள். இதை அறிந்து பகை அரசர்கள் எளிதில் யுத்தம் செய்து நாட்டைக் கைப்பற்றுவார்கள். நீதியும் நேர்மையும் உள்ள மனிதன் தோல்வி காணமாட்டான் என்பது கருத்து. எந்த விஷயமாக இருந்தாலும் மதிநுட்பம் வாய்ந்த அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்து, மன்னன் முடிவு செய்ய வேண்டும். ஏனெனில், அனுபவசாலிகளான அமைச்சர்கள் வரப்போவது என்ன? என்பதை முன்கூட்டியே அறிந்திருப்பார்கள். மன்னனைவிட ஆற்றல் உள்ளவர்களாக இருப்பார்கள். ஆகவே, மன்னன் தன்னிச்சையாகச் செயல்படாமல் அமைச்சர்களுடன் தீவிரமாகக் கலந்து ஆலோசித்து முடிவுகளை எடுப்பது சிறந்ததாகும்.

அ.பொ.

சிறையில்-பாதுகாப்பின்றி. கரும்பினைக் காத்தோம்பல்-கரும்பை நட்டு வைத்தால். முறையின்றி ஆளும் அரசின்னா-நிர்வாகத் திறமை இல்லாத அரசனால் துன்பம் வரும்.

அறமனத்தார் கூறும் கடுமொழியு இன்னா
மறமனத்தார் ஞாட்பில் மடிந்தொழுகல் இன்னா
இடும்பை யுடையார் கொடையின்னா இன்னா
கொடும்பா(டு) உடையார்வாய்ச் சொல். 6

விளக்கவுரை

அறம் செய்யும் சான்றோர்கள் மனம் புண்படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் மனம் நொந்து ஏதேனும் பேசினால், அது பலிக்கும். அந்தத் துன்பத்தைத் தவிர்ப்பது நல்லது. வீரம் உடலில் மட்டுமல்ல. உள்ளத்திலும் வேண்டும். இரண்டும் இருந்தாலும் சோம்பலை விலக்க வேண்டும். அவ்வாறு விலக்காவிடில், துன்பம்வரும்; வறுமையில் இருப்ப வர்கள் செல்வர்களைப் போல் வழங்க வேண்டும் என்பது நினைப்பது துன்பம் தரும். நடுநிலையுடன் பேசவேண்டும். வாயில் வந்ததை யெல்லாம் பேசினால் துன்பம் வரும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. அறம் செய்யும் சான்றோர்களின் மனம் புண்படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் மனம் நொந்து சாபமிட்டால் பலித்து விடும். ஆகவே, அத்தகைய சான்றோர்களைப் போற்றி மகிழ்ச்சியுடன் உரையாடவேண்டும். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்பது கருத்து. வீரம் உடலில் இருந்தால் மட்டும் போதாது. உள்ளத்திலும் இருக்க வேண்டும். இரண்டும் இருந்தபோதும் சோம்பல் கூடாது என்று கூறப்பட்டது. சோம்மல் என்பது தமஸ்குணத்தின் அடையாளம். தமஸ்குணம் மனிதனை அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடியது. எல்லா வலிமை இருந்தும் சோம்பேறியாக இருப்பவன், எந்த நல்ல செயலையும் செய்ய முடியாது. சுறுசுறுப்புதான் மனிதனின் வலிமை. அதைப் பாதுகாத்து செயலில் காட்டுபவனே எல்லாத்துறைகளிலும் வெற்றி பெறுவான் என்பது பொருளாகும். செல்வர்களைப் போல் நாமும் வழங்கவேண்டும் என்று, செல்வம் இல்லாத வர்கள் நினைத்தால் துன்பம் வரும். கௌரவத்திற்காகத் தானம் செய்தால் இருக்கும் வாழ்க்கைகே நெருக்கடி வரும் என்பது பொருள். எந்த விஷயத்திலும் நடுநிலையுடன் பேசவேண்டும். வாய்க்கு வந்ததை உளறினால் பலரால் குற்றம் சுமத்தப்பட்டுத் துன்பம் அடையநேரும். எந்த நிலையிலும் நீதியின் பக்கமே இருந்து நடுநிலையுடன் பேசினால் எல்லோ ரும் பாராட்டுவார்கள் என்பது பொருள்.

அ.பொ.

அறமனத்தார்-அறச்சிந்தனையுள்ள சான்றோர். மறமனத்தார்-அறச்சிந்தனை இல்லாத கீழோர்.

ஆற்றல் இலாதான் பிடித்த படையின்னா
நாற்றம் இலாத மலரின் அழகின்னா
தேற்றம் இலாதான் துணிவின்னா ஆங்கின்னா
மாற்றம் அறியான் உரை. 7

விளக்கவுரை

ஆண்மையில்லாதவன் யுத்த களத்தில் இறங்கினால், மிகப் பெரிய துன்பமாகிவிடும். ஒரு பூ அழகாய் இருந்து, மணம் இல்லாவிடில் துன்பமாகும். தெளிந்த அறிவில்லாமல் செயலில் இறங்கினால் துன்பம் வரும். பேசும் சொற்களில் பொருள் இல்லாவிடில் துன்பம் தரும். இப்பொருளில் இப் பாடல் அமைந்துள்ளது. ஆண்மை இல்லாதவன் யுத்த களத்தில் இறங்கினால், மிகப் பெரிய துன்பமாகி விடும் என்று கூறப் பட்டது. ஆண்மை என்பது துணிவு என்று பொருள்படும். துணிவும், வீரமும்தான் வெற்றிக்கு அடிப்படை. இந்த இரண்டும் இல்லாத ஒரு கோழை யுத்த களத்தில் இறங்கினால் உயிரை இழப்பான் என்பது கருத்து. ஒரு பூ அழகாய் இருந்து மணம் இல்லை யெனில், துன்பம் என்று கூறப்பட்டது. அழகு மட்டும் பூக்களுக்குப் பெருமை இல்லை. நல்ல மணமும் கலந்தால்தான் இன்பம். மணம் இல்லையென்றால் அது மலர் அல்ல. காதிதப் பூ என்று தான் சொல்ல வேண்டும். தெளிந்த அறிவில்லாமல் செயலில் இறங்கக் கூடாது. எதிரியின் பலம், பலவீனம், நம்முடைய பலம், பலவீனம் எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். முடிவில் நம் பலம் அதிகம் என்று அறிந்தால், அந்தச் செயலில் ஈடுபடவேண்டும். நம் பலம் குறைவாக இருந்தால் அந்தச் செயலில் இறங்கக் கூடாது. இதைக் கடைப்பிடிக்காவிட்டால் தோல்வி, பொருள் நஷ்டம், மனக்கஷ்டம் ஆகியவை வரும் என்பது கருத்து. பேசும் சொற்களில் பொருள் இல்லாமல் வள, வளவென்று பேசுவது துன்பம் தரும். காய்ந்த பனை ஓலைகள் சலசலக்கும். அவை கீழே

விழப்போவதை அறிவிக்கின்றன. பச்சை ஓலை அவ்வாறு சலசலக்காது அமைதியாக இருக்கும். அதேபோல் நாம் அமைதியுடன் சிந்தித்து, பொருள் நிறைந்த சொற்களையே கூறவேண்டும். அதுவே அறிவாற்றல் என்பது கருத்து.

அ.பொ.

ஆற்றல் இலாதான்-வலிமை இல்லாதவன். பிடித்த படை-பிரித்த ஆயுதம். நாற்றம் இல்லாத மலர்-மணம் இல்லாத மலர். மாற்றம் அறியான் உரை-பொருள் இல்லாத பேச்சு.

பகல்போலும் நெஞ்சத்தார் பண்பின்மை இன்னா
நகையாய நண்பினார் நாரின்மை இன்னா
இகலின் எழுந்தவர் ஓட்டின்னா இன்னா
நயமில் மனத்தவர் நட்பு. *8*

விளக்கவுரை

நடுநிலையாளர்கள் சூரியனைப் போல, வேண்டியவர் வேண்டாதவர் பாகுபாடு பார்க்கக்கூடாது. அப்படிப் பாகுபாடு பார்த்தால் துன்பம் தரும். முகத்தில் அன்பு கொண்டு, உள்ளத்தில் வஞ்சனையுடன் இருப்பவர்களை நம்பினால் துன்பமே வரும். யுத்த களத்தில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள பின் வாங்குதல் துன்பமாகும். நீதி, தருமம் இல்லாதவர்களின் நட்பு துன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. நடுநிலையாளர்கள் சூரியனைப் போல, வேண்டியவர், வேண்டாதவர் என்கிற பாகுபாடு பார்க்கக்கூடாது என்று சொல்லப்பட்டது. சூரியன் நல்லவர், கெட்டவர், ஞானி, அஞ்ஞானி, திருடன், பறவைகள், மிருகங்கள் என்ற எந்த வித்தியாசமும் பார்க்காமல், தன் கதிர்களை வீசுகிறான். இந்த எல்லா உயிர்களும் ஒரு நியதிக்குட்பட்டு செயல்படுகின்றன. இறைவன் நடத்தும் விளையாட்டு என்பதால், கதிரவன் எல்லோர் மீதும்பட்டு வாழவைக்கிறான். அதேபோல் நாமும் இந்த மண்ணுலகில் வாழும் உயிர்களிடத்தில் வேறுபாடு காட்டக்கூடாது. வேண்டியவர், வேண்டாதவர் என்பதை நினைக்காமல்,

நீதியையே கூறவேண்டும். நியாயத்தையே நிலைநிறுத்த வேண்டும். தவறு செய்தவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்கள் போர்வையில் இருந்தாலும், தயங்காமல் குறைகளைக் கூறவேண்டும். ஒருவர் அறியாமை நிறைந்தவராக இருப்பதால், அவர் மீது வீண்பழி சுமத்திக் குற்றவாளியாக்கக் கூடாது. அப்படிச் செய்தால் பல துன்பங்களைச் சந்திக்க வேண்டி யிருக்கும். இறைவனின் நீதி மாறாது. அது தீர்ப்பு வழங்கும் என்பதை மறக்கக் கூடாது. முகத்தில் அன்பும் உள்ளத்தில் வஞ்சகமும் வைத்துப் பேசுபவர்களை அடையாளம், கண்டு நீக்க வேண்டும். உடன் இருந்தே கொல்லும் அந்த நச்சுத் தன்மை வாய்ந்தவர்களால், நன்மை வராது, தீமையே விளையும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். யுத்த களத்தில் உயிருக்குப் பயந்து புறமுதுகிட்டு பின்வாங்குதல் துன்பம் தரும். கோழை என்று மற்றவர்களால் இகழப்பட்டு வாழ்வதைவிட, வீரனாக உயிரை விடுபவர்களையே இந்த உலகம் மதிக்கும் என்பது பொருளாகும்.

அ.பொ.

பகல் போலும்-சூரியன் போல். நகையாய நண்பினார்-முகத்தில் மட்டும் மலர்ச்சி கொள்ளுதல். நயமில்-நன்மையில்லாத.

கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா
வள்ளல்கள் இன்மை பரிசிலர்க்கு முன்இன்னா
வண்மை யிலாளர் வனப்பின்னா ஆங்கின்னா
பண்ணில் புரவி பரிப்பு. 9

விளக்கவுரை

கள் குடிக்காதவர்கள், கள் குடியர்கள் நிறைந்த ஊரில் சென்று தங்க நேர்ந்தால், அக்குடிகார்களைப் பார்ப்பதால் துன்பம் வரும். வள்ளல்கள் இல்லாத ஊருக்கு ஏழை எளியவர்கள் பொருள் வாங்கச் சென்றால் துன்பம் வரும். தோற்றத்தில் அழகாய் இருப்பவர் உதவி செய்யும் எண்ணம் இல்லாதவனாய் இருந்தால் அவரால் பயன் இல்லை. துன்பமே வரும். குதிரை சவாரி செய்பவர் தொடர்ந்து

பயணம் செய்ய முடியாது. தங்கிச் செல்ல வேண்டும். அதற்கான ஏற்பாடுகளுடன் செல்லலாவிடில் துன்பம் வரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. கள் குடிக்காதவர்கள், கள் குடித்தவர்கள் நிறைந்த ஊரில் சென்று தங்க நேர்ந்தால், அக்குடிகாரர்களைப் பார்ப்பதால் துன்பம் நேரும் என்று கூறப்பட்டது. குடிக்காதவர்கள் நேர்மையாகப் பேசுவார்கள். குடிகாரர்கள் தாறுமாறாகப் பேசுவார்கள்; உண்மையை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, கள் குடிக்காதவர் களுக்கு வெறுப்பும், துன்பமும் வரும் என்பது பொருளாகும். வள்ளல்கள் இல்லாத ஊருக்குச் சென்று வறியவர்கள் பொருள் பெறவிரும்பினால் துன்பம் வரும். செல்வம் இருந்தும் கொடுக்க மனமில்லாத கருமிகள் வாழும் ஊரில், ஏழைகளுக்கு உதவி கிடைக்காது. ஆகவே, அக்கருமிகள் வாழும் இடத்திற்கு ஏழைகள் செல்லக் கூடாது. அப்படிச் சென்றால் ஏமாற்றமும், துன்பமுமே மிஞ்சும் என்பது கருத்து. சிலபேர் தோற்றத்தில் அழகாக இருப்பவர்கள். ஆனால் குணத்தில் அழகு இருக்காது. எவருக்கும் உதவி செய்ய மாட்டார்கள். அவர்களால் யாருக்கும் எந்தப் பலனும் இருக்காது. வெளி அழகால் பயனில்லை. உள்ளழக்காகிய சிறந்த குணம் மிக்கவரே உண்மையான அழகுள்ளவர் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். குதிரை சவாரி செய்பவர்கள் தொடர்ந்து பயணம் செய்ய முடியாது; தங்கிச் செல்ல வேண்டும். அப்போதுதான் பயணம் இனிமையாக அமையும். ஆகவே, தங்கிச் செல்வதற்கான முன்னேற்பாடு களுடன் செல்ல வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

கள்ளில்லா மூதூர்-கள் இல்லாத ஊர். வள்ளல்கள் இன்மை-கொடையாளர்கள் இல்லாதிருத்தல்.

பொருளுணர்வார் இல்வழி பாட்டுரைத்தல் இன்னா
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக்(கு) இன்னா
அருளில்லார் தங்கண் செலவின்னா இன்னா
பொருளில்லார் வண்மை புரிவு. *10*

விளக்கவுரை

பாடலின் பொருள் உணர்ந்து, அவற்றின் திறத்தை வியந்து கூறும் அறிவுள்ளவர்கள் இல்லாத இடத்தில், பாட்டை எழுதி, பொருள் கூறமுடியாது. இரவு நேரத்தில் தனியாகச் சிறு வழிகளில் சென்று வருவதைத் தவிர்க்க வேண்டும். தவிர்க்காவிடில் பாதுகாப்பு இன்றித் துன்பம் வரும். அருள் குணம் இல்லாதவர்களிடம் வறியவர்கள் பொருள் கேட்டால் துன்பம் தரும். வறுமையில் வாடக்கூடிய வர்கள், செல்வந்தர்கள் பிறருக்கு வழங்குவதைக் கண்டு தானும் அவ்வாறு செய்ய ஆசை கொண்டால் துன்பம் வரும். இப்பொருளில் இப்பாடல் உளளது. பாட்டின் பொருள் அறிந்து கூறும் அறிவுள்ளவர்கள் இல்லாத இடத்தில், பாட்டை எழுதிப் பொருள் கூறமுடியாது என்று கூறப்பட்டது. ஏனெனில், நாம் கூறும் அப்பொருளைப் புரிந்து கொள்ளும் திறன் இல்லாதவர்கள் அதைப் பாராட்ட முடியாது. ஆகவே, பாடலின் தரத்தை அறியாதவர்களிடம் பாடலை எழுதிப் பொருள் கூறுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதாம். இரவு நேரத்தில் தனியாகச் சிறுவழிகளில் சென்று வருவதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறப்பட்டது. இரவு நேரத்தில் சிறுவழிகளில் செல்வதால் விஷ ஜந்துகளால் ஆபத்து வரலாம். அல்லது சமூக விரோதிகளால் துன்பம் வரலாம். வழிமாறிச் செல்லவும் நேரலாம். ஆகவே, இரவு நேரத்தில் தனியாகச் செல்வதைத் தவிர்ப்பது நல்லது. அருள் குணம் இல்லாதவர்கள் வறியவர்களை ஏளனமாகப் பேசுவார்கள். அவமானம் அடையும்படி செயல்களைச் செய்வார்கள். அத்தகைய தீயவர்களிடம் செல்வம் இருக்கலாம். இரக்க குணம் இருக்காது. விலங்குகளைவிட தாழ்ந்த தரம்தான் அவர்களிடம் இருக்கும். ஆகவே, வறியவர்கள் அவர்களிடம் சென்றால் துன்பம் வரும் என்பதாகும். செல்வந்தர்களைப் போல் நாமும் கொடை வழங்கலாம் என்று, இல்லாதவர்கள் விருப்பம் கொள்ளக்கூடாது. செல்வம் இல்லாதவன் கொடை செய்தால் அவன் குடும்பம் சிதையும். ஆகவே, அவ்வாறு நினைக்கக் கூடாது.

அ.பொ.

பொருள் உணர்வால் இல்-பாடலின் பொருளை அறியாதவர்கள் முன்பு. பாட்டுரைத்தல் இன்னா-பொருள் கூறுவது துன்பம் தரும். இருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக்கு இன்னா-இரவில் தனியாக பயணம் செய்வது துன்பம். அருளில்லார் தங்கண்-அருள் இல்லாதவர் களிடம் சென்று.

உடம்பாடு இலாத மனைவிதோள் இன்னா
இடனில் சிறியா ரோ(டு) யாத்த நண்(பு)இன்னா
இடங்கழி யாளர் தொடர்பின்னா இன்னா
கடனுடையார் காணப் புகல். 11

விளக்கவுரை

உள்ளப் பூர்வமாக அன்பில்லாத மனைவியிடம், உடல் ரீதியாகச் சேரநினைப்பது துன்பம் தரும். பொழுது போக்குக் காக மட்டும் பேசக்கூடிய மனப்பூர்வமான நட்பில்லாதவர் களிடம் நட்புக் கொண்டால் துன்பம் வரும். காமவேட்கை யுள்ளவர்களிடம் நட்பு கொண்டால் துன்பம் வரும். கடனை அடைக்காமல் கடன் கொடுத்தவரிடம் செல்வது துன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. உள்ளத்தில் அன்பில்லாத மனைவியிடம் உடல் ரீதியாக இணைய நினைப் பது துன்பம் என்று கூறப்பட்டது. மனைவியாக இருந்தாலும் கூட உள்ளத்தில் அன்பு இருந்தால்தான், உடல் ரீதியாக உறவு வைக்க வேண்டும் என்று இன்னா நாற்பது கூறுகிறது. உள்ளத்தில் அன்பு இல்லாத மனைவியால் கணவனுக்குப் பெருமை இல்லை. புகழ் இல்லை. ஆகவே, அவனுடன் உடல் ரீதியாக தொடர்பு வைக்காமல் இருப்பது நல்லதாகும். பொழுது போக்குக்காக மட்டும் பேசும் நண்பர்களிடம் நட்பை விலக்குவது நல்லது என்று கூறப்பட்டது. நட்பு என்பது பொழுதுபோக்குவதற்காக அல்ல. அறிவுபூர்வமான விஷயங்களைப் பேசி, ஆக்கபூர்வமான செயல்களைச் செய்வ தற்குத்தான். அப்படி யின்றி வெறும் பொழுது போக்குக்காக மட்டும் நட்பு கொள்கிறவர்களை விட்டு, நாம் நீங்கவேண்டும். இல்லாவிடில் நம் காலம் விரயமாகி விடும் என்பது கருத்து.

காம வேட்கை உள்ளவர்களிடம் நட்பு கொண்டால் துன்பம் வரும் என்று கூறப்பட்டது. காம வேட்கையுள்ளவர்கள் எப் போதும் பெண்களைப் பற்றியே பேசுவார்கள். அவர்களை அடைவது எப்படி? என்பதைப் பற்றியே சிந்தனையைச் செல விடுவார்கள். அவர்களுடன் நட்பு வைத்தால், நாமும் அந் நிலைக்குத் தள்ளப்படுவோம். ஆகவே, அத்தகையவர்களை விட்டு நீங்குவது நல்லதாகும். கடனை அடைக்காமல் கடன் கொடுத்தவரிடம் செல்வது துன்பம் என்று கூறப்பட்டது. கடன் கொடுத்தவரைக் கடன் பெற்றவர் பார்க்கும் போதெல் லாம் இன்னும் இவர் கடன் பாக்கியை அடைக்கவில்லையே என்று நினைப்பார். கடன் பெற்றவரும் தருமசங்கட சூழலி லேயே இருப்பார். எனவே, கடனை அடைத்துவிட்டுக் கடன் கொடுப்பவரைப் பார்ப்பதே சிறந்தது. மேலும் கடனை அடைத்தால்தான் திரும்பவும் அத்யாவசிய தேவைக்குத் திரும்பவும் கடன் பெறமுடியும். திருப்பிச் செலுத்துவதில் தாமதம் ஆனால், அடுத்த முறை கடன் கிடைப்பதும் அரிதாகி விடும். ஆகவே, கடனை அடைத்த பிறகு கடன் கொடுத்த வரைப் பார்க்கச் செல்வதே சிறந்தது.

அ.பொ.

உடம்பா டில்லா மனைவி-உள்ளன்பில்லாத மனைவி. தோள் இன்னா-தோளைத் தழுவுவது துன்பம். இடங்கழியாளர்-காமவெறி பிடித்தவர்கள். கடனுடையார் காணப் புகல்-கடனைத் திருப்பிக் கொடுக்காமல் கடன் கொடுத்தவரைக் காண்பது.

தலைதண்ட மாகச் சுரம்போதல் இன்னா
வலைசு மந்(து) உண்பான் பெருமிதம் இன்னா
புலையுள்ளி வாழ்தல் உயிர்க்கின்னா இன்னா
முலையில்லாள் பெண்மை விழைவு. 12

விளக்கவுரை

மனிதனின் உயிர் நாடி தலை. உடலிலிருந்து அந்தத் தலை அறுபட்டால் உயிர்போய்விடும். ஆகவே, இரவு நேரங்களில் காட்டுப் பாதையில் பாதுகாப்பின்றிச் செல்வது துன்பம் தரும். மீன்களைப் பிடித்து உண்ணும் இரக்க குணம்

இல்லாதவனிடம் நட்புக் கொள்வது துன்பம் தரும். இறைச்சி உணவு உண்பவர்களின் நட்பு துன்பம் தரும். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய பெண்களுக்குரிய குணங்கள் இல்லாத பெண்களை விரும்புவது, துன்பம் தரும். இரவு நேரங்களில் காட்டுப் பாதையில் சென்றால் தலை பறிபோகும் அபாயம் இருக்கிறது. மிருகங்களாலோ, திருடர்களாலே, ஆபத்து நேரும். ஆகவே, இரவு நேர காட்டுப் பயணத்தைத் தவிர்க்க வேண்டும் என்பது கருத்து. மீன்களைப் பிடித்துத் தின்னும் இரக்கமில்லாதவர்களிடம் நட்புக் கொள்வது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. பிற உயிர்களைக் கொல்கிறவர்கள் இரக்கமற்றவர்கள்தான். அத்தகையவர்கள் மற்றவரிடமும் இரக்கம் காட்டமாட்டார்கள். முரட்டுக்குணம் அவர்களிடம் இருக்கும். முரட்டு குணம் உள்ளவர்களை நல்வழியைக் கூறி திருத்துவது அரிது. ஆகவே, மீன்பிடித்துத் தின்பவர்களுடன் நட்பு வைப்பதை நீக்க வேண்டும் என்பதாகும். அதேபோல் இறைச்சி உணவு உண்பவர்களுக்கு இது பொருந்தும். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்கிற பெண்களுக்குரிய குணங்கள் இல்லாதவர்களை விரும்புவது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. நாணம் இல்லாத பெண்கள் ஒழுக்கக் கேடாகவும் நடக்கக் கூடும். அப்பெண்ணை விரும்பி மணம் முடிப்பவர்கள், தீராத துன்பத்தைச் சந்திக்க நேரும். தன் பெற்றோர்களை மதிக்காத பெண்ணாக.. குடும்பத்தைச் சரியாக நிர்வாகம் செய்யாத பெண்ணாக... தான் சொல்வதே சரியென்று வீம்பு பிடிக்கும் பெண்ணாக அவள் இருப்பாள். ஆகவே, மேலே கூறப்பட்ட குணங்கள் இல்லாத பெண்களை விரும்புவது மனக் கஷ்டத்தையும், குடும்பப் பெருமையையும் அழியச் செய்யும் செயலாகவும் இருக்கும். எனவே, அத்தகைய பெண்களை ஒருபோதும் விரும்பக்கூடாது என்பது பொருளாகும்.

அ.பொ.

தலைதண்டமாக-தலைபோகும். சுரம்போதல் இன்னா-இரவு வேளையில் செல்வது துன்பம் தரும்.

மணிலாக் குஞ்சரம் வேந்தூர்தல் இன்னா
துணிவில்லார் சொல்லுந் தறுகண்மை இன்னா
பணியாத மன்னர் பணிவின்னா இன்னா
பிணியன்னார் வாழும் மனை. 13

விளக்கவுரை

தன் தோளின் மீது மணியை அணியாத யானை மீது அரசன் ஏறிச் சென்றால், அது துன்பமாகும். கோழைகளுடன் கொள்ளும் நட்பு துன்பம் தரும். வீரமுள்ள மன்னர்கள், வீரமில்லாத மன்னர்களை வணங்குவது துன்பம் தரும். உட னிருந்தே நோய் போல் இருக்கும் மனைவியுடன் வாழ்வது துன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. தன் தோளின் மீது மணியை அணியாத யானை மீது அரசன் ஏறிச் சென்றால் துன்பம் வரும் என்று கூறப்பட்டது. யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே. என்று சொல்வார்கள். மணி ஓசை முன்னே ஒலித்தால்தான், அரசன் வருகிறான் என்பது மற்றவர்களுக்குத்தெரியும். அப்போதுதான் குடிமக்கள் மரியாதை தோரணையில் தயாராக இருக்க முடியும். திடீ ரென்று வந்தால் குடிமக்கள் தன்னை அவமதிப்பதாக அரசன் துன்பம் அடைய நேரும். குடிமக்களும் வருத்தப்பட நேரும். ஆகவே, தோள்மீது மணிகட்டியபடி அரசனின் யானை செல்ல வேண்டும் என்பதாகும். கோழைகளுடன் கொள்ளும் நட்பு துன்பம் தரும் என்று சொல்லப்பட்டது. எல்லாக் குற்றங்களிலும் பெரிய குற்றம் என்பது கோழைத் தளம்தான். தீயவனைக்கூட ஏற்றுக் கொள்ளலாம். கோழையை ஒருபோதும் ஏற்கக்கூடாது. ஒரு கோழையைப் பெற்றதாயும் விரும்புவதில்லை. கோழைத்தனம் கொண்டவர்கள் நம்மை யும் கோழைகளாக்கி விடுவார்கள். கோழை என்பவன் தினம், தினம் சாகிறான். வீரன் ஒருமுறை சாகிறான். வீரனை நோக்கித்தான் வெற்றி தேவதை பின் தொடர்கிறார்கள். திரு மகளும் அவனையே பின் தொடர்கிறார். மகா சரஸ்வதியும் அவனையே பின் தொடர்கிறார். இத்தகைய வீரர்களின் சகவாசமே நமக்கு வேண்டும். கோழைகளை நீக்குங்கள் அவர்களுடன் பேசுவதைத் தவிர்த்து விடுங்கள். கோழைகள்

இந்த பூமிக்குக் களங்கம் என்பதை அறியுங்கள். வீரமுள்ள மன்னர்கள், வீரமற்ற மன்னனை வணங்குவது துன்பம் தரும். வீரர்கள்தான் வணங்கப்படத்தக்கவர். வீரமில்லாதவர்களை வணங்கினால் வீரத்திற்கு இழுக்கு; துன்பத்திற்கு வித்து என்ப தாகும்.

அ.பொ.

மணியிலா-மணிகட்டாத. குஞ்சரம்-யானை. வேந்தூர்தல்-அரசன் செல்வது. இன்னா-துன்பம். துணிவில்லா சொல்லும் தறுகண்மை-வாய்ச்சொல் வீரர்கள்.

வணரொலி ஐம்பாலார் வஞ்சித்தல் இன்னா
துணர்தூங்கு மாவின் படுபழம் இன்னா
புணர்பாவை அன்னார் பிரிவின்னா இன்னா
உணர்வார் உணராக் கடை. *14*

விளக்கவுரை

தோற்றத்தில் அழகுள்ள பெண்கள், வீட்டில் கணவனைப் படாதபாடுபடுத்துவார்கள். அவர்களுடன் வாழும் வாழ்க்கை துன்பமாகும். மாங்கனி அருவருப்பான இடத்தில் விழுந்து, அதை எடுத்து உண்பது துன்பம் தரும். அன்புள்ள மனைவியைப் பிரிவது துன்பம் தரும். தன் நண்பர்களின் குற்றம் குறைகளை நீக்க முடியாவிட்டால் துன்பம் வரும். இப்பொருளில் இப் பாடல் உள்ளது. தோற்றத்தில் அழகுள்ள பெண்கள் கணவ னைப் படாதபாடுபடுத்துவார்கள். அதனால் அழகுள்ள பெண்கள் நல்குணங்கள் இல்லாத பெண்களாகவும் இருப்ப வர்கள். கெட்டகுணங்கள் காரணமாக இவர்கள் கணவனைத் துன்புறுத்துவார்கள். மாமன், மாமி, கொழுந்தன் மற்றும் உறவினர்களைத் துன்புறுத்துவார்கள். ஆகவே, வெளி அழகைக் கண்டு ஏமாறாமல் இருக்க வேண்டும் என்பது பொருளாகும். மாம்பழம் அருவருப்பான இடத்தில் விழுந் திருக்கும்போது, அதை எடுத்து உண்பது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. அருவருப்பான இடத்தில் விழுந்ததை உண்பதால் சுகாதாரக்கேடு வரும். உடல் கெட்டால் துன்பம்

வரும். ஆகவே, அதனைத் தவிர்த்திடல் வேண்டும் என்பது பொருளாகும். அன்புள்ள மனைவியைப் பிரிவது துன்பம் தரும். கணவனையே தெய்வமாகப் போற்றும் பெண்களும் உண்டு. அப்பெண்களைப் பிரிவது கணவனக்குத் துன்பம் தரும். அன்புள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப் பிரிவது துன்பத்தையே தரும். அன்புக்கு அத்தகைய மகத்தான சக்தி உண்டு என்பது பொருளாகும். தன் நண்பர்களின் குற்றம் குறைகளைப் போக்க முடியாவிட்டால் துன்பம் வரும் என்று கூறப்பட்டது. துரியோதனனின் குற்றங்கள் கர்ண னுக்குத் தெரியும். ஆனாலும் அவன் துரியோதனனை நல் வழிக்குத் திருப்பவில்லை. செஞ்சோற்றுக் கடன் தீர்க்க அவனுக்காக உயிரையே தியாகம் செய்தான். ஆனால், நண்பர் களைத் திருத்த அவன் முயலவில்லை. அதனால், கர்ணனும் அழிந்தான். அவன் நண்பர்களான துரியோதன னும் அழிந் தான். ஆகவே, நண்பர்களின் குற்றம், குறைகளை நீக்க முடியா விட்டால் துன்பம் வரும் என்பது பொருளாகும்.

அ.பொ.

வணரொலி ஐம்பாலார் வஞ்சித்தல் இன்னா-சில பெண்கள் பார்க்க அழகுடையவர்களாக இருப்பார்கள். ஆனால், கணவனைப் படாதபாடு படுத்துவார். அந்த வாழ்க்கை துன்பம். துணர்தூங்கு மாவின் படுபழம் இன்னா-மரத்தில் கொத்துக் கொத்தாக மாங்காய் காய்த்திருக்கும். அது அருவருப்பான இடத்தில் விழுந்து இருக்கும்போது அதை எடுத்து உண்பது துன்பம்.

புல்லார் புரவி மணியின்றி ஊர்வின்னா
கல்லார் உரைக்கும் கருமப் பொருளின்னா
இல்லாதார் நல்ல விருப்பின்னா ஆங்கின்னா
பல்லாருள் நாணுப் படல். *15*

விளக்கவுரை

புல்லைத் தின்கிற குதிரைமீது ஏறிச் செல்லும்போது அக்குதிரைக்கு மணி கட்டப்படவேண்டும். அவ்வாறு அக் குதிரைக்குச் சவாரி செய்வது துன்பம் தரும். கல்வி அறிவு

உள்ளவர்கள் ஒவ்வொரு காரியத்திலும் வரக்கூடிய இன்ப துன்பங்களை அறிந்து துன்பத்தைத் தவிர்ப்பார்கள். அத் தகைய அறிவாற்றல் இல்லாமல் இருப்பது துன்பம் தரும். பொருள் இல்லாதவர்களுக்குத் துன்பம் வரும். பத்துப்பேர் நிறைந்த சபையில் அவமானம் அடைவது துன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. புல்லைத் தின்கிற குதிரைமீதுஏறிச் செல்லும்போது அக்குதிரைக்கு மணிகட்ட வில்லையென்றால் துன்பம் வரும் என்று சொல்லப்பட்டது. குதிரை மிக வேகமாக ஓடக்கூடியது. ஆகவே, எதிரில் வரும் வாகனங்கள். மனிதர்கள் மற்றும் உயிரினங்கள் அதன்மீது மோதினால், இருதாரருக்கும் துன்பம் நேரலாம். ஆகவே, மணி சப்தத்தைக் கேட்டு எதிரில் வருவோர் எச்சரிக்கை யுடன் விலகிச் செல்லமுடியும். ஆகவே, குதிரைக்கு மணிகட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டது. கல்வி அறிவு உள்ளவர்கள் ஒவ்வொரு காரியத்திலும் வரக்கூடிய இன்ப துன்பங்களை அறிந்து துன்பங்களைத் தவிர்ப்பார்கள். அறிவுக் கூர்மைதான் பாதுகாப்புக் கவசமாக இருக்கிறது. சிறிய, சிறிய விஷயங் களைக்கூட முடிக்க முடியாமல் கல்வி கற்காதவர்கள் துன்பப் படுவார்கள். அறிவு கூர்மை இல்லாததே இதற்கு காரணம். அறிவு என்பது உண்மையை அறியும் ஆற்றலாகும். எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதனால், ஆவது, அழிவது அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்ய வேண்டும். அப்போதுதான் துன்பத்தைத் தவிர்க்க முடியும். ஒரு மனிதன் லாரி தொழிலில் செல்வந்தன் ஆகிவிட்டான் என்பதற்காக, நாமும் அதே தொழிலைத் தொடங்கக் கூடாது. தனக்குப் பொருந்தும் தொழிலையே தேர்ந்தெடுக்க வேண்டும். கல்வி அறிவு இல்லாதவர்கள் தங்களுக்குப் பொருந்தாத தொழிலைத் தலைமேல் போட்டுக் கொண்டு நஷ்டம் அடைவார்கள் என்ப தாகும். பத்துப்பேர் நிறைந்த சபையில் அவமானம் அடைவது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. அதாவது, சபையில் புகழ் வரும்படி நம் செயல்கள் அமைய வேண்டும். அவமானம் வரக்கூடிய செயல்களைச் செய்யக்கூடாது என்பது உட் பொருளாகும்.

அ.பொ.

புல்லார் புரவி-புல் தின்னும் குதிரை. மணியின்றி-மணிகட்டாமல். ஊர்வின்னா-செல்லுதல் துன்பம். கல்லார் உரைக்கும்-கற்காதவர் கூறும் சொற்கள். இல்லாதார்-பொருள் இல்லாதவர்கள்.

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா
கண்ணில் ஒருவன் வனப்பின்னா ஆங்கின்னா
எண்ணிலான் செய்யும் கணக்கு. *16*

விளக்கவுரை

செல்வம் இருந்தும் செலவாகிவிடும் என்ற எண்ணத்தில் சாப்பிடாமல் இருந்தால், அந்தச் செல்வம் முழுவதும் துன்பமாகிவிடும். கண்பார்வை இல்லாதவன் அழகைக் காணமுடியவில்லை என்று நினைப்பது துன்பம் தரும். எண், எழுத்து ஆகிய இரண்டையும் அறியாமல் வாழ்வது துன்பம் தரும். இப்பொருளில் இன்னா நாற்பது பாடல் உள்ளது. தேவையான விஷயங்களுக்குச் செலவு செய்வதால் செல்வம் அழிவதில்லை. ஆனால், கருமித்தனத்தால் செல்வம் அழிந்து விடும். சிலர் செலவழிந்து விடும் என்று சாப்பிடக்கூட மாட்டார்கள். அவர்களுடைய செல்வம் சிதறிவிடும். துன்பத்தைத் தரும் என்பதாகும். மகாலட்சுமி தேவையான விஷயங்களுக்குச் செலவு செய்யவே செல்வத்தைத் தருகிறாள். கருமித் தனம் செய்கிறவர்களை அவள் வெறுக்கிறாள். இதைப் புரிந்து கொண்டு செய்ய வேண்டிய செலவுகளைச் செய்ய வேண்டும். கண்பார்வை இல்லாதவன் அழகைக் காண முடியவில்லை என்று நினைப்பது துன்பத்தைத் தரும். கண்பார்வையற்றவன் எந்த அழகையும் பார்த்து ரசிக்க முடியாது. மற்றவர்கள் கண்கள் கொண்டு பார்க்கத் தான்மட்டும், எதையும் காண முடியவில்லையே என்று நினைக்கும்போது, பெரும் துன்பம் ஏற்படும் என்பது கருத்து. ஆகவே, கண்பார்வையற்றவன் அதை நினைக்காமல் நல்ல விஷயங்களைச் செவிகளால் கேட்கப் பழகிக் கொள்ள வேண்டும். இல்லாததை நினைத்து வருந்துவதை விட, இருப்பதைக் கொண்டு மகிழ்வது நலம்

என்பது கருத்து. எண் எழுத்து ஆகியவற்றை அறியாமல் வாழ்வது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. அதாவது கல்வி கற்காதவர்கள் வாழ்க்கையில் பல அல்லல்களைச் சந்திக்க நேரும். கொடுக்கல் வாங்கல்களில் பிறருடைய உதவியை எதிர்பார்க்க வேண்டும். எண், எழுத்து அறியாதவர்கள் சிலர் ஏமாற்றி விடுவார்கள். அதனால், நஷ்டத்தைச் சந்திக்க நேரும். எழுதப் படிக்கத் தெரியாதவர்களைச் சிலர் எள்ளி நகையாடுவார்கள். அதுவும் துன்பத்தைத் தரக்கூடியது. ஆகவே, கல்வி கற்பது அவசியம் என்பது கருத்து.

அ.பொ.

உண்ணாது வைக்கும் பொருள்-சாப்பிடாமல் சேர்க்கும் செல்வம். வைப்பின்னா-அழியும். நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா-பகைவர்களுடன் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். உள்ளத்தில் தகுதியில்லாத பகைவருடன் மோதிக் கொண்டிருப்பது துன்பம் தரும்.

ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா ஆங்கின்னா
ஈன்றாளை ஓம்பா விடல். 17

விளக்கவுரை

கல்வியறிவு கொண்டவர்கள் சபையில், ஐம்புலன்களை அடக்காத அறிவில்லாதவன் பேசுவது துன்பம் தரும். இரவு நேரத்தில் அறிவு மயங்கியிருக்கும்போது, தனியே செல்வது துன்பம் தரும். துன்பங்களை அடக்கி ஆளமுடியாதவர்கள், நோன்பு இருத்தல் துன்பம் தரும். தாயை மறந்து விழ்வது துன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. கல்வியறிவு கொண்டவர்கள் சபையில் புலன் அடக்கமில்லாத அறிவில்லாதவன் பேசுவது, துன்பம் தரும் என்று கூறப்பட்டது. கல்வி அறிவு கொண்டவர்கள் உயர்ந்த கருத்துக்களைப் பேசுவார்கள். ஆனால், அறிவில்லாதவன் அக்கருத்துக்களின் பெருமையை அறியமாட்டான். வாய்க்கு வந்தபடி உளறுவான்.

நல்ல கருத்துக்களைப் பழித்துப் பேசுவான். ஆகவே, கல்வி கற்றவர்கள் துன்பம் அடைவார்கள் என்பது கருத்து. இரவு நேரத்தில் தனியாகச் செல்லக்கூடாது என்று பலமுறை இன்னா நாற்பது கூறுகிறது. அறிவு மயங்கியவர்கள் என்பது, சித்தசுவாதீனம் இல்லாதவர்கள் என்று பொருள் கொள்ளலாம். அவர்கள் இரவு நேரத்தில் தனியாகச் சென்றால் பல்வேறு இடையூறுகள் நேரும் என்பதாகும். துன்பங்களை அடக்கி ஆளமுடியாதவர்கள் நோன்பு இருத்தல் துன்பம் தரும் என்று கூறப்பட்டது. நோன்பு என்பது மனக்கட்டுப்பாடு சம்பந்தப் பட்டது. பசி... தாகம்... முதலியவைகளாகத் தாங்கும் வல்லமை வேண்டும். அந்தத் துன்பங்களைத் தாங்க முடியாதவர்கள் நோன்பு இருந்தால் மயங்கிவிழ நேரலாம். மற்றும் பலவித இடர்கள் வரலாம் என்பது கருத்து. தாயை மறந்து வாழ்வது துன்பம் என்று சொல்லப்பட்டது. தாயை மறக்கின்றவன் தெய்வத்தின் துணையை இழப்பான். நன்றி மறந்த பாவ மூட்டையைச் சுமப்பான். வாழ்வில் துன்பங்களையே சந்திப் பான். பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த தாயை மறப்பவன் விலங்குக்குச் சமம். அவனுக்குக் கதி மோட்சம் கிடையாது. ஆகவே, தாயை மறக்க வேண்டாம் என்று கூறப்பட்டது.

அ.பொ.

ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகலின்னா-கல்வி அறிவு கொண்டவர்கள் சபையில் அறிவில்லாதவர் பேசுவது துன்பம். மான்று இருண்ட போழ்தின்-இரவு நேரத்தில். வழங்கல் பெரிதின்னா-தனியாக செல்வது துன்பம்.

உரனுடையான் உள்ளம் மடிந்திருத்தல் இன்னா
மறனுடைய ஆளுடையான் மார்(பு) ஆர்த்தல் இன்னா
சுரம்அரிய கானம் செலவின்னா இன்னா
மனம்வறி யாளர் தொடர்பு. *18*

விளக்கவுரை

தெளிவில்லாதவனுக்கு ஏற்படும் குழப்பம், தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்ட துன்பமாகும். வீரர்களை

மதிக்காமல் நான் ஒருவனே வெற்றி கொள்வேன் என்று போருக்கு செல்வது, துன்பம் தரும் மனிதர்கள் ஊரில் தங்கி அமைதியுடன்வாழவேண்டும். அதைவிட்டு, காட்டில் சென்று வாழ்வது சுகமானது என்று கருதினால் துன்பம் வரும். மனதுக்கு அமைதியையோ, நிம்மதியையோ தராத நட்பு துன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. தெளிவில்லாத வனுக்கு ஏற்படும் குழப்பம் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்ட துன்பம் என்று கூறப்பட்டது. தெளி வில்லாதவன் என்பதற்குப் பொருள் எந்தச் செயலிலும் உறுதித் தன்மை இல்லாதிருத்தல்; எடுத்த முடிவை மாற்றிக் கொண்டே இருத்தல். எதிலும் சந்தேகம் கொள்ளுதல். எதிலும் அச்சம் கொள்ளுதல். எதிலும் அவநம்பிக்கை கொள்ளுதல் ஆகியவை, ஒருவன் தெளிவில்லாதவன் என்பதை அறிவிக்கும் அடை யாளங்களாகவும். இவனுக்கு வரும் துன்பம் வேறு ஒரு வரால் வருவதல்ல. தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்ளும் துன்பமாகும். மனதை உறுதிப்படுத்தி விஷயங்களைத் தெளி வாக ஆராயாத காரணத்தால் இத்துன்பங்கள் வருகின்றன என்பது கருத்து. வீரர்களை மதிக்காமல் நான் ஒருவனே வெற்றி கொள்வேன் என்று தற்பெருமை கொள்வது, துன்பம் தரும் என்று கூறப்பட்டது. பாதுகாப்பு தான் வெற்றியின் ரகசியம். பாதுகாப்பின்றி அசட்டுதுணிச்சல்கூடாது என்பது இதற்குப் பொருள். மனிதர்கள் ஊரில் தங்கி வாழவேண்டும். காட்டில் வாழலாம் என்று நினைப்பது துன்பம் தரும். காட்டில் தொழில் செய்ய முடியாது. வேளாண்மை செய்ய முடியாது. மிருகங்களின் தொல்லைவேறு. ஆகவே, மனிதர்கள் ஊரி லேயே தங்கி அமைதியுடன் வாழவேண்டும் என்ப தாகும். மனதுக்கு அமைதியையோ, நிம்மதியையோ தராத நட்பு துன்பம் தரும் என்று கூறப்பட்டது. தீயவர்களிடம் நட்பு வைத்தால் தீமைதான் வரும். சுகமோ, நிம்மதியோ வராது என்பதாகும்.

அ.பொ.

உரனுடையான்-தெளிவுள்ளவன். உள்ளம் மடிந்திருத்தல்-உள்ளம் குழம்பி இருத்தல். மறனுடைய ஆளுடையான் மார்பு ஆர்த்தல்

இன்னா-தான் ஒருவனே அனைவரையும் வென்று விடுவேன் என்று மற்றவர்களைப் புறக்கணித்து விட்டு, தான் மட்டும் கவசத்தை அணிந்து கொண்டு போருக்குப் போவது துன்பம்.

குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னா
நிலத்திட்ட நல்வித்து நாறாமை இன்னா
நலத்தகையார் நாணாமை யின்னாவாங் கின்னா
கலத்தல் குலமில் வழி. *19*

விளக்கவுரை

நல்லகுடியில் பிறந்திருந்தும், கல்வியை வெறுத்து ஒதுக்கினால் துன்பம் வரும். நல்ல விதைகள் முளைக்காமல் போனால் துன்பம் வரும். நாணம் இல்லாத பெண்ணுக்கு அவள் அழகே துன்பமாகி விடும். தன் குலத்தில் இல்லாத பெண்ணை ஒருவன் திருமணம் செய்து கொண்டால் துன்பம் வரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. நல்லகுடியில் பிறந் திருந்தும் கல்வியை வெறுத்து ஒதுக்கினால் துன்பம் தரும். கல்வி என்பது, நாம் யார் என்பது உணர்த்தக்கூடியது. உயர் குடியில் பிறந்தால் மட்டும் போதாதது. இந்த உயர் கல்வியைப் பயிலவேண்டும். கல்வி என்பது ஒரு மனிதனைச் சொந்தக் காலில் நிற்க வைக்கும் சக்தி கொண்டது. அதை ஒதுக்கினால், அவன் அடிமை ஆவான் என்பது கருத்து. நல்ல விதைகள் முளைக்காமல் போனால் துன்பம் வரும் என்று சொல்லப் பட்டது. நல்ல விதை முளைக்காமல் போவதற்கு என்ன காரணம்? சரியாக நீர் பாய்ச்சாத காரணமாக இருக்கலாம். வயலைச் சரியாகப் பதப்படுத்தாத காரணமும் இருக்கலாம். சரியாகப் பாதுகாப்பு செய்யாமையும் காரணமாக இருக்கலாம். ஆகவே, நல்ல விதைகள் முளைக்கும்படி நாம் எச்சரிக்கை யுடன் செயலாற்ற வேண்டும். இல்லையேல் துன்பம் வரும் என்பது கருத்து. நாணம் இல்லாத பெண்ணுக்கு அவள் அழகே துன்பமாகும் என்று கூறப்பட்டது. பெண்ணுக்கு நாணம்தான் உண்மையான அழகு. புறஅழகு இருந்து நாணம் இல்லாவிட்டால், அவளை எவரும் மதிக்கமாட்டார்கள். அவளைக் கெடுக்க முயல்வார்கள். அது என்று என்ற எண்ண மும் தீயவர்களுக்குத் தோன்றும். ஆகவே, அடக்கமும்,

நாணமும் உள்ளவர்களாகப் பெண்கள் இருப்பதே பாதுகாப் பானது; உயர்வானது என்பது கருத்து.

அ.பொ.

குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னா-நல்ல குலத்தில் பிறந்தவன் நல்ல கல்வியைக் கற்காமல் இருப்பது துன்பம். நிலத்திட்டட நல்வித்து நாறாமை இன்னா-பூமியில் விதைத்த நல்ல விதை முளைக்கா விடில் துன்பம்.

மாரிநாள் கூவும் குயிலின் குரலின்னா
ஈர மிலாளர் கடுமொழிக் கூற்றின்னா
மாரி வளம்பொய்ப்பின் ஊர்க்கின்னா ஆங்கின்னா
மூரி எருத்தால் உழவு. 20

விளக்கவுரை

மழைக் காலங்களில் குயில்கள் கூவும்போது, அதன் இசை துன்பத்தைத் தருகிறது. வீரமில்லாதவர்கள் கூறும் கடும் சொற்கள் துன்பத்தைத் தரும். மழை பொழியாவிட்டால் நாட்டில் துன்பம் பெருகும். தொழில் செய்வதற்கு உதவாத வலிமைமிக்க காளை மாடுகள் (ஜல்லிக்கட்டு காளைகள்) துன்பத்தைத் தரும். மழைக் காலங்களில் குயில்கள் கூவும் போது, அதன் இசை துன்பத்தைத் தருகிறது என்று கூறப் பட்டது. மழைக் காலங்களில் காதலர் ஒன்றுபட்டு இருக்க வேண்டிய நேரம்; பிரிந்திருந்தால் துன்பம். தன் ஜோடியை அழைக்க மாரிக்காலத்தில் குயில்கூவும். அது ரசிக்கும்படியாக இருக்காது. மேலும், மாரிக்காலத்தில் இடி சப்தமும், மற்ற சப்தங்களும் இருப்பதால் குயிலின் ஓசை ரசிக்கும்படி இருக் காது. ஆகவே, அது துன்பம் என்று கூறப்பட்டது. வீரமில்லா தவர்கள் கூறும் கடும் சொற்கள் துன்பம் தரும் என்று கூறப் பட்டது. வீரத்திலிருந்து வரும் சொற்கள்தான் வலிமையுடை யவை. வீரம் இல்லாதவர்களின் கடும் சொற்கள் பாதிப்பையே ஏற்படுத்தும். வீரமில்லாதவர்கள் கடுஞ்சொற் களைப் பேசி னால் எதிரிகள் தாக்கநேரும். அந்தத் தாக்குதலை சமாளிக்க வீரம் தேவை. இல்லையெனில் துன்பம் வரும் என்பது

வெளிப்படை. மழை பொழியாவிட்டால் நாட்டில் துன்பம் பெருகும். மழைதான் உணவுப் பொருள்கள் விளைவிக்கின்றன. தாகத்தைத் தணிப்பதும் நீர்தான். அவ்வாறு உயிர்நாடியாக இருக்கக் கூடிய மழை நீர் பொழியவில்லை என்றால், வறுமை தாண்டவமாடும்; ஒழுக்கம் கெடும். மோதல்கள் உருவாகும்; நாணயம் மறையும். ஆகவே, மழை பொழியாவிட்டால் கடும் துன்பம் வரும் என்பதாகும். ஜல்லிக்கட்டுக் காளைகள் உழவுத் தொழிலுக்குப் பயன்படாது. ஆகவே, அந்த காளைகளால் உழவுத் தொழிலுக்கு நன்மை கிடைக்காது என்பதால் துன்பம் வரும் என்று கூறப்பட்டது.

அ.பொ.

மாரிநாள் கூவும் குயில்-மாரிக் காலத்தில் எழும் குயில் ஓசை. வீரமிலாளர் கடுமொழி-வீரமில்லாதவர்களின் சொற்கள். மாரி வளம் பொய்ப்பின்-மழை வளம் குன்றினால். மூரி எருத்தால் உழவு-உழவுக்கு உழவாத காளை (ஜல்லிக்கட்டு காளை).

ஈத்த வகையால் உவவாதார்க்(கு) ஈப்பின்னா
பாத்துணல் இல்லார் உழைச்சென்(று) உணல்இன்னா
மூத்த இடத்துப் பிணியின்னா ஆங்கின்னா
ஓத்திலாப் பார்ப்பான் உரை. *21*

விளக்கவுரை

ஒருவரிடம் சென்று ஒரு பொருளைக் கேட்கிறோம். அவரும் முடிந்த அளவுக்கு அப்பொருளைத் தருகிறார். அந்த சமயத்தில் அவர் குறைவாகக் கொடுத்து விட்டார் என்று நினைப்பது துன்பம் தரும். ஒருவர் நல்ல உண்வைச் சுயநலத் தோடு பிறருக்குப் பகிர்ந்துகொடுக்காமல் உண்டால், துன்பம் தரும். வயோதிகம் என்பது துன்பமான பருவமாகும். கட்டுப் பாடின்றி அப்பருவத்தில் உணவு உண்டால் துன்பம் தரும். அந்தணர் என்றால் சுத்தமானவர் என்று பொருள். அந்தச் சுத்தமானவர் வேதம் படித்தவராக இருக்க வேண்டும். அப்படிப் படிக்காமல் அவர் கூறும் சொற்கள் துன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. நாம் கேட்கும் பொருளை

ஒருவர் கொடுக்கிறார். அப்படிக் கொடுக்கும்போது குறைவாகக் கொடுத்துவிட்டாரே என்று நினைப்பது, துன்பம் தரும் என்று சொல்லப்பட்டது. கொடுப்பதை ஏற்றுத் திருப்தியாகச் செல்லவேண்டும். மேலும் கொடுக்கவில்லையே என்று நினைப்பது நல்ல குணம் அல்ல. அப்படிப்பட்ட நினைப்பு காலம் முழுவதும் துன்பத்தையே வரவழைக்கும் என்பதால் இவ்வாறு சொல்லப்பட்டது. நல்ல உணவைப் பகிர்ந்து கொடுக்காமல், சுயநலத்தோடு உண்டால் துன்பம் தரும் என்று கூறப்பட்டது. காக்கை, உணவுகிடைத்தால் தன்இனத்தவரைக் கூவி அழைத்து உண்கிறது. மனிதர்களாகப் பிறந்த நாம் இந்தப் பாடத்தை அறியாதது அவமானத்திற்குரியது. பகிர்ந்து உண்பதில்தான் ஆனந்தம் இருக்கிறது. தனித்து உண்பது அநாகரிகம். பிறரால் பழிக்கப்படும் நிலை இதனால் வரும் என்பதாகும். வயோதிகக் காயத்தில் கட்டுப்பாடில்லாமல் உணவுஉண்டால் செரிமானம்இருக்காது. அதனால் துன்பமும் நோயும் வரும் என்பதாம். அந்தணர் என்றால் சுத்தமானவர் என்பது பொருள். அவர் வேதங்களை அறிந்திருக்க வேண்டும். அப்படி அறியாமல், அவர்கூறும் அறிவுரைகள், வார்த்தைகள் பயன்தராது. அதனால் துன்பம் வரும் என்பது கருத்து.

அ.பொ.

ஈத்த வகையால் உவவாதார்க்கு ஈப்பு இன்னா-ஒருவர் ஒரு பொருளைக் கொடுக்கிறார். ஆனால் குறைவாகக் கொடுத்து விட்டாரே என்று நினைப்பது துன்பம். பாத்துணல் இல்லார் உழைச்சென்று உணல் இன்னா-தனியாக நல்ல உணவை உண்பது துன்பம் தரும்.

யானையில் மன்னரைக் காண்டல் நனிஇன்னா
ஊனைத்தின்(று) ஊனைப் பெருக்குதல் முன்இன்னா
தேன்நெய் புளிப்பின் சுவைஇன்னா ஆங்கின்னா
கான்யா(று) இடையிட்ட ஊர். 22

விளக்கவுரை

யானைப்படை இல்லாத மன்னனைப் பார்த்தால், அவன் துன்பத்திற்குரிய மனிதன் என்றே சொல்ல வேண்டும். தன்

உடலைக் காப்பாற்ற மற்ற உயிர்களைக் கொன்று உண்பது துன்பம் தரும். தேன், நெய் ஆகியவை புளிப்பதற்கு முன்பே சாப்பிடவேண்டும். சுவை கெட்டுப்போனால் துன்பம் தரும். ஊர் என்பது பாதுகாப்பான இடத்தில் இருக்க வேண்டும். காட்டாற்று வெள்ளம் வந்து அடித்துக் கொண்டு போகும் இடத்தில் ஊர் இருந்தால் துன்பம் தரும். இப்பொருளில் இப் பாடல் உள்ளது. யானைப் படை என்பது நூறு வீரர்களுக்குச் சமமானது. வெற்றிக்கு அடிப்படையாக இருப்பதும் யானைப் படைதான். அப்படை இல்லாத மன்னன் யுத்த களத்தில் தோல்வி அடைவான். துன்பம் அடைவான் என்பது கருத்து. தன்உடலைக் காப்பாற்ற மற்ற உயிர்களை கொல்வது துன்பம் என்று கூறப்பட்டது. பிற உயிரைக் கொன்றுதான் மனிதன் வாழவேண்டும் என்ற அவசியமில்லை. அவனுக்குப் பல தாவர உணவுகள் இருக்கின்றன. அதுஉண்டு அவன் வலிமை யாக இருக்க முடியும். பிற உயிர்களைக் கொல்வதால் பாவம் வரும். அதனால் பல துன்பங்கள் வரும் என்பது கருத்து. தேன், நெய் ஆகியவை பக்குவமாக இருக்கும்போதே சாப்பிட வேண்டும். பக்குவம் கெட்டால் நோயை உண்டாக்கும். அதனால் துன்பம் வரும் என்பதாகும். ஊர் பாதுகாப்பான இடத்தில் இருக்க வேண்டும். காட்டாற்று வெள்ளம் வரும் பாதையில் இருந்தால் ஊரே அழிந்து போகும். இதையெல் லாம் சிந்தித்து ஊர் அமைக்கப்படவேண்டும். மனிதனுக்கு அறிவுக் கூர்மை இருக்கிறது. பறவை, விலங்குகளுக்கு அத் தகைய அறிவுக் கூர்மை இல்லை. மனதை ஒருநிலைப்படுத்தும் ஆற்றலும் அவற்றிற்குக் குறைவாக உள்ளது. மனிதன் தான் இந்த ஆற்றலில் சிறந்து விளங்குகிறான். ஆகவே, அந்த ஆற் றலைப் பயன்படுத்தி பாதுகாப்பான ஊரில் அவன் மகிழ் வோடு வாழவேண்டும். இல்லாவிடில் துன்பம்நேரும் என்பது கருத்து.

அ.பொ.

யானையில் மன்னரை-யானைப் படை இல்லாத மன்னரை. காண்டல்-காண்பது. ஊனைத்தின்று-பிற உயிர்களைக் கொன்று

தின்பது. தேன், நெய் புளிப்பின் சுவை இன்னா-தேன், நெய் ஆகியவை பக்குவமாக இருக்கும்போதே உண்ண வேண்டும்; புளித்தபின் உண்டால் துன்பம்.

சிறையில்லா மூதூரின் வாயில்காப் பின்னா
துறையிருந்(து) ஆடை கழுவுதல் இன்னா
அறைபறை அன்னவர் சொல்இன்னா இன்னா
நிறையிலான் கொண்ட தவம். 23

விளக்கவுரை

மதில் சுவர்கள் கட்டப்படாத ஊரைப் பாதுகாப்பது கடினம். அசுத்தமான நீர்த் துறையில் ஆடையைத் துவைத்து அழுக்குகளைப் போக்குவது துன்பமாகும். அமைதியாகப் பேசாமல் பலர் கேட்கும் வண்ணம் பேசும் பேச்சு துன்பம் தரும். உள்ளத்தில் பல இடங்களில் அலைபாய விடுவது துன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. மதில் சுவர்கள் கட்டப்படாத ஊரைப் பாதுகாப்பது கடினம் என்று கூறப்பட்டது. மதில்சுவர் என்பது பாதுகாப்பு அரண். திருடர்களோ, விலங்குகளோ வரமுடியாதபடி தடுக்கக் கூடியது அது. வெட்டவெளியாக இருந்தால் துன்பம் வரும் என்பதாகும். அசுத்தமான நீரில் ஆடையைத் துவைப்பது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. ஆடையில் உள்ள அழுக்கை நீக்கவே துவைக்கிறோம். அதை நீக்கும் நீரே அசுத்தமாக இருந்தால் துன்பம் தானே? அமைதியாகப் பேசாமல், பலர் கேட்கும் வண்ணம் பேசும் பேச்சு துன்பம் தரும் என்று கூறப்பட்டது. அமைதியான பேச்சில்தான் அர்த்தம் இருக்கும்; பயன் இருக்கும். உரத்த குரலில் பேசுவது துன்பத்தையே உண்டாக்கும். காதுகளுக்கு இனிமை என்பது அமைதியான பேச்சே. கர்ண கொடூரமாகக் கத்திப்பேசுவது அந்தப் பேச்சில் பொருள் இருந்தாலும்கூட துன்பம் தரக்கூடியதாகும். உள்ளத்தைப் பல இடங்களில் அலைபாயவிடுவது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. உள்ளம் பல இடங்களில் அலைபாய்வதால் சக்தி வீணாகிறது. சக்தி வீணானால் செயல் ஆற்றல் குறைகிறது. செயல் ஆற்றல் குறைந்தால்,

துன்பமே மிஞ்சும். மனதை அலைபாயவிடாமல் ஒருநிலையில் நிறுத்தும்போது ஆற்றல், ஒரு மையத்தில் சேமிக்கப்படுகிறது. இதை அறியாத மனிதர்கள் மனதை அலைபாய விடுகிறார்கள். இதனைப் புரிந்து கொண்டு மனதை அலைபாயவிடாமல், நல்ல விஷயங்களில் நிலை நிறுத்த வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

சிறையில்லா மூதூரின் வாயில்காப்பின்னா-மதில் சுவர்கள் இல்லாத ஊரைக் காப்பது கடினம். துறையிருந்து ஆடை கழுவுதல் இன்னா-சுத்தம் இல்லாத நீரில் ஆடையைத் துவைத்தல் துன்பம்.

ஏமமில் மூதூர் இருத்தல் மிகவின்னா
தீமை உடையார் அயல்இருத்தல் நன்கின்னா
காம முதிரின் உயிர்க்கின்னா ஆங்கின்னா
யாமென் பவரோடு நட்பு. 24

விளக்கவுரை

ஒரு நாட்டிற்குத் திறமையான அரசு காவலாக இருக்க வேண்டும். நகரத்தின் சுற்றுச் சுவர்களும் வலிமையானதாக இருக்க வேண்டும். இவ்விரண்டும் வலிமையின்றி இருந்தால் அந்நகரில் வாழ்வது துன்பம் தரும். தீயவர்களிடம் நட்பு கொண்டால் துன்பம் வரும். காமநோய் உள்ளவர்களுக்கு உடல்கெடும். உயிரும்முக்தியடையாது. ஆணவம் கொண்டவர் களுடன் நட்புக் கொண்டால் துன்பம் வரும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. திறமையான அரசு, வலிமை வாய்ந்த சுற்றுச்சுவர்கள் இல்லாத நகரம் துன்பம் அடையும் என்று கூறப்பட்டது. திறமையான அரசு என்பது திறமையான நிர்வாகம் என்று பொருள்படும். வருவாயைப் பெருக்க வேண்டும். வசதிகளைக் கூட்ட வேண்டும் செல்வம்; குறை யாதபடி சமநிலைப்படுத்தவேண்டும். புதுப்புது யுக்திகளைக் கையாண்டு தொழில்களை வளர்க்கவேண்டும். மக்களை உழைப்பாளிகளாக மாற்ற வேண்டும். இதுவே திறமையான அரசுக்கு இலக்கணம். அதேசமயம், நகரம் உறுதி வாய்ந்த மதில் சுவர்களால் பாதுகாக்கப்படவேண்டும். சமூக

விரோதிகள் எளிதில் நுழையாதபடி அந்த அரண் தடுக்கும். இவ்வாறு இல்லாவிட்டால், துன்பம் வரும் என்பதாகும். தீயவர் நட்பு, காமநோய் ஆகியவை துன்பம் தரும் என்று கூறப்பட்டது. தீயவர்கள் தீய செயல்களையே செய்வார்கள். அவர்களுடன் நட்புவைத்தால், அவர்களும் தீயசெயல்களைச் செய்யத் தூண்டப்படுவார்கள். தீயசெயல்களைச் செய்தால் பாவமூட்டை பெருகும். அதுவே விதியை நிர்ணயம் செய்கிறது. பாவமூட்டை மிகுந்திருப்பவர்கள்தான், இந்த உலகில் படாத துன்பங்களை யெல்லாம் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேறுயாரோ இந்தத் துன்பங்களை சுமத்துவதில்லை. நமது செயல்களே விதியாக மாறுகிறது. ஆகவே, தீயநட்பை விலக்க வேண்டும். பெண் மோகம் கொண்டு திரிவது காமநோய். அதனால் சக்தி விரயமாகி இளம் வயதிலேயே முதுமைக் கோலத்தை மனிதன் பெறுவான். உயிர் கெடும்; முக்தியைப் பல பிறவிகள் தள்ளி போடும் என்பது கருத்து.

அ.பொ.

ஏமமில் மூதூர் இருத்தல் இன்னா-திறமையான அரசும், மதில் சுவரும் இல்லாத ஊர் துன்பம் தரும். தீமை உடையார் அயல்இருத்தல் நன்கின்னா-எப்போதும் நல்லவர்களுடன் கூடி அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். தீயவர்களுடன் நட்புக்கொண்டாலே துன்பம் வரும்.

நட்டார் இடுக்கண்கள் காண்டல் நனியின்னா
ஒட்டார் பெருமிதங் காண்டல் பெரிதின்னா
கட்டில்லா மூதூர் உறையின்னா ஆங்கின்னா
நட்ட கவற்றினால் சூது. 25

விளக்கவுரை

ஒரு நண்பருக்குத் துன்பம் வரும்போது அவருக்கு உதவாமல், வெறுமனே கவனிப்பது துன்பச் செயலாகும். பகைவர்கள் ஆணவத்துடன் நம்மை அலட்சியமாகப் பார்த்தால் துன்பம் வரும். ஊர் மக்கள் கட்டுப்பாட்டுடன் இல்லாவிட்டால் அங்கு வாழ்வது துன்பம் தரும். சூதாட்டம்கூடாது. அதில் இறங்கினால் நஷ்டம் துன்பமும் வரும். இப்பொருளில்

இப்பாடல் உள்ளது. ஒருநண்பருக்குத் துன்பம் வரும்போது அவருக்கு உதவி செய்யாமல் வெறுமனே பார்த்துக் கொண் டிருப்பது, துன்பம் தரும் என்று கூறப்பட்டது. உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு என்று இதனை யொட்டியே கூறப்பட்டிருக்கிறது. நண்பருக்குத் துன்பம் நேர்ந்தால், அதைப் போக்குவதற்குச் சரியான திட் டத்தை வகுத்து நீக்கவேண்டும். அதைச் செய்யாமல் வேடிக்கை பார்ப்பது நட்பன்று. அது துன்பத்தைத் தரும் என்பதாகும். பகைவர்கள் ஆணவத்துடன் நம்மைப் பார்த்தால் துன்பம் வரும் என்று கூறப்பட்டது. ஆகவே, பகைவர்கள் அஞ்சும்படி நமது பலத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும். அலட்சியம், ஆணவம் அனைத்தையும் வேரறுக்கக் கூடியது, நாம் வளர்த் துக் கொள்ளும் பலம்தான். இதை மறந்தால் துன்பம் தொடரும் என்பது கருத்து. ஊர்மக்கள் கட்டுப்பாட்டுடன் இல்லாவிட் டால், அங்கு வாழ்வது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. ஊர்மக்கள் தருமத்திற்கு கட்டுபபட்டவர்களாக இருக்க வேண்டும். உண்மைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும். அப்படியில்லாமல் செல்வந்தர்களின் பணத்திற்கு அடிமையாகி அவர்கள் சொல்கிறபடி ஆடுகிறவர்களாக இருந்தால், நல்லவர்கள் அந்த ஊரில் வாழமுடியாது என்பது பொருள். கட்டுப்பாடு என்பது தருமத்திற்குக் கட்டுப்படுவ தாகும். தருமம் இல்லாத இடத்தில் எந்த நேரத்திலும் விபரீதம் நிகழலாம் என்பது கருத்து. சூதாட்டத்தில் துன்பமும் நஷ்ட மும் வரும் என்று கூறப்பட்டது. உத்தமன் தருமபுத்திரன் சூதாட்டத்தால்தான் ராஜ்ஜியத்தை இழந்தான்; காடு சென்றான். மற்றும் பல துன்பங்களை அடைந்தான். ஆகவே, சூதாட்டத்தை விட்டு விலகவேண்டும் என்பது பொருள்.

அ.பொ.

நட்டார் இடுக்கண் காண்டல் நனியின்னா-நண்பருக்குத் துன்பம் நேரும்போது வெறுமனே பார்ப்பது துன்பம். ஒட்டார் பெருமிதங் காண்டல் பெரிதின்னா-பகைவர் ஆணவத்துடன் நோக்கினால் துன்பம்.

பெரியாரோ(டு) யாத்த தொடர்விடுதல் இன்னா
அரியவை செய்தும் எனவுரைத்தல் இன்னா
பரியார்க்குத் தாம்உற்ற கூற்றின்னா இன்னா
பெரியார்க்குத் தீய செயல். 26

விளக்கவுரை

நண்பர்கள் சான்றோர்களாக இல்லாவிட்டால், துன்பம் வரும். செய்வதற்குரிய காரியங்களை மட்டுமே ஆராய்ந்து செய்யவேண்டும். செய்யமுடியாத காரியங்களைச் செய்வேன் என்று சவால் விட்டுத் தோற்பது துன்பம் தரும். தங்கள் துன்பங்களை அன்புள்ளவர்களிடம் மட்டும் சொல்ல வேண்டும். அன்பில்லாதவர்களிடம் சொல்லுவதே துன்பமாகி விடும். பெருமைக்குரிய சான்றோர்களிடம் நட்பு கொள்ளும் போது, அவர்களை மதிக்காமல் தீயகாரியங்கள் செய்தால் பெரும் துன்பம் வரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. நண்பர்கள் சான்றோர்களாக இல்லாவிட்டால் துன்பம் வரும் என்று கூறப்பட்டது. ஒருவர் வைத்திருக்கின்ற நட்பைப் பொறுத்துதான் மற்றவர்கள் எடை போடுவார்கள். எப்போதும் ஆன்மிகச் சான்றோர்களிடம் நட்பு வைத்தால், பக்தி மார்க்கத்தில் நமக்கு ஆர்வம் ஏற்படும். அறச் செயல்கள் செய்யும் பெரியோர்களிடம் நட்பு கொண்டால் நாமும் அறச் செயல்களில் ஈடுபடுவோம். குடிகாரனிடம் நட்பு வைத்தால் நாமும் குடிப்பழக்கத்திற்கு ஆளாவோம். நண்பர்கள் நல்லவர்களாகச் சான்றோர்களாக இருந்தால் நன்மை. தீயவர்களாக இருந்தால் துன்பம்தான். நம்மால் செய்ய முடிந்த காரியங்களை மட்டுமே ஆராய்ந்து செய்ய வேண்டும். காரியங்களுக்கு ஆகும் செலவு, வரும் லாபம், காரியத்திற்குத் தடைகள் என்னென்ன? அதைப் போக்குவது எப்படி? என்பதை எல்லாம் சிந்தித்து ஆராய்ந்து செய்தால் வெற்றிக் கனியைப் பறிப்பது உறுதி. செய்யமுடியாத காரியங்களைச் செய்வேன் என்றுகூறி சவால் விட்டுச் செய்வது பெரிய நஷ்டங்களை ஏற்படுத்தும் என்பதாகும். நமது துன்பங்களை அன்புள்ளவர்களிடம் மட்டுமே சொல்லவேண்டும். அன்பில்லாதவர்களிடம் கூறினால் ஏளனமும், அவமானமும்தான் மிஞ்சும் என்பது

கருத்து. பெருமைக்குரிய சான்றோர்களை மதிக்காமல், காரியங்களைச் செய்தால் தீமை வரும். சான்றோர்களின் சக்தி நம்மை உடனே தாக்கும் என்பது கருத்து.

அ.பொ.

பெரியாரோடு யாத்த தொடர்விடுதல் இன்னா-கல்வியினும், அறிவாற்றலினும் சிறந்த சான்றோர்களை நட்பாகக் கொள்ளாவிட்டால் துன்பம். அரியவை செய்தும் எனவுரைத்தல் இன்னா-செய்ய முடியாத காரியங்களை நான் செய்து முடிப்பேன் என்று சவால் விடுவது துன்பம் தரும்.

பெருமை யுடையாரைப் பீடழித்தல் இன்னா
கிழமை யுடையாரைக் கீழ்ந்திடுதல் இன்னா
வளமை இலாளர் வனப்பின்னா இன்னா
இளமையுள் மூப்புப் புகல். 27

விளக்கவுரை

பெரியோர்களை வணங்கி நட்புக் கொள்ளவேண்டும். அவர்களைப் பற்றி அவதூறாகப் பேசினால் துன்பம் வரும். தன்னுடன் பிரியமுடன் பழகுபவர்களை விட்டுப் பிரிந்தால் துன்பம் வரும். செல்வம் இருப்பவர் அழகில்லாமல் இருந்தாலும், அவரை அழகுள்ளவர்களாகப் புகழ்வார்கள். செல்வம் இல்லாதவர் அழகுள்ளவராக இருந்தாலும் அவருக்குப் பாராட்டுக் கிடைக்காது. இளமைப் பருவத்தில் முதுமைக்குரிய தன்மைகளைப் பெற்றிருந்தால் துன்பம் வரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. பெரியோர்களை வணங்கி நட்புக் கொள்ள வேண்டும். அவர்களைப் பற்றி அவதூறாகப் பேசினால் துன்பம் வரும். துருபத மன்னனும், துரோணாச்சாரியாரும் இளம் பிராயத்தில் நண்பர்கள். வறுமை யில் வாடிய துரோணர் மன்னனாகிய துருபதனைக் காண வந்தார். ஆனால், அவன் அப்பெரியாரை மதிக்கவில்லை. அதனால் மனம், புண்பட்ட அவர் பாண்டவர்களுக்கு வில் வித்தை கற்றுத் தந்து, துருபதனைச் சங்கிலியால் பிணித்து அவன் அகந்தையை அகற்றினார். ஆகவே, சான்றோர்களை

அவமதிக்கக்கூடாது என்பது கருத்து. தன்னுடன் பிரியமுடன் பழகியவர்களை விட்டு நீங்கக் கூடாது. பிரிந்தால் துன்பம் வரும். அன்பின் சக்திக்கு வேறு எதுவும் நிகரில்லை. நம்மிடம் அன்பு காட்டுபவர்களை நிராகரித்தால், தானாகவே துன்பம் நமக்கு வரும். அன்பு என்பது தெய்வசக்தி. அந்தத் தெய்வ சக்தியை நிராகரித்தால் துன்பம்தானே வரும்? இதை உணர வேண்டும். பணம் இல்லாதவன் அழகாக இருந்தாலும், உலகத் தவர் மதிப்பதில்லை. பணம் உள்ளவன் அழகற்று இருந் தாலும் அவனை மக்கள் போற்றுவார்கள். செல்வத்தை வைத்தே அழகு நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்தப் போக்கு தவறானதுதான். எல்லாச் சிறப்புக்கும் காரணமாகச் செல்வத்தை நாமும் ஈட்டவேண்டும் என்பது உட்கருத் தாகும். இளம்பருவத்தில் ஓடி ஆடி வேலை செய்ய வேண்டும். வயோதிகன் போல் சோர்வு கொள்ளக்கூடாது. அப்படிச் சோர்வு கொண்டால் செல்வம் கிடைக்காது. செல்வம் இல்லாவிட்டால் எல்லாத் தரப்பிலிருந்தும் துன்பம் வரும் என்பது கருத்து.

அ.பொ.

பெருமை உடையாரை-பெருமைக்குரிய சான்றோர்களை. பீடழித்தல் இன்னா-அவதூறாகப் பேசுவது துன்பம்.

கல்லாதான் ஊரும் கலிமாப் பரிப்(பு) இன்னா
வல்லாதான் சொல்லும் உரையின் பயன்இன்னா
இல்லார்வாய்ச் சொல்லின் நயம்இன்னா ஆங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல். 28

விளக்கவுரை

குதிரை சவாரி செய்பவன், குதிரையை அடக்கி ஆளும் முறையினைக் கற்றிருக்க வேண்டும். அத்திறம் இல்லா விட் டால் துன்பம் வரும். கல்லாதவன் சொற்கள் துன்பம் தரும். செல்வ செழிப்புள்ளவன் அர்த்தம் இல்லாமல் பேசினாலும் அதைக் கேட்க பலர் வருவார்கள். ஏழையின் பேச்சு அர்த்த முள்ளதாக இருந்தாலும் எடுபடாது. கல்வியறிவு இல்லாதவன் சபையில் பேசினால் எடுபடாது. இப்பொருளில் இப்பாடல்

அமைந்துள்ளது. குதிரை சவாரி செய்பவன், அதை அடக்கி ஆளும் திறன் பெற்றிருக்க வேண்டும். இல்லாவிடில் ஏதேனும் பள்ளத்தாக்கில் அது அவனைச் சாய்த்து விடும். அல்லது விபத்துகளில் சிக்கவைக்கும். நினைத்த இடத்திற்குச் செல்ல முடியாது. கட்டுக்கடங்காத குதிரை தான்விரும்பும் திசையில் ஓடி துன்பம் தரும் என்பதாகும். செல்வச் செழிப்புள்ளவன் அர்த்தம் இல்லாமல் உளறினாலும் அதை அர்த்தமுள்ளது போல் நினைப்பார்கள். செல்வம் இல்லாத ஏழை, கருத்துள்ள கருத்துக்களைக் கூறினாலும் ஏற்கமாட்டார்கள். ஆகவே, செல்வத்தை ஈட்டுவதே எதிரிகளின் ஆணவத்தை வேரறுக்கும் கூர்வாள் என்பதைப் புரிந்து நடக்க வேண்டும். கல்வி யறிவில்லாதவன் சபையில் பேசினால் எடுபடாது; சுவாமி விவேகானந்தர் அமெரிக்கா சர்வ மத சபையில் உரையாற் றினார். மற்றக் கல்வியாளர்கள் லேடீஸ் அண்ட் ஜென்டில் மேன் என்று பேச்சை ஆரம்பித்தார்கள். ஆனால், சுவாமி விவேகானந்தர் பிரதர்ஸ் அண்ட் சிஸ்டர்ஸ் என்று தொடங் கினார். அதைக்கேட்ட அமெரிக்கர்கள் பலத்த கைத்தட்டலை அளித்தார்கள். அந்தஒரேவரியில் இந்துமதத்தின் லட்சியத்தை சுவாமிஜி கூறிவிட்டார். எல்லோரிடம் அழியாத ஆத்மஜோதி பிரகாசிக்கிறது. ஆகவே, அனைவரும் சகோதர, சகோதரிகளே என்று அவர் கூறியதை அமெரிக்கர்கள் உடனே புரிந்து கொண்டார்கள். இத்தகைய உண்மை கல்வி, அறிவில்லாத வர்கள் பேசினால் எவ்விடத்திலும் எடுபடாது என்பது பொருளாகும்.

அ.பொ.

கல்லாதவன் ஊரும்-கல்வி கற்காதவன் ஊரும். கலிமாப்பரிப்பு இன்னா-குதிரையை ஆளும் திறம் இல்லாதவன் சவாரி செய்வது துன்பம்.

குறியறியான் மாநாகம் ஆட்டுவித்தல் இன்னா
தறியறியான் கீழ்நீரிப் பாய்ந்தாடல் இன்னா
அறிவறியா மக்கள் பெறல் இன்னா இன்னா
செறிவிலான் கேட்ட மறை. 29

விளக்கவுரை

மந்திரம் தெரியாதவன் பாம்பை ஆடவைக்க முயல்வது துன்பம் தரும். நீரில் நீச்சலடிக்க முயலுபவன் கட்டையின் தன்மை அறியாமல், நீச்சல் அடித்தால் துன்பம் அடைவான். தந்தையின் துன்பத்தை மகன் அறியவில்லை என்றால், அந்த மகனே துன்பமாவான். இரகசியத்தைக் காப்பாற்றாதவர் களிடம் சொன்னால் துன்பம் வரும். இப்பொருளில் இப் பாடல் அமைந்துள்ளது. மந்திரம் தெரியாதவன் பாம்பை ஆடவைக்க முயல்வது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. ஏனெனில், பாம்பு மந்திரத்திற்குக் கட்டுப்படும். மந்திரம் தவறாக இருந்தால் உடனே கடிக்கும். ஆகவே, மந்திரம் தெரியாதவர்கள் பாம்பை ஆடவைக்க முயல்வது ஆபத் தாகும். நீரில்நீச்சல் அடிக்கமுயல்பவன், கட்டையின் தன்மையை அறியாமல் செய்தால், துன்பம் அடைவான் என்று கூறப் பட்டது. கட்டை உடையும் தறுவாயில் இருக்கலாம். அல்லது வேறு ஏதேனும் குறை இருக்கலாம். அதை அறிந்து பாதுகாப் பாக நீச்சல் அடிக்க வேண்டும். இல்லாவிடில் நீரில் மூழ்கி உயிர் துறக்க நேரும் என்பதாகும். தந்தையின் துன்பத்தை மகன் அறியவில்லை யென்றால், மகனே துன்பமடைவான் என்று கூறப்பட்டது. தந்தைக்கு உள்ள உண்மையான துன்பம் என்ன? என்பதை மகன் காணவேண்டும். அதை அறியும் அறிவு இல்லாவிடில் பல நஷ்டங்களும், துன்பமும் வரும் என்பதாகும். தந்தைக்கு உள்ள நோய் தவறாகக் கணக்கிடப் பட்டால் என்ன ஆகும்? பொருள் நஷ்டம் ஏற்படும். நோயும் குணமாகாது. இதைப்போல பல சான்றுகள் சொல்லலாம். ஆகவே, தந்தைக்குரிய உமையான துன்பங்களை மகன் சரியாக அறியவேண்டும் என்பது கருத்து. ரகசியங்களைக் காப்பாற்றும் ஆற்றல் இல்லாதவர்களிடம் கூறினால் துன்ப மும், சங்கடமும் வரும். இரகசியமாக இருக்க வேண்டிய விஷயங்கள் ரகசியமாகவே இருக்க வேண்டும். நம் தேசத்தின் பாதுகாப்பு பற்றிய ரகசியங்கள் வெளிவரக்கூடாது. அப்படி வந்தால் நாட்டுக்கு ஆபத்து வரும். அதேபோல் மனிதர்கள்

இரகசியங்களைக் காப்பாற்றவில்லையென்றால் வீட்டுக்கு ஆபத்து வரும். ஆகவே, இரகசியங்களை காக்கும் ஆற்றல் இல்லாவர்களிடம் அதை சொல்லக்கூடாது என்பது கருத்து.

அ.பொ.

குறியறியான்-மந்திரம் அறியாதவன். மாநாகம்-பாம்பை ஆட்டுவித்தல்-ஆடச்செய்வது. தறியறியான்-நீச்சல் அடிக்கும்முன் எச்சரிக்கை இல்லாமை.

நெடுமரம் நீள்கோட்(டு) உயர்பாய்தல் இன்னா
கடுஞ்சின வேழத்(து) எதிர்சேறல் இன்னா
ஒடுங்கி யரவுறையும் இல்லின்னா இன்னா
கடும்புலி வாழும் அதர். *30*

விளக்கவுரை

உயரமான மரத்தின் மீது ஏறி நின்று, அந்தக் கிளையைப் பிடித்துக் கீழே குதிக்க முயன்றால் துன்பம் வரும். மதம் பிடித்த யானையிடம் அலட்சியம் காட்டினால் துன்பம் தரும். பாம்புகள் சுற்றிலும் இருக்கக் கூடிய வீட்டில் வசிப்பது துன்பம்தரும். புலிகள் வாழும் காட்டில் அசட்டுத் தைரியத்தில் செல்வது துன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. உயரமான மரத்தின் மீது ஏறி நின்று அந்தக் கிளையைப் பிடித்துக் கீழே குதிக்க முயன்றால் துன்பம் வரும் என்று கூறப்பட்டது. ஏனெனில், கிளை முறிந்து போகலாம். அதனால் தரையில் விழுந்து காயம் ஏற்படலாம். அல்லது உயிருக்கே கூட ஆபத்து வரலாம் என்பதாகும். மதம் பிடித்த யானையிடம் அலம்சியம் காட்டக் கூடாது. யானைப் பாகன் அங்குசம் கொண்டும், பிறவழிகளிலும் அதை கட்டுப்படுத்த வேண்டும். அலசியம்காட்டினால் மதம்கொண்ட யானையால் மனிதர்களுக்கு ஆபத்துவரும். கடைகள், வீடுகள் சேதமடையும் என்பது கருத்து. பாம்புகள் சுற்றித்திரியும் வீட்டில் வசிப்பது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. பகலில் பாம்பு வந்தால் காணமுடியும்; இரவு தூங்கும்போது காண இயலாது. அந்தச்

சமயம் பாம்புகளால் ஆபத்து வர வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, பாம்புகள் சுற்றித்திரியும் சூழல் உள்ள வீட்டில் வசிப்பது, துன்பம் தரும் என்பது கருத்து. புலிகள் வாழும் காட்டில் அசட்டுத் தைரியத்தில் செல்லக்கூடாது. ஏனெனில், புலிகள் திடீரென்று தாக்கினால் உயிரைவிட நேரும். ஒரு மனிதனுக்குத் தைரியம் தேவைதான். ஆனால் அசட்டுத் துணிச்சல்கூடாது. தைரியம்என்பது வீரம். அசட்டுத் தைரியம் என்பது கோழைத்தனம் இவ்விரண்டுக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொண்டு எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

நெடுமர நீள்கோட்டு உயர்பாய்தல் இன்னா-உயரமான மரத்தின் மீது ஏறி, கிளையைப் பிடித்துக் கொண்டு கீழே குதிப்பது துன்பம். கடுஞ்சின வேழத்து-கோபம் கொண்ட யானையிடம்.

பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா
எண்ணறியா மாந்தர் ஒழுகுநாள் கூற்றின்னா
மண்ணில் முழவின் ஒலியின்னா ஆங்கின்னா
தண்மை யிலாளர் பகை. 31

விளக்கவுரை

பழுதான யாழினைப் பயன்படுத்திப் பாடுவது துன்பம் தரும். சோதிடம் தெரியாதவன் அதைக் கூறினால் கெட்ட பலனே உண்டாகும். மத்தளத்தில் கடஞ்சாந்து இல்லை யென்றால் துன்பம் வரும். நல்ல தன்மையில்லலாதவனை நட்புக் கொண்டாலும், பகைத்தாலும் துன்பமே வரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. பழுதான யாழினைப் பன்படுத்திப் பாடுவது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. பாட்டும் இசையும் தெய்வத் தன்மை வாய்ந்தது. இசைக் கருவிகள் பழுதடையாமல் இருந்தால்தான் தெய்வீகத் தன்மை வெளிப்படும். இல்லாவிடில் பாட்டும் இசையும் கெடும். அதனால் துன்பமே மிஞ்சும் என்பது பொருளாகும். மத்தளத்தில் கருஞ்சாந்து இல்லை யென்றால் துன்பம் வரும்

என்று சொல்லப்பட்டது. மத்தளங்கள் கம்பீரமான இசையைத் தரக்கூடியவை. அதன் தோல்கள் உறுதியாக இருக்க வேண்டும். அதற்காகக் கருஞ்சாந்து இடுவார்கள். அப்படி இடவில்லையென்றால் இசை ரசிக்கும்படி இருக்காது என்பது கருத்து. நல்ல தன்மையில்லாதவனை நட்புக் கொண்டாலும், பகைத்தாலும் துன்பம் வரும் என்று சொல்லப்பட்டது. நண்பன் கூறும் நல்ல கருத்துக்களை நல்ல தன்மையில்லாதவன் கேட்கமாட்டான். அதனால் துன்பம் வரும். அத்தகையவனைப் பகைத்தாலும் தீமையே வரும். ஏனெனில், நல்ல தன்மை இல்லாதவன் எதற்கும் துணிந்த கயவனாக இருப்பான். அதனால் துன்பம் வரும் என்பது கருத்து. ஆகவே, அத்தகைய தீயவனை விட்டு நீங்கியிருத்தலே நன்மை தரும் என்பது உட்கருத்தாகும். அதாவது அத்தகைய கயவனிடம் நட்பும் கூடாது; பகையும் கூடாது. விலகியே இருக்க வேண்டும். கயவர்கள் என்பவர்கள் புறத்தில் மனிதர்களைப்போல் இருந்தாலும் அவர்கள் மிருகங்களே. மிருகங்களுக்கு அன்பு தெரியாது பண்பு தெரியாது. ஒழுக்கம் தெரியாது. அத்தகைய மனிதர்களைக் கண்ணால் காண்பதைக்கூட, தவிர்க்க வேண்டும்.

அ.பொ.

பண்ணமையா யாழின் கீழ்ப்பாடல் பெரிதின்னா-பழுதான யாழினைப் பயன்படுத்திப் பாடுவது துன்பம் தரும். எண்ணறியா மாந்தர் ஒழுகுநாள் கூற்றின்னா-சோதிடம் தெரியாதவன் சொல்வதைக் கேட்டது துன்பம்.

தன்னைத்தான் போற்றா(து) ஒழுகுதல் நன்கின்னா
முன்னை உடையார் புறமொழிக் கூற்றின்னா
நன்மை யிலாளர் தொடர்பின்னா ஆங்கின்னா
தொன்மை யுடையார் கெடல். 32

விளக்கவுரை

ஒருவன் தன்னைக் கட்டுப்படுத்தி, பாதுகாப்புடன் வாழவேண்டும். மற்றவர்களை நம்பினால் துன்பம் வரும்.

தன்னிடம் பழகுகிறவர்களிடம் குறை இருந்தால்,நேரடியாகச் சொல்லித் திருத்த முயலவேண்டும். அப்படிச் செய்யாமல் வெளியில் சொல்லித் திரிந்தால் துன்பம் வரும். தீய இயல்பு கொண்டவர்களிடம் நட்பு வைத்தால் துன்பம் வரும். பரம்பரை பரம்பரையாகப் பழகி வந்தவரை விலக்கினால் துன்பம் வரும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. ஒருவன் தன்னைக் கட்டுப்படுத்தி, பாதுகாப்புடன் வாழ வேண்டும். மற்றவர்களை நம்பினால் துன்பம் வரும் என்று கூறப்பட்டது. மற்றவர்களே நம்மைப் பாதுகாப்பார்கள் என்று நினைக்காமல், முன்னெச்சரிக்கையுடன் நமக்கு நாமே பாதுகாப்புத் தேடிக் கொள்ள வேண்டும். இந்த அறிவு இல்லா விட்டால் பகைவர்களால் துன்பம் வரும். பகைவர்களை எதிர்கொள்ளும்போது தகுந்த பலமும், பாதுகாப்பும் அவசியம். இல்லாவிடில் இரத்தக் காயம் போன்ற துன்பங்கள் வரும் என்பது பொருளாகும். தன்னிடம் பழகுகிறவர்களிடம் குறை இருந்தால் நேரடியாகச் சொல்லி திருத்தவேண்டும். அதைவிட்டு வெளியே சொல்லிக் கொண்டு திரியக்கூடாது என்று கூறப்பட்டது. அப்படி சொல்லித் திரிந்தால் சம்பந்தப் பட்டவர்களிடம் பகைமை வரும். அதனால் நமக்குத் துன்பம் தான் வரும். நேரடியாகப் பேசினால் நம்மிடம் மதிப்பு உண்டாகும். திருந்துவதற்கும் வாய்ப்பு உண்டாகும். ஆகவே, குறைகண்ட விடத்தில் நேருக்கு நேராகப் பேசுவதே நல்லது. தீய இயல்பு கொண்டவர்களிடம் நட்பு வைத்தால் துன்பம் வரும் என்று திரும்ப, திரும்ப இன்னா நாற்பது கூறுகிறது. நட்பில் கவனம் தேவை என்பதால் திரும்ப, திரும்ப அறி வுறுத்தப்படுகிறது. பரம்பரை பரம்பரையாகப் பழகி வந்தவரை விலக்கினால், துன்பம் வரும் என்று கூறப்பட்டது. பரம்பரை என்பது தனிச்சிறப்பு உடையது. அந்த வரிசையில் வந்தவர் களை அரவணைத்துச் செல்லவேண்டும். இல்லாவிட்டால் ஏதேனும் ஒருவகையில் அவர்களால் கெடுதல் செய்யமுடியும். அதைத் தவிர்க்க வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

தன்னைத்தான் போற்றாது-தன்னைப் பாதுகாத்துக் கொள்ளாமல். முன்னை உரையார்-நேராகக் கூறாமல்; புறமொழிக் கூற்றின்னா-புறத்தில் பேசுதல்.

கள்ளுண்பான் கூறும் கருமப் பொருளின்னா
முள்ளுடைக் காட்டில் நடத்தல் நனியின்னா
வெள்ளம் படுமாக் கொலையின்னா ஆங்கின்னா
கள்ள மனத்தார் தொடர்பு. 33

விளக்கவுரை

மது அருந்துபவன் சொற்கள் அர்த்தம் உள்ளவையாக இருப்பதில்லை. முள் நிறைந்த காட்டில் வெறுங்காலுடன் பயணம் செய்வது துன்பம் தரும். காட்டு வெள்ளத்தில் அடித்து வரும் எந்த விலங்கையும் கொல்ல முயல்வது, துன்பம் தரும். வஞ்சனை எண்ணம் கொண்டவர்களிடம் நட்புக்கொண்டால் துன்பம் வரும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. மதுஅருந்துபவன் சொற்கள் அர்த்தம் உள்ளவையாக இருப்ப தில்லை. ஏனெனில், மது அவன் மூளையைப் பாதிப்படையும் படி செய்கிறது. மூளை பாதிப்புக்குள்ளானால் எப்படி அர்த்தம் உள்ள சொற்களைக்கூற முடியும்? என்பதைச் சிந்திக்க வேண்டும். அதனால்தான் குடிகாரர்கள் நல்ல கருத்துக்களை எப்போதாவது கூறினாலும், அதை மக்கள் ஏற்பதில்லை. ஆகவே, மது அருந்துவதை விடவேண்டும். முள் நிறைந்த காட்டில் வெறுங்காலுடன் பயணம் செய்வது துன்பம் தரும் என்று சொல்லப்பட்டது. செருப்பு மற்றும் பாதுகாப்புச் சாதனங்களைப் பயன்படுத்திப் பயணம் செய்ய வேண்டும். இல்லாவிடில் முட்களும், கற்களும் காலை பதம் பார்க்கும். இரத்தம் கசியும்; இன்னும் பலவித துன்பங்கள் வரும் என்பதாகும். காட்டுவெள்ளத்தில் அடித்துவரும் எந்த விலங்கையும் கொல்ல முயல்வது துன்பம் தரும் என்று சொல்லப்பட்டது. ஏனெனில், துஷ்டமிருகங்கள் நம்மைத் தாக்கக்கூடும். காட்டு

வெள்ளத்தில் எத்தகைய கொடிய விலங்குகள் வருகின்றன என்பது நமக்குத் தெரியாது. ஆகவே, அந்தச் சமயத்தில் விலகி யிருப்பதே பாதுகாப்பு என்பதாகும். வஞ்சனை எண்ணம் கொண்டவர்களிடம் நட்புக் கொண்டால் துன்பம் வரும் என்று சொல்லப்பட்டது. வஞ்சகன் சகுனியிடம் நட்பு வைத்த தால் கௌரவர் கூட்டமே அழிந்தது. கௌரவர் கூட்டத்தை அழிப்பதே அவன் நோக்கம். அத்தகைய வஞ்சக எண்ணத்தை உள்ளே வைத்து அவன் உறவாடினான். அத்தகைய வஞ்சகர் களை அடையாளம் கண்டு, நீக்க வேண்டும் என்பது பொரு ளாகும்.

அ.பொ.

கள்ளுண்பான் கூறும் கருமப் பொருளின்னா-குடிப்பவனிடம் ஒரு காரியத்தைப் பேசுதல் துன்பம். முள்ளுடைக் காட்டில்-முள் நிறைந்த கானகத்தில். நடத்தல்-வெறுங்காலுடனே நடத்தல்.

ஒழுக்கம் இலாளர்க்கு உறவுரைத்தல் இன்னா
விழுத்தகு நூலும் விழையாதார்க் இன்னா
இழித்த தொழிலவர் நட்பின்னா இன்னா
கழிப்புவாய் மண்டிலம் கொட்பு. 34

விளக்கவுரை

தனக்கு ஏற்படும் துன்பங்களைக் கெட்டவர்களிடம் கூறினால் துன்பமே வரும். நல்ல நூல்களை விரும்பிப் படிக் காதவர்களுடன் நட்பு வைத்தல் துன்பம் தரும். அறிவுடைய வர்களால் பழிக்கப்பட்ட நட்பை நீக்கவேண்டும். நல்லவர்கள் வெளியேறும் நாட்டில் நாம் குடியேறினால், துன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. தனக்கு ஏற்படும் துன்பங் களைக் கெட்டவர்களிடம் கூறினால் துன்பமே வரும் என்று சொல்லப்பட்டது. கெட்டவர்கள் நல்ல சிந்தனையற்றவர்கள்; மற்றவர்கள் துன்பத்தில் அவர்கள் மகிழ்கிறவர்கள். அவர் களிடம் துன்பத்தைச் சொன்னால், அதுமேலும் அதிகமாகும் என்பதை அறியவேண்டும். நல்ல நூல்களை விரும்பிப் படிக்

காதவர்களிடம் நட்பு வைத்தால் துன்பம் தரும் என்று கூறப் பட்டது. நல்ல நட்பு வைக்க வேண்டும் என்பதைத் திரும்ப, திரும்ப இன்னா நாற்பது கூறுகிறது. அதற்கு நாமும் பலமுறை விளக்கம் அளித்து விட்டோம். நல்ல நூல்களைப் படிக் காதவர்களிடம் நட்புவைக்கக்கூடாது என்று இன்னா நாற்பது கூறுகிறது. ஒருவர் படிக்கும் நூல்களை வைத்தே, அவர் களுடைய குணங்களை எடைபோட்டு விடலாம். நல்ல நூல் களைப் படிக்க விரும்பாதவர்கள் நன்மை செய்ய மாட் டார்கள். இரக்க குணம் அவர்களிடம் இருக்காது. பிறர் துன்பத்தைப் போக்க முயலமாட்டார்கள். பொதுவாக அறநெறியில் நிற்கமாட்டார்கள். ஆகவே, அந்த நட்பு துன்பமே தரும் என்பது பொருளாகும். பழிக்கப்பட்ட நட்பை நீக்க வேண்டும். நல்லவர்கள் வெளியேறும் நாட்டில் நாம் குடியேறக் கூடாது என்று இன்னா நாற்பது கூறுகிறது. நல்லவர்கள் நட்பு இல்லாவிடில் நம் வாழ்க்கை தீயவழியில் சென்று விடும். ஆகவே, நல்ல நட்பு வேண்டும் என்று அது திரும்ப, திரும்பக் கூறுகிறது.

அ.பொ.

ஒழுக்கம் இலாளர்க்கு உறவுரைத்தல் இன்னா-தனக்கு ஏற்படும் துன்பங்களை நல்லெண்ணம் இல்லாதவர்களிடம் கூறினால் துன்பம். விழுத்தகு நூலும்-சிறந்த நூல்களும்.

எழிலி யுறைநீங்கின் ஈண்டையார்க்(கு) இன்னா
குழலின் இயமரத்(து) ஓசைநன்(கு) இன்னா
குழவிகள் உற்ற பிணிஇன்னா இன்னா
அழகுடையான் பேதை எனல். 35

விளக்கவுரை

மழை பொழியாவிடில் பூமியில் வாழும் உயிர்கள் துன்ப மடையும். புல்லாங்குழல் போன்ற மரங்களின் ஓசை துன்பம் தரும். நோய்களை வயதானவர்கள் தாங்கிக் கொள்வார்கள். குழந்தைகள் தாங்க முடியால் துன்பம் அடைவார்கள். அழ

குடையவன் அறிவுள்ளவனாக இருப்பான் என்று கருதுவது துன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. மழை பொழியாவிடில் எந்த உணவும் கிடைக்காது. எந்த வியாபாரமும் நடக்காது. எந்தத் தொழிலும் சிறக்காது. மக்கள் சோகம் அடைவார்கள். நோய்வாய்படுவார்கள். பகைமை வளரும். ஒழுக்கம் கெடும். ஆகவே, பூமியில் மழை பொழிய வேண்டும். பொழியா விட்டால் எல்லா உயிர்களும் துன்பம் அடையும் என்பது பொருள். சில மரங்கள் புல்லாங் குழல்போல் ஓசையை எழுப்பும். ஆனால், அந்தச் சப்தம் துன்பம் தரும் என்று கூறப்பட்டது. புல்லாங்குழல் இசை என்பது தெய்வீகம் நிறைந்தது. ஆனால், மரத்தில் அது போல் வரும் ஓசை போலியானது. ஆகவே, துன்பம் தரும் என்பதாகும். குழந்தைகளுக்கு நோய் வந்தால் உடனே அதை நீக்க முயலவேண்டும். ஏனெனில், குழந்தைகள் சிறுநோயைக்கூடத் தாங்கமாட்டார்கள். சரியாகக் கவனிக்கவில்லை என்றால் ஆபத்து நேரும். பெரியவர்கள் நோய்களைத் தாங்கும் தன்மை கொண்டவர்கள்; குழந்தைகள் தாங்கும் தன்மை இல்லாதவை என்னபதை அறிந்து, நம்முடைய அணுகுமுறை விரைவுடையதாக இருக்க வேண்டும். அழகுக்கும் அறிவுக்கும் சம்பந்தம் இல்லை. அழகற்றவர்கள், இந்த உலகே பயன்பெறும் விதத்தில் சாதனைகள் செய்வதைக் காண்கிறோம். வெளிஅழகு நிறைந்தவர்கள் தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு முடியாமல் திண்டாடுவதையும் காண்கிறோம். ஆகவே, அழகுடையவர்கள் அறிவுள்ளவர்களாகவும் இருப்பார்கள் என்று கூறமுடியாது.

அ.பொ.

எழிலி யுறைநீங்கின்-மழை பொழியாவிட்டால். குழலின் இனிய மரத்து-புல்லாங்குழல்போல் ஓசை எழுப்பும் மரங்கள்.

பொருளிலான் வேளாண்மை காமுறுதல் இன்னா
நெடுமாட நீள்நகர்க் கைத்தின்மை இன்னா
அடுமனை பார்த்திருந்(து) ஊணின்னா இன்னா
கெடும்இடம் கைவிடுவார் நட்பு. 36

விளக்கவுரை

செல்வனைப்போல், தானும் கொடை அளிக்கலாம் என்று செல்வம் இல்லாதவன் விரும்பினால், துன்பம் வரும். கிராமங்களில் வாழ்வது போல் நகரங்களில் செல்வம் இல்லாமல் வழ முயன்றால், துன்பம் வரும். அடுத்தவர் வீடு சென்று தன்பசியை ஆற்றிக் கொள்ளலாம் என்று நினைப்பது துன்பம் தரும். வறுமையில் விலகும் நட்பு தீமையைத் தரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. செல்வனைப் போல் தானும் கொடை அளிக்க நினைத்தால், துன்பம் வரும் என்று சொல்லப்பட்டது. ஏனெனில் வறுமையில் இருப்பவன் இருப்பதையும் கொடையாகக் கொடுத்தால், நடுத்தெருவில் தான் நிற்பான். வாழ்க்கையே நடத்த முடியாத அவல நிலைக்குத் தள்ளப்படுவான். ஆகவே, வறியவன் கொடை யாளியாக ஆக நினைப்பது துன்பம் தரும் என்பதாகும். கிராமங்களில் செல்வம் இல்லாவிட்டாலும், நாட்களைத் தள்ளி விடலாம். செலவும் மிகவும் சொற்பமாகவும் இருக்கும். அதேபோல் நகரங்களில் வாழலாம் என்று நினைத்துச் சென் றால் துன்பம் வரும். எடுத்ததற்க்கெல்லாம் பணம் செலவிட வேண்டும் அங்கே. ஆகவே, துன்பத்தைத் தவிர்க்க, செல்வ மில்லாதவர்கள் நகரத்திற்குச் செல்லக்கூடாது. ஏதேனும் தொழில்செய்யவோ.. வியாபாரம் செய்யவோ முன்னேற்பாடு செய்து கொண்டு போகலாம் என்பதாகும். அடுத்தவர் வீட்டிற்குச் சென்று பசியை ஆற்றிக் கொள்ளலாம் என்று நினைப்பது துன்பம் தரும். அதனால் அவமானமும், ஏச்சும் தான் கிடைக்கும் உழைத்து உண்ணவேண்டும். எளிய உணவாக இருந்தாலும் தன்வீட்டில் இருந்து கொண்டேதான் உண்ண வேண்டும். அதுவே சரியான வழியாகும். வறுமை வந்தபோது விலகுகின்ற நட்புப் போலியானது. அதை நீக்குவதே நல்லது. நீக்காவிடில் துன்பம் வரும் என்பதாம்.

அ.பொ.

பொருளிலான்-செல்வம் இல்லாதவன். வேளாண்மை காமுறுதல் இன்னா-கொடை அளிக்க விரும்புவது துன்பம் தரும்.

நறிய மலர்பெரிதும் நாறாமை இன்னா
துறையறியான் நீரிழிந்து போகுதல் இன்னா
அறியான் வினாப்படுதல் இன்னாவாம் இன்னா
சிறியார்மேல் செற்றங் கொளல். 37

விளக்கவுரை

அழகுள்ள பூக்கள் மணம் இல்லாமல் இருந்தால், துன்பம் தரும். நீர்த் துறையின் ஆழம் அறியாமல் நீராட முயல்வது துன்பம் தரும். ஒரு நல்லல நூலின் பொருள் அறியாதவரிடம் சென்று, பொருள் கேட்பது துன்பம் தரும். சிறுவர்கள் செய்யும் செயலைக் கண்டு கோபப்படுதல் துன்பம் தரும். இப் பொருளில் இன்னா நாற்பதின் இப்பாடல் அமைந்துள்ளது. அழகுள்ள பூக்கள் மணமில்லாமல் இருந்தால் துன்பம் தரும் என்று கூறப்பட்டது. அழகு என்பது மணத்துடன் இருக்கும் போதுதான் உண்மையான அழகு. வெளிஅழகால் எப்பயனும் இல்லை. அதேபோல் நன்கு கற்றவர்கள் அதைப் பிறருக்குப் புரியும்படி சொல்லும் ஆற்றலும் பெற்றிருக்க வேண்டும். இல்லாவிடில் மணமில்லாத மலருக்குத்தான் அவர்களும் சமமாவார்கள் என்பது கருத்து. நீர்த்துறையில் ஆழம் அறி யாமல் நீராட முயல்வது துன்பம் தரும். நீர்த்துறை என்பது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆழம் குறைவாகவும் இருக்கலாம். ஆழம் அதிகமாகவும் இருக்கலாம். ஆழம் அதிகமாயிருந்து, நீச்சல் தெரியாதவர் இறங்கினால் பெரும் ஆபத்து நேரும். ஆகவே, ஆழம் தெரியாமல் நீர்த்துறையில் எக்காரணம் கொண்டும் இறங்கக்கூடாது என்பது கருத்து. ஒருநல்ல நூலின் பொருள் அறியாதவரிடம் சென்று பொருள் கேட்பது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. பொருள் தெரியாதவர் ஒரு சிறந்த நூலுக்குத் தவாறான பொருளையே தருவார். அதனால் பயன் இல்லை. தவறாகப் பொருள் புரிந்து கொண்டால் துன்பம் வரும் என்பது கருத்து. சிறுவர்களின் செயல்கண்டு கோபப் படுதல் துன்பம் தரும். சிறுவர்களுக்கு அன்பின் மூலமே பாடம் கற்றுத்தர முடியும். கோபம் காட்டினால் முரட்டுத் தனம் வரும். அதனால் துன்பம் வரும் என்பது கருத்து.

அ.பொ.

நறிய மலர் பெரிது நாறாமை இன்னா-அழகுமிக்க பூவில் மணம் இல்லாவிடில் துன்பம். துறை அறியான்-ஆழம் தெரியாத நீர்நிலையில் இறங்குபவன்.

பிறன்மனையாள் பின்னோக்கும் பேதைமை இன்னா
மறமிலா மன்னர் செருப்புகுதல் இன்னா
வெறும்புறம் வெம்புரவி யேற்றின்னா இன்னா
திறனிலான் செய்யும் வினை. *38*

விளக்கவுரை

அடுத்தவர் மனைவியை அடைய நினைப்பது துன்பம் தரும். குதிரைசவாரி செய்பவர்கள் சேணம் இல்லாத நிலையில், சவாரி செய்ய நினைப்பது துன்பம் தரும். தன் செயலில் திட்டங்கள் இல்லாமல் இறங்கினால் துன்பம் வரும். இப் பொருளில் இப்பாடல் உள்ளது. அடுத்தவன் மனைவியை அடைய நினைப்பது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. இராவணன் தன் மனைவி மண்டோதரி இருக்க, இராம பிரானின் துணைவியாகிய சீதா பிராட்டியாரை அடைய முயன்றான். அதனால், சிவ பக்தியில் சிறந்தவனாக இருந்தும், அவன் புகழை இகழ்ந்து, போர்க்களத்தில் மாண்டான். பெயரைக் கெடுக்கக்கூடிய, அச்சத்தைத் தரக்கூடிய அந்தச் செயல் துன்பம் தரும் என்பதாகும். சேணம் இல்லாமல் குதிரை சவாரி செய்வது துன்பம் தரும் என்று கூறப்பட்டது. குதிரையின் வேகம் அதிகரிக்கும்போது சேணம் போன்ற பாதுகாப்பு வசதிகள் இருக்க வேண்டும். இல்லாவிடில் வேகம் அதிகரிக்கும்போது, பல ஆபத்துக்கள் நேரலாம். சில சமயம் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம் என்பது கருத்து. தன் செயலில் திட்டங்கள் இல்லாமல் செயல்படுவது, துன்பம் தரும் என்று கூறப்பட்டது. தன்னிடம் உள்ள செல்வம், செயலுக்கு செய்யவேண்டிய செலவு, செயல் முடிந்த பிறகு வரும் லாபம், செயலுக்கு வரக்கூடிய தடைகள், அந்தத் தடைகளை முறியடிக்கும் விதம் ஆகியவற்றை நன்கு அறிந்து,

திட்டங்கள் தீட்டிய பிறகுதான் செயலில் இறங்க வேண்டும். திட்டமில்லாத செயல் பல்வேறு துன்பங்களில் ஆழ்த்தும் என்பது கருத்து.

அ.பொ.

பிறன்மனையாள்-அடுத்தவன் மனைவியை. பின்னோக்கும்-அடைய நினைக்கும்.

கொடுக்கும் பொருளில்லான் வள்ளன்மை இன்னா
கடித்தமைந்த பாக்கினுள் கற்படுதல் இன்னா
கொடுத்து விடாமை கவிக்(கு) இன்னா இன்னா
மடுத்துழிப் பாடா விடல். 39

விளக்கவுரை

செல்வம் இல்லாதவர் மற்றவர்க்குக் கொடுக்க வேண்டும் என்ற குணம் உள்ளவராக இருப்பார். அக்குணமே அவருக்குத் துன்பம் தரும். கடிந்து சொல்வதற்குரிய குற்றம் ஒருவரிடம் இருந்தால், அவருக்குப் பெரிய துன்பம் தரும். தன்னைப் பாடும் புலவனுக்கு மன்னன் பரிசு தராமல் இருந்தால் துன்பம் தரும். தடையிருக்கும் இடத்தில் புலவன் பாடினால் துன்பம் வரும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. செல்வம் இல்லாதவர் மற்றவர்க்குக் கொடுக்க வேண்டும் என்ற குணம் உடையவராக இருப்பார். அந்தக் குணம் துன்பம் தரும் என்று கூறப்பட்டது. செல்வம் இல்லாதவர் செல்வத்தைப் பெற முயலவேண்டும். ஒரு மனிதனால் முடியாத காரியம் எதுவும் இல்லை. ஏனெனில், மனிதனுக்குள் இறைசக்தி உள்ளது. தீய குணங்களால் அது மறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தீய குணங்களை விரட்டி எல்லா ஆற்றலையும் பெற வேண்டும். செல்வம் திரட்டி மற்றவர்களுக்கு வழங்கவேண்டும். தர வேண்டும் என்ற குணம் இருந்தால் மட்டும் போதாது. அது குறித்துத் துன்பம் அடைவதும் கோழைத்தனம். செயல் மூலம் அனைத்தையும் மாற்றியமைக்க முடியும் என்பது கருத்து. தன்னைப் பாடும் புலவனுக்கு மன்னன் பரிசளிக்கா

விட்டால், துன்பம் தரும் என்று கூறப்பட்டது. பரிசு தராமல் இருப்பது தமிழ் புலமைக்கு அவமரியாதை செய்வது போன்றது. சான்றோர் மனம் புண்பட்டால் செங்கோல் தடுமாறும். மன்னன் துன்பமடைவான் என்பது கருத்து. தடையிருக்கும் இடத்தில் புலவர் பாடினால் துன்பம் வரும் என்று கூறப்பட்டது. எல்லோரும் விரும்பும் இடத்தில்தான் புலவர் பாடவேண்டும். கருத்து வேறுபாடுகள் உள்ள இடங்களில் பாடினால் சம்பந்தப்பட்டவர்களால் கலகம் போன்றவை நேரும்; துன்பம் வரும் என்பது கருத்து.

அ.பொ.

கொடுக்கும் பொருளில்லான்-பிறர்க்குக் கொடுக்கும் வசதி யில்லாதவன். வள்ளன்மை இன்னா-கொடையாளியாக விரும்புவது துன்பம் தரும்.

அடக்கம் உடையவன் மீளிமை இன்னா
துடக்கம் இலாதவன் தற்செருக்(கு) இன்னா
அடைக்கலம் வவ்வுதல் இன்னாஆங் கின்னா
அடக்க அடங்காதார் சொல். 40

விளக்கவுரை

ஐம்புலன்களை அடக்காவிடில் துன்பம் வரும். முயற்சி யில்லாமல் தன்னையே புகழ்ந்து திரிதல் துன்பம் தரும். அடைக்கலம் என்று கொடுத்த பொருளை, அவர் கேட்கும் போது தராவிடில் துன்பம் வரும். அடக்கம் இல்லாதவர்கள் சபையில் கூறக்கூடிய சொற்கள் துன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. ஐம்புலன்கள் தங்கள் இஷ்டம் போல் ஆட முயல்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்தி அடக்காவிட்டால், நட்பைக் கீழ்நிலைக்கு இழுத்துச் சென்று அழித்து விடுகிறது. ஆகவே, விவேகம் என்ற அஸ்த்திரத்தை கையாண்டு, ஐம்புலன்களை நல்வழிக்குத் திருப்பவேண்டும். தீயசெயல்களை செய்ய ஐம்புலன்கள் ஓடும். அதைத் தடுத்து ஆன்மிகச் செயல்களில் கவனத்தைத் திருப்பவேண்டும்.

இறைவனிடம் பக்தி செலுத்தி எல்லாத் தீமைகளையும் அழிக்க வேண்டும். இறைவன் நமக் குள்ளேயே இருக்கிறார் என்பதை, எக்காலத்திலும் மறக்கக் கூடாது. இறைவன் மறைக்கப்பட்டிருக்கிறார். அத்திரையைப் பக்தியாலும், தியானத்தாலும் விலக்க முடியும். திரை விலகினால் ஐம் புலன்கள் நம் அடிமையாகிவிடும். இந்த எளிய இரகசியத்தைப் புரிந்துகொண்டு ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பது பொருளாகும். அடைக்கலம் என்று ஒருவர் கொடுத்த பொருளை, அவர் திருப்பிக் கேட்கும் போது கொடுக்க வேண்டும். தவறினால் நாணயம் தவறியவன் என்று ஊர்மக்கள் பழிப்பார்கள். நீதிமன்ற காவலில் பதில் கூறி, தண்டனை பெறவேண்டியிருக்கும் என்பதாகும். அடக்கம் இல்லாத சபையில் பேசுவது துன்பம் தரும். ஏனெனில், அடக்கமில்லா தவர்கள் நல்ல கருத்துக்களைக்கூட எதிர்ப்பார்கள். ஆகவே, அங்குப் பேசாமல் இருப்பது நல்லது என்பது கருத்து.

அ.பொ.

அடக்கம் உடையவன் மீளிமை இன்னா-ஐம்புலன்களை அடக்கா விடில் துன்பம். துடக்கம் இலாதவன் தற்செருக்கு இன்னா-முயற்சி இல்லாதவன் பெருமை கொள்வது துன்பம் தரும்.

❐ ❐ ❐

இனியவை நாற்பது

விளக்கவுரை

கடவுள் வாழ்த்து

(இன்னிசை வெண்பா)

கண்மூன் றுடையான்தாள் சேர்தல் கடிதினிதே
தொல்மான் துழாய்மாலை யானைத் தொழலினிதே
முத்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்தல் இனிது.

விளக்கவுரை

மூன்று கண்களையுடைய சிவபெருமானின் திருப் பாதங்களில் சென்று வணங்குவது மிகச் சிறந்தது. காக்கும் கடவுளாகிய திருமால் திருத்துழாய் மாலை அணிந்தவன். அவனைக் கைகூப்பி வணங்குவது மிகவும் சிறந்தது. படைக் கும் கடவுளாக விளங்கும் பிரம்மதேவன் நான்கு முகங் களைக் கொண்டவன். கல்வி தெய்வமாகிய கலைமகளின் கணவனான அவனை விரும்பி, வழிபடுவது மிகவும் இனிய தாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. இந்த உலகம் மும்மூர்த்திகளால் இயங்கிக் கொண்டிருக்கிறது. தேவர்களுக் கெல்லாம் தேவனாகிய மகாதேவன் மும்மூர்த்திகளில் முதல்வர். அவர் சக்தியை ஒரு பாகமாகக் கொண்டுத் எல்லா தெய்வங்களுக்கும் தலைவராக விளங்குகிறார். மூன்று தொழில்களும் அவராலேயே செய்யபடுகின்றன. படைக்கும் போது நான்முகனாகவும், காக்கும்போது திருமாலாகவும், அழிக்கும்போது ருத்திரனாகவும் இருந்து அவர் முத்தொழில் களைச் செய்கிறார். ஆகவே, அவருடைய திருப்பாதங்களைப்

பக்தி சிரத்தையுடன் வணங்குவது சிறந்தது என்று கூறப் பட்டது. திருமால், மகாலட்சுமியின் கணவர். உலகத்து உயிர்களைச் செல்வம் முதலான ஐஸ்வர்யங்கள் அளித்துக் காப்பவர். தீயசக்திகளை அழித்து நல்லோர்களைக் காப்பவர். ஆகவே, அவரைக் கைகூப்பி வணங்குவது சிறந்தது என்று கூறப்பட்டது. அடுத்து, கல்விக்கு அரசியாக விளங்கும், மகா சரஸ்வதியின் கணவர் பிரம்ம தேவர். அவரே எல்லா உயிர்களையும் படைக்கிறார். அவரவரின் கர்மவினைகளுக்கு ஏற்ப, அவருடைய படைப்பு தொடர்வதால்தான் உலகத்தில் இயக்கம் நடைபெறுகிறது. இந்த இயக்கம் நடைபெறும் காரணத்தால் கர்ம வினைகள் அழிகின்றன. ஒருகட்டத்தில் துறவு கை கூடுகிறது. தியானம், ஒழுக்கம் முதலியவற்றின் துணை கொண்டு உயிர்கள், தாங்கள் தெய்வத்தின் கூறுகள் என்று அறிகின்றன. இதையே முக்தி என்கிறோம். ஆகவே, மும்மூர்த்திகளையும் வணங்கி இனியவை நாற்பது நீதி நூல் தொடங்கப்படுகிறது.

அ.பொ.

கண் மூன்றுடையான்-மூன்று கண்களைக் கொண்ட சிவபெருமான். தாள் சேர்தல்-திருவடியை வணங்குதல். தொழல் இனிதே-வணங்குதல் இனிமை. முகநான்குடையானை-பிரம்ம தேவனை.

❑ ❑ ❑

1. நூல்

பிச்சைபுக் காயினும் கற்றல் மிகவினிதே
நற்சபையில் கைக்கொடுத்தல் சாலவும் முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவும் மேலாயார்ச் சேர்வு. 1

விளக்கவுரை

அறிவைக் கூர்மைப்படுத்தும் கல்வியைப் பிச்சை எடுத்தாவது கற்பது இனிது. அவ்வாறு கற்ற கல்வி, பெரிய சபையின் முன்பு பேசும் போது உதவக் கூடியதாக இருப்பது இனிது. புன்னகை சிந்தும் முகத்துடன் முத்துப் போன்ற பற்கள் வெளியே தெரிய பெண்கள் பேசும் வாய்ச் சொற்கள் இனிது. நல்வழிகாட்டும் அறிவில் சிறந்த சான்றோர்களின் உதவியுடன் இருப்பது மிகவும் இனிது. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. எல்லா அறிவும் நமக்குள்ளேயே இருக்கின்றன. எல்லாப் பல்கலைக்கழகங்களும் நமக்குள்ளேயே இருக்கின்றன. ஆனால், அவை தூண்டப்படவேண்டும். அந்தத் தூண்டுதலே கல்வி. அந்தக் கல்வி தூண்டு சக்தியாக இருந்து நம் அறிவைக் கூர்மைப் படுத்துகிறது. ஆகவே அந்த தூண்டு சக்தியை உருவாக்க பிச்சை எடுத்தாவது கல்வி கற்கவேண்டும் என்று இனியவை நாற்பது கூறுகிறது. அதோடு கற்ற கல்வி பிறருக்கு உதவும்படி செய்வது மிகவும் இனிது. பிறருக்கு உதவாத எதுவும், நமக்கு நன்மையைத் தராது. கற்ற கல்வியை மற்றவர்கள் புரியும்படி சொல்லத் தெரியாதவன், அழகாக மலர்ந்திருக்கும் மணம் இல்லாத மலரைப்போல் ஆவான். ஆகவே, கற்ற கல்வியைப் பிறருக்கு உதவும்படி நாம் கூற வேண்டும் என்பது கருத்து. பெண்கள் முத்துப் போன்ற பற்கள் தெரிய சிரிப்பது இனிமையானது. ஏனெனில், பெண்களின் புன்னகை ஒரு இளைஞனை உற்சாகப்படுத்தக் கூடியது. பெண்களின் சிரிப்புச் செயற்கரிய செயல்களை,

செய்யும் உற்சாகத்தைத் தருவதால், அது இனியது என்று கூறப்பட்டது. நல்வழி காட்டும சான்றோர்களின் உதவியுடன் இருப்பது நல்லது என்று கூறப்பட்டது. மகாபாரதக் காவியத்தில் பாண்டவர்களுக்கு வந்த பல துன்பங்களை யெல்லாம் ஸ்ரீகிருஷ்ண பகவானின் துணை கொண்டுதான், அவர்கள் கடந்தார்கள். மிகப் பெரிய பலசாலிகளைத் துரியோதனன் கொண்டிருந்தும் அவனால் வெற்றி பெற முடியாமல் போனதற்கு, ஸ்ரீகிருஷ்ணரே காரணமாகும். ஆகவே, நம்முடைய வாழ்க்கையில் வரும் மிகப் பெரிய சிக்கல்கள், துன்பங்கள் ஆகியவற்றைக் களைய நாமே முயலாமல், அறிவில் சிறந்த சான்றோர்களின் உதவியோடு அணுகவேண்டும். இதுவே பாதுகாப்பு. இதுவே விவேகம். இதுவே அறநெறி. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

பிச்சைபுக்காயினும்-பிச்சை எடுத்தாவது. சாலவும்-மிகவும்.

உடையான் வழக்கினி(து) ஒப்ப முடிந்தால்
மனைவாழ்க்கை முன் இனிது மாணாதா மாயின்
நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்
தலையாகத் தான்இனிது நன்கு. 2

விளக்கவுரை

செல்வம் பெற்றவன், இரக்க குணமுள்ளவனாக இருந்து ஏழைகளுக்கு உதவி செய்வது இனிது. இல்லற வாழ்க்கையில் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்தல் இனிது. அவ்வாறு வாழமுடியாவிட்டால், ஆசைகளை விட்டு துறவியாக ஆவது இனிது. இப்பொருளில் இப்பாடல் உள்ளது. செல்வம் பெற்றவன் இரக்க குணமுள்ளவனாக இருக்க வேண்டும். வறியவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதற்காகவே அவனுக்குச் செல்வம் தரப்பட்டிருக்கிறது. பெறுகிறவன் தாழ்ந்தவன், கொடுப்பவன் உயர்ந்தவன் என்று நினைக்கக் கூடாது. நம்முடைய தீவினைகளை அழிக்க இறைவனே

வறுமையுள்ளவனாக நிற்கிறான். பெறுவதற்கு எவருமே இல்லையென்றால், ஒருவன் எப்படி புண்ணியத்தைச் சேர்க்க முடியும்? பழைய தீவினைகளை எப்படி ஒழிக்க முடியும்? ஆகவே, கருணைக் கடலாகிய இறைவன், நமக்கு நன்மைகளைச் செய்யவே விரும்புகிறார். செல்வத்தின் மூலம் நம் தீவினைகளைக் கரைக்க அவர் வழிகாட்டுகிறார். ஆகவே, செல்வம் படைத்தவர்கள் இரக்க குணத்துடன் செயல்பட வேண்டும் என்பது கருத்து. இல்லற வாழ்க்கையில் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாத காரணத்தால்தான், பல விபரீதங்கள் நடக்கின்றன. மனம் விட்டுப் பேசி ஒருவரை யொருவர் புரிந்து கொள்ள வேண்டும். கணவன் தன் நியாயத்தை அன்புடன் சொல்லவேண்டும். மனைவி தனக்குள்ள உரிமையை அன்பாக நாசூக்காக வெளிப்படுத்த வேண்டும். இந்தப் புரிதல் உண்டாகிவிட்டால், வாழ்க்கை இனிதே செல்வது உறுதி. அவ்வாறு புரிதல் இல்லாமல் நரக வாழ்க்கை வாழ்வதைவிட, துறவியாகப் போவது சிறந்தது என்று கூறப்பட்டது. புரிதல் இல்லாத வாழ்க்கையால் சண்டையும், கூச்சலும் ஏற்பட்டு, தகாத செயல்களைச் செய்யும் நிலைக்குத் தள்ளப்படுவோம். அந்தத் தகாத செயல்களால் பாவ மூட்டை மேலும் ஏறும் துன்பமே வாழ்க்கையாகும். அடுத்து வரும் பிறவியிலும் இதே நிலை நீடிக்கும். ஆகவே, புரிந்து கொண்டு வாழ்க. இல்லாவிடில் துறவறம் செல்க என்று இனியவை நாற்பது கூறுவது இந்த அடிப்படையில்தான்.

அ.பொ.

மனைவாழ்க்கை-குடும்ப வாழ்க்கை. ஒப்ப முடிந்தால்-ஒருமித்து வாழ்ந்தால். மாணாதா மாயின்-முடியாவிட்டால்; துறத்தல்-துறவறம் பேணுதல்.

ஏவது மாறா இளங்கிளைமை முன்இனிதே
நாளும் நவைபோகான் கற்றல் மிகவினிதே
ஏருடையான் வேளாண்மை தானினிது ஆங்கினிதே
தேரின்கோள் நட்புத் திசைக்கு. *3*

விளக்கவுரை

பிறந்த பிள்ளைகள் பெற்றோர்கள் சொல்லும் சொல்லை, எந்த மறுப்பும் சொல்லாமல் கேட்டு, அதன்படி நடக்கக் கூடியது மிகமிக இனிது. குற்றம் இல்லாத வாழ்க்கையைச் சொல்லக்கூடிய இனிய நூல்களைக் கற்றுத் தேர்ச்சி பெறுவது இனிது. எல்லாத் தொழிலிலும் தலைசிறந்த தொழிலாக விளங்கும், உழவுத் தொழிலை மாடுகளைப் பெற்று உழவு செய்வது இனிது. செல்லும் திசைகளிலெல்லாம் நண்பர் களைப் பெற்றுச் செல்வது இனிது. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. பிள்ளைகள், பெற்றோர்கள் சொல்வதைக் கேட்டு நடப்பது இனியது என்று கூறப்பட்டது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது நமக்குத் தெரியும். இந்த முன்னறி தெய்வங்களை நமக்குக் கொடுத்தவன் இறைவன். அப்பெற்றோர்கள் சொல்படி நடக்காதவன், இறைவன் கட்ட ளையை மீறுவதாகவே பொருள். இறைவனின் கட்டளையை மீறுபவன் எப்படிச் சந்தோஷமாக வாழமுடியும்? ஆகவே, பெற்றோர்கள் சொல்படி கேட்கும் பிள்ளைகள்தான், வாழ்நாள் முழுவதும் துன்பத்தை முறியடித்து இன்பமாக வாழமுடியும் என்பது கருத்து. குற்றம்இல்லாத வாழ்க்கையைச் சொல்லக்கூடிய நூல்களைக் கற்று, அதன்படி செல்வது இனியது என்று கூறப்பட்டது. குற்றமில்லாத நூல்கள் நீதி நூல்கள். ஆகம நூல்கள், வேத நூல்கள் ஆகியவற்றைக் குறிக்கும். இந்த நூல்களைப் படித்தால் மட்டும் போதாது அதன்வழி நடக்க வேண்டும். அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்த, மகாத்மா காந்தியடிகள் உண்மை பேசுவதை உறுதி யாக்கிக் கொண்டார். அதனால் தேசப்பிதா என்றும், உலக உத்தமர் என்றும், மகாத்மா என்று போற்றப்படுகிறார். ஆகவே, நல்ல நூல்களைப் படிப்பதோடு வாழக்கையில் அதன்படி நடக்க, பெரும் முயற்சிகள் செய்யவேண்டும் என்பது கருத்து. எல்லாத் தொழிலிலும் சிறந்தது உழவுத் தொழில். மாடுகளின் துணைக் கொண்டு திட்டங்கள் தீட்டி, உரமிட்டு நல்ல மகசூலைப் பெறுவது இனிது. பிரயாணம் செல்லும்

இடங்களிலெல்லாம் நண்பர்களைப் பெறவேண்டும். அந்த நண்பர்கள் மூலமாக அறச் செயல்கள் செய்ய வேண்டும். இந்தச் சமுதாயம் மகிழ்ச்சியாக வாழ, இந்த நண்பர்களின் துணைகொண்டு செயற்கரிய செயல்களை முடிக்க வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

இளங்கிளைமை-மழலைகள். நவைபோகான் கற்றல்-குற்றமில்லாத நூல்களைக் கற்றல். ஏருடையான வேளாண்மை-எருதுகளைக் கொண்டு உழவுத் தொழில் செய்தல். தேரின்கோள் நட்புத் திசைக்கு-செல்லும் திசைகளிலெல்லாம் நட்பைச் சேர்த்துக் கொள்ளல்.

யானை யுடைப் படைகாண்டல் மிகஇனிதே
ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்இனிதே
கான்யாற் றடைகரை ஊர்இனி(து) ஆங்கினிதே
மான முடையார் மதிப்பு. 4

விளக்கவுரை

அரசர்கள் யானைப் படையை வைத்துக் கொள்வது இனிமையானது. நூறுபடை வீரர்களுக்கு யானை சமமானது. வாகனமாகவும் அது உதவும் என்பதாம். உயிர்களைக் கொன்று புசிக்காமல், தாவர வகை உணவுகளைப் புசித்து வாழ்வது. இனிது நீரோடும் ஆற்றங்கரையில் அமைந்த ஊர்களில் வாழ்வது இனிமையாகும். நல்ல கொள்கைப் பிடிப்புள்ள மானமுள்ளவர்களாக வாழ்வது மிகவும் இனிமையாகும். இப்பொருளில் இனியவை நாற்பது பாடல் உள்ளது. ஒரு யானை என்பது நூறு வீரர்களக்குச் சமமானது. ஆகவே, அரசர்கள் யானைப் படையைப் பெற்றிருப்பது மாபெரும் சிறப்பு. வாகனமாகவும் யானை பயன்படும். யுத்தகளத்தில் எதிரிகளைத் துவம்சம் செய்யவும் உதவும் என்பது பொருள். பிற உயிர்களைக் கொன்று புசிக்காமல், தாவர உணவுகளைப் புசிப்பது சிறந்தது என்று கூறப்பட்டது. தாவர உணவில்தான்

சாத்வீக குணம் தோன்றுகிறது. இறைச்சி உணவில் முரட்டுக் குணம்தான் வரும். மேலும் பிற உயிர்களை வதைத்த தோஷம் வேறு. ஆகவே, பிற உயிர்களைக் கொல்வதைவிட, தாவர உணவுகளை உண்டு தெய்வ குணமாகிய சாத்வீக குணத்தைப் பெறவேண்டும் என்பது பொருளாகும். ஆற்றங்கரையில் அமைந்த ஊர்களில் வாழ்வது இனியது என்று கூறப்பட்டது. காற்று இதமாக வீசும் சூழல் அங்கு உண்டு. நீர் பிரச்சனை, தட்டுப்பாடு இருக்காது. ஆகவே, அத்தகைய ஊர்களில் வாழ்வது இனியதாகும். நல்லல கொள்கைப் பிடிப்புள்ளவர் களாக, மானமுள்ளவர்களாக வாழவது இனிது என்று கூறப்பட்டது. கொள்கை பிடிப்பு என்றால் என்ன? தெய்வம் நம்பிக்கை. அந்தத் தெய்வம் நமக்குள்ளேயே இருக்கிறது என்பதை நம்புதல், எல்லா உயிர்களிலும் அந்தத் தெய்வம் உறைகிறது என்பதை அறிதல், இதுவே கொள்கை பிடிப்பு. இதில் உறுதியாக இருப்பவர் பிற உயிர்களுக்கு நன்மையே செய்வார். தீமை நிகழாது. அதனால் இறைவன் தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்துவான் என்பது கருத்து. மானம் என்பதற்கு என்ன பொருள்? தன்னை மதிக்காதவர்களிடம் வலியச் சென்று உதவி கேட்டல், தன்மானத்தை இழந்து தீயவனுக்கு அடிமையாதல், உண்ணும் உணவுக்காக மானத்தை விட்டு பிச்சையேற்றல் ஆகியவைதான், மானக் குறைவான செயல்கள். உயிரே போவதானாலும் மானத்தையும், தன்மானத் தையும் இழக்காமல் வாழ்வது இனியது என்பது கருத்து.

அ.பொ.

யானை யுடைப் படைகாண்டல்-யானைப் படையைக் கொண்டிருப்பது. ஊனைத்தின்-பிற உயிர்களின் சதையை. கான்யாற் றடைகரை ஊர்இனிது-ஆற்றங்கரையில் அமைந்த ஊர் இனிது. மான முடையார்-கொள்கைப் பிடிப்பு உடையவர்.

கொல்லாமை முன்இனிது கோல்கோடி மாராயம்
செய்யாமை முன் இனிது செங்கோலன் ஆகுதல்
எய்தும் திறத்தால் இனிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு. 5

விளக்கவுரை

ஒரு மனிதன் எந்தக் காலத்திலும், எந்தச் சூழலிலும் மற்ற உயிர்களைக் கொலை செய்து உண்ணாமல் இருப்பது இனிது குற்றம் செய்கிறவர்களை ஆதரிக்காத மன்னனாக இருப்பது மிகவும் இனிது. அரசன் சிறந்த நிர்வாகத் திறமை யுடையவனாகவும், செங்கோல் தவறாமல் ஆட்சி செய்பவ னாகவும் இருப்பது இனிது. எவர் மீதும் குற்றம் கூறாமல், சான்றோர்களாக வாழ்வது மிகவும் இனிது. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. ஒருமனிதன் எந்தக் காலத்திலும், எந்தச் சூழலிலும் மற்ற உயிர்களைக் கொலை செய்து உண்ணாமல் இருப்பது இனியது என்று கூறப்பட்டது. மற்ற உயிர்களைக் கொல்வதால் நம் பாவமூட்டை கூடுகிறது. பாவ மூட்டை இருக்கும்வரை நமக்கு ஞானம் வராது. ஞானமில்லா விடில் பிறப்பு, இறப்பு வந்து கொண்டே இருக்கும். துன்பமும் தொடரும். ஆகவே, எந்தச் சூழலிலும் பிற உயிர்களுக்குத் தீமை செய்யக்கூடாது என்பது பொருள். குற்றம் செய்கின்ற வர்களை ஆதரிக்காத மன்னனாக இருப்பது இனியது என்று கூறப்பட்டது. குற்றம் செய்கிறவர்கள் தண்டிக்கப்பட்டால் தான், மக்கள் பயமின்றி வாழமுடியும். அந்தச் சமநீதி செய்யும் அரசன், குற்றம் செய்கிறவர்களை ஆதரிக்காதவனாக இருக்க வேண்டும் என்று கூறியது, இந்த அடிப்படையில்தான். அரசன் சிறந்த நிர்வாகத் திறமையுடனும், சமநீதி உள்ளவனாகவும் இருக்க வேண்டும என்று கூறப்பட்டது. நிர்வாகத் திறமை இருந்தால்தான் பொருளாதாரத்தை மேம்படுத்தமுடியும். செல்வவளம் இருந்தால்தான் குடிமக்களுக்குப் பல நன்மை களைச் சிறப்பாக செய்ய முடியும். நிர்வாகத் திறமை இல்லா விடில் கஜானா காலியாகும். மக்கள் துன்பத்திற்குள்ளாவர் என்பது கருத்து. மன்னன் வேண்டியவர், வேண்டாதவர், என்று பார்க்காமல் சமநீதியுடன் ஆட்சி செய்ய வேண்டும். அப்போதுதான் வானம் மும்மாரி பொழியும்; பஞ்சம் வராது. மன்னன் செங்கோல் தவறினால் எல்லாத் தீமைகளும் நாட்டைத் தாக்கும் என்பது கருத்து. எவர் மீதும் குற்றம் சொல்லாமல், சான்றோராக வாழ்வது இனியது என்று

கூறப்பட்டது. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை. ஆகவே, குறைகூறாமல் சான்றோர்களாக வாழ்க்கைப் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

கொல்லாமை முன்இனிது-ஒரு உயிரைக் கொல்லாமல் வாழ்வது இனிது. செங்கோலன்-நடுநிலையுடைய அரசன். பொல்லாங் குரையாமை-பிறரைக் குறை கூறாமை.

ஆற்றுந் துணையால் அறம்செய்கை முன்இனிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைகள் அல்லாரைக்
காப்படையக் கோடல் இனிது. 6

விளக்கவுரை

தங்களால் இயன்ற அளவுக்குப் பிறருக்குத் தருமம் செய்வது இனிது. நல்ல நெறியுடையவர்களைச் சந்தித்துப் பேசி வாழ்வில் நன்மைகளைப் பெறுவது இன்று கல்வி, செல்வம், அதிகாரம் ஆகியவை ஒரு இடத்தில் இருந்தால் ஒருவர் மிகச் சிறந்தவராக விளங்குவார். அனைத்து மக்களும் அவரைப் போற்றிப் புகழ்வார்கள். அந்தக் கட்டத்தில் அவர் நாணம் உடையவராக இருந்தால் இனியது. இப்பொருளில் இப்பாடல் உள்ளது. தங்களால் முடிந்த அளவுக்கு ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் உதவி செய்வது இனியது என்று கூறப் பட்டது. ஏழைகளாகவும், திக்கற்றவர்களாகவும் காட்சி யளிப்பது இறைவனே. நமக்குப் புண்ணியத்தைத் தந்து நம்மைத் தூயவர்களாக மாற்றவே இறைவன் அவ்வடிவங் களில் நிற்கிறான். ஆகவே, அவரவர்களின் தகுதிகளுக்குத் தகுந்தவாறு இயன்றவரை ஏழைகளுக்கு உதவி செய்வது இனியதாகும். நல்ல நெறியுடையவர்களைச் சந்திக்க வேண்டும். அதன் காரணமாகப் பல நன்மைகளைப் பெறவேண்டும் என்று கூறப்பட்டது. நல்லநெறிகள் நிறையப் பெற்ற, பகவான் இராம கிருஷ்ணபரம ஹம்சரைச் சந்தித்ததால் நரேந்திரர்,

இறைவனைப் பற்றிய சந்தேகத்தை நீக்கிக் கொண்டு உலகத்தையே ஆன்மிக வெள்ளத்தில் மூழ்கடித்தார். இந்தச் சாதனை எப்படி நிகழ்ந்து? அறநெறியில் சிறந்த குருவைச் சந்தித்ததால்தானே? ஆகவே, நாமும் அறநெறியாளர்களை சந்தித்து நன்மைகள் பெறவேண்டும் என்று கூறப்பட்டது. கல்வி, செல்வம், அதிகாரம் மூன்றும் ஒருவரிடம் இருந்தால் ஆற்றல் அதிகமாகும். எல்லா மக்களும் அவரைப் போற்று வார்கள். அந்தக் கட்டத்தில் அவர் பெருமிதம் கொள்ளாமல், அடக்கத்துடன் கூடிய நாணமுள்ளவராக இருப்பது இனியது என்று கூறப்பட்டது. நமக்குப் போற்றுதல்களும், வாழ்த்து களும் கிடைக்கும் போது அடக்கம் முள்ளவர்களாக இருக்க வேண்டும். அதுவே தேவர்களுக்கான அந்தஸ்த்தைத் தரும். அடக்கம்தான் அழகு. அடக்கம் தான் தெய்வத்தின் அருள். ஆகவே, எந்த நிலையிலும் ஆணவம் கொள்ளாமல் அடக்கத் துடனும், நாணத்துடனும் வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

ஆற்றும் துணையால்-பணத்தில் வசதியுள்ள துணை. பாற்பட்டார் கூறும் பயமொழி-பொழுது போகவில்லை என்பதற்காகப் பேசும் மொழிகள். காப்படையக் கோடல் இனிது-வாழ்க்கைக்கு நன்மை தரக்கூடிய சான்றோர்களைச் சந்தித்ததில் இன்பம்.

அந்ணர் ஓத்துடைமை ஆற்ற மிகஇனிதே
பந்தம் உடையான் படையாண்மை முன்இனிதே
தந்தையே ஆயினும் தானடங்கான் ஆகுமேல்
கொண்டடையான் ஆகல் இனிது. 7

விளக்கவுரை

அந்தணர்கள் வேதத்தைப் படித்து மறக்காமல் இருப்பது இனிமையானது. மனைவி, குழந்தைகள் போன்ற உறவினர்கள் குடும்பத் தலைவனின் வார்த்தைகளைக் கேட்டு நடப்பது இனிமை. தந்தை நல்லவராக இல்லையென்றால், அவர் கூறும்

அறிவுரைகள் நீதிநெறிக்குப் புறம்பானதாக இருக்கும். ஆகவே, அந்தச் சூழலில் பிள்ளைகள் தந்தையின் சொல்லைக் கேட்டு நடக்காமல் இருப்பது இனிமையாகும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. அந்தணர்கள் என்றால் சுத்த மானவர்கள் என்பது பொருளாகும். அந்த சுத்தமானவர்கள் வேதத்தைப் படித்து மறக்காமல் இருப்பது இனிமையானது. மனம், வாக்கு, காயம் ஆகியவற்றில் பரிசுத்தமாக இருப்ப வர்கள் வேதமந்திரங்களை உச்சரித்தால் பலிதம் ஆகும். தேவர்களை அழைத்து மக்களுக்கு தேவையானவற்றைப் பெற்றுத் தரவும் முடியும். இந்த உலகில் வாழும் மக்களில் யார் ஒழுக்கத்துடனும், பரிசுத்தமுடன் இருக்கிறார்களோ அவர்களே அந்தணர்களாகும். மனைவி, குழந்தைகள் ஆகிய உறவினர்கள் குடும்பத் தலைவனின் வார்த்தைகளைக் கேட்டு நடப்பது, இனிமை என்று கூறப்பட்டது. குடும்பத் தலைவன் தான் செல்வத்தை ஈட்டுபவன். அவன் மகிழ்ச்சியாக இருந் தால்தான் தன் கடமை. தொழில் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்ய முடியும். ஆகவே, குடும்பத் தலைவனின் சொல்படி உறவினர்கள் கேட்டு அவன்வழி நடக்க வேண்டும் என்பது பொருளாகும். அதேசமயம் தந்தை நல்லவராக இல்லை யென்றால், பிள்ளை தந்தையின் சொல் கேட்டு நடக்க வேண்டியதில்லை. ஏனெனில், சில தந்தையர் நீதி, நெறி தவறியவராக இருப்பார்கள். அவர்கள் கூறும் அறிவுரைகள் தீமை விளைவிப்பதாக இருக்கும். அந்தச் சூழலில் பிள்ளைகள் தந்தை சொல் கேட்டு நடந்தால் குழப்பங்களும், தீமைகளும் வரலாம் என்பது கருத்து.

அ.பொ.

அந்தணர்-சுத்தமானவர். ஒத்துடைமை ஆற்ற மிகஇனிதே-வேதத்தை மறக்காமல் இருப்பது இனிது. பந்தம் உடையான்-சுற்றம் உடையவன். தானடங்கான் ஆகுமேல்-நல்லவராக இல்லையேல். கொண்டடையான் ஆகல் இனிது-கேட்காமல் இருப்பது நல்லது.

பஃறொடை வெண்பா

ஊரும் கலிமா உரனுடைமை முன்இனிதே
தார்புனை மன்னர் தமக்குற்ற வெஞ்சமத்துக்
கார்வரை யானைக் கதங்காண்டல் முன்இனிதே
ஆர்வம் உடையவர் ஆற்றவும் நல்லவை
பேதுறார் கேட்டல் இனிது. 8

விளக்கவுரை

வலிமையுள்ள போர்க் குதிரைமீது ஏறி போர்க்களத்தில் எதிரியை ஜெயிக்கும்படி போர் செய்தல் இனிமையானது. மன்னர்கள் மாலை அணிந்து கறுப்பு நிறமுள்ள யானைமீது அமர்ந்து யுத்த களம் வருவார்கள். தன்மீது எய்யப்படுகிற ஆயுதங்கள் காரணமாக அந்த யானைகள் வெகுண்டு எழும். அந்தக் காட்சி காண்பதற்கு இனிமையானது. அன்புடையவர்கள் ஒன்றுகூடி பேசும்போது, நல்ல கேள்விகள் அதற்கு நல்ல பதில்கள் வருமாறு பேசுவது மிகவும் இனிமையுடையதாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. வலிமையுள்ள போர்க் குதிரை மீது ஏறி போர்க்களத்தில் எதிரியை ஜெயிக்கும்படி போர் செய்தல் இனிமையானது என்று சொல்லப்பட்டது. பகைவர்களை வெற்றி காண்பதுதான் மன்னருக்குப் பெருமை. குடிமக்களுக்கும் பெருமை. தன் நாட்டைப் பாதுகாக்க வலிமையுடன் போர் செய்தல் ஒரு அரசனின் மாபெரும் கடமையாகும். அந்தக் கடமையை செவ்வனே செய்வதுதான் மாபெரும் சிறப்பு. கறுப்பு யானை மீது அமர்ந்து மன்னர்கள் போர்செய்யும்போது, அந்த யானைகளை நோக்கி, பல ஆயுதங்கள் வரும். அதைக் கண்டு யானை ஆவேசம் கொண்டு எழும் காட்சி இனிமையானது. யானையின் அந்த எழுச்சி பகைவர்களை நடுங்கவைப்பதாக இருக்கும். அதாவது பகைவர்கள் நம்மைக் கண்டு நடுங்குவது சிறப்பு. நல்லவர்கள் நம்மை கண்டு மகிழ்வது சிறப்பு. ஏழை எளியவர்கள் நம் கொடைத் திறத்தைப் போற்றுவது சிறப்பு. இவ்வாறு அரசர்கள் திகழவேண்டும் என்பது பொருளாகும். அறிவுடையோர்கள்

ஒன்றுகூடிப் பேசுவது, கேள்விகள் அதற்கு பதில்கள் ஆகியவை பேசப்படும். அது அறிவுத்தனமாகும். அந்த அறிவுத்தளத்து இன்பம் என்பது, சிற்றின்பங்களைவிட பலமடங்கு மேலானது. ஆகவே அது இனிமையான தாகும்.

அ.பொ.

ஊரும் கலிமா-யுத்த களத்தில். உரனுடைமை-வலிமை யுடைமை. தார்புனை மன்னர்-மாலை அணிந்த அரசர். கார்வரை யானை-கறுப்புநிற யானை. கதங்கொண்டால்-கோபம் கொண்டால்.

இன்னிசை வெண்பா

தங்கண் அன்புடையார் தாம்வாழ்தல் முன்இனிதே
அங்கண் விசும்பின் அகல்நிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்துயார்க்கும்
அன்புடைய ராதல் இனிது. 9

விளக்கவுரை

ஒருவர் மற்றொருவருடன் இணைந்து வாழும் வாழ்க்கை மிகவும் இனிமையானது. பௌர்ணமி நாளில் சந்திரன் எழிலாகக் காட்சியளிக்கிறான். அதன் ஒளி உடம்பெங்கும் ஒரு குளிர்ச்சியைத் தருகிறது. அந்த சந்திரனைக் கண்டு ரசித்து அனுபவம் பெறுவது இனிமையானது. அன்புடைய வர்கள் தன்னைச் சேர்ந்தவர்களையும், அன்புடையவர்களாக மாற்றி விடுவார்கள். அத்தகைய அன்புமிக்கவர்களும் பழகி வருவது இனிமையானது. இப்பொருளில் இப்பாடல் அமைந் துள்ளது. ஒருவர் மற்றொருவருடன் இணைந்து வாழும் வாழ்க்கை இனிமையானது என்று கூறப்பட்டது. இறைவனின் படைப்பு என்பது, ஒரு மனிதனை மற்றொரு மனிதன் அனுசரித்து வாழும் முறையிலேயே உள்ளது. விவசாயி பயிரிட்டால்தான் நகரத்தவர் உணவு உண்ண முடியும். மருத்துவன் இருந்தால்தான், நோயைப் போக்க முடியும். தொழிலாளர் பாடுபட்டால்தான் அதன் பலனை மற்ற மக்கள் அனுபவிக்க முடியும். செருப்பு தைக்கும் தொழிலாளி இருந்தால்தான், நாம் அழகாக செருப்புகளை அணிய

முடியும். துப்புறவு தொழிலாளர்கள் பணிபுரிந்தால்தான் நகரம் சுத்தமடையும் இப்படி ஒருவரையொருவர் அனுசரித்து வாழ்வது இனிமையாகும். சந்திரனின் ஒளி நமக்குக் குளிர்ச்சி தருகிறது. அந்த நிலவொளியை ரசிப்பது இனிமை. நம் உடலுக்கு இயற்கையான குளிர்ச்சியைத் தருபவன் சந்திரன். இந்த இயற்கை வசதிகளை நாம் இழந்து வருகிறோம் என்பதை, நினைவில் கொள்ள வேண்டும் என்பது பொரு ளாகும். அன்பு மிக்கவர்கள் தங்களுடன் பழகுகிறவர்களை யும் அன்புடையவர்களாக மாற்றி விடுவார்கள். அன்புதான் தெய்வம். அன்பின் சக்திக்கு எல்லை இல்லை. கல் மனம் கொண்ட கொடியவர்களின் சேர்க்கையால் ஒருவன் கொடிய வன் ஆவான். அன்புள்ளம் கொண்டவர்களின் சேர்க்கை யால், கல்மனம் கொண்ட கொடியவனும் மாறுவான் என்ப தால் அது இனியது என்று கூறப்பட்டது.

அ.பொ.

தங்கண் அன்புடையார்-ஒருவருக்கொருவர் அன்புடன் உதவிக் கொண்டு. அகல்நிலா-பௌர்ணமி சந்திரன். அங்கண் விசும்பின்-வானத்தில். அன்புடையராதல்-அன்பு கொண்டவராதல்.

கடமுண்டு வாழாமை காண்டல் இனிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்கல் இனிதே
மனமாண்(பு) இலாதவரை அஞ்சி அகறல்
எனைமாண்பும் தான்இனிது நன்கு. *10*

விளக்கவுரை

தன் வருமானத்திற்கு தகுந்தபடி வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டும். கடன் வாங்கி ஆடம்பரமான உணவு களுக்குச் செலவு செய்யாமல் இருப்பது இனிமையாகும். மனைவி என்பவள் கற்பு நிறைந்தவளாக, மற்ற ஆண்களை மனதிலும் நினையாதவளாக இருக்க வேண்டும். அவ்வாறு கற்பின் பெருமையைப் புரியாத மனைவியுடன் வாழ்வதை விட, அவளை விட்டுப் பிரிந்து செல்வதே இனிமையானது. நல்ல செயல்கள் இல்லாதவரை விட்டு நீங்கிச் செல்லுதல்

இனிமையாகும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. கடன் வாங்கி ஆடம்பரமான உணவுக்கு செலவிடக்கூடாது. தன் வருமானத்திற்குத் தகுந்தபடி வாழ்க்கையை நடத்திச் செல்வதே பாதுகாப்பு. கடன் என்பது நம்மைத் துயரத்தில் தள்ளி விடக்கூடியது. கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று சொல்வார்கள். கடன் என்பது நம்மீது ஏற்றப்படும் பளு. நம் வருமானத்தை வட்டி என்ற பெயரில் கவர்ந்து செல்லக்கூடியது. அது, குடும்பத்தைத் தத்தளிக்க செய்து மூழ்கடிக்கும். அந்தக் கடனை வாங்காமல் வருமானத்திற்குத் தகுந்தபடி திட்டமிட்டு, குடும்பத்தை நடத்துவது இனிமை யாகும். கற்பில்லாத பெண்களை விட்டு விலகுவது நல்லது. நல்ல செயல்கள் செய்யாதவரை விட்டு நீங்கவேண்டும். கற்பில்லாத பெண் குடும்பத்திற்குத் துன்பம் செய்பவள். குடிப் பெருமையை குலைப்பவள். மானத்தை இழந்து மற்றவர்கள் இகழும் சூழலை ஏற்படுத்துபவள். ஆகவே, அவளை விட்டு நீங்குதல் நல்லது. அதேபோல் நற்செயல்கள செய்யாத தீயவர்களை விட்டு விலக வேண்டும். ஏனெனில் நாம் செய்ய நினைக்கும் நல்ல செயல்களுக்கும், இவர்கள் தடையாக இருப்பார்கள். நம்மையையும் தீய செயல்களில் ஈடுபடவைப்பார்கள். நம்மையும் தீயவர்களாக மாற்றி, வாழ்க்கையைத் திசைதிருப்புவார்கள். ஆகவே, நற்செயல் செய்யாதவர்களை விட்டு நீங்குதல் இனிமை என்று சொல்லப்பட்டது.

அ.பொ.

கடமுண்டு-கடன்வாங்கி. வாழாமை-வாழாமல் இருத்தல். நிறைமாண்பில்-கற்பு இல்லாத. மனமாண்பு இலாதவரை-நல்ல செயல்கள் இல்லாதவரை.

அதர்சென்று வாழாமை ஆற்ற இனிதே
குதர்சென்று கொள்ளாத கூர்மை இனிதே
உயிர்சென்று தான்படினும் உண்ணார்கைத் துண்ணாப்
பெருமைபோல் பீடுடைய(து) இல். *11*

விளக்கவுரை

சிலருக்கு ஒரே ஊரில் இருந்து வாழ்வது பிடிக்காது. அவ்வாறு நாடோடியாகத் திரிந்து வாழாமல் இருப்பது இனியதாகும். மதிநுட்பம் இல்லாதவர்கள், உயர்ந்த நூல்களுக்கு பொருள் கூறாமல் இருப்பது இனியது. சிலர் எப்போதும் தவறான வழிகளிலேயே செல்வார்கள். மற்றவர்களுக்குத் துன்பம் செய்வார்கள். அவர்கள் கையில் உணவை வாங்கி உண்பதைவிட இறத்தல் இனியது. இப்பொருளில் இப்பாடல் உள்ளது. சொந்த ஊரில் வாழாமல் நாடோடியாக ஊர்ஊராகச் சென்று திரியாமல் பிறந்த ஊரில் வாழ்வது இனியது. திரைகடலோடியும் திரவியம் தேடு என்று முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். செல்வத்தைத் தேட அவ்வாறு செல்லலாம். ஆனால் சோம்பேறித்தனமாக ஊர் ஊராகச் சுற்றித் திரிவது தீமையை விளைவிக்கும். பிறந்த ஊரில் உருப்படியாக ஏதேனும் வேலை செய்து சிறப்பாக வாழவேண்டும். குடும்பத்திற்கு உதவியாக இருக்க வேண்டும். ஊருக்குப் பெருமை தரும் விதத்தில் செயல்படவேண்டும் என்பது கருத்து. உயர்ந்த நூல்களுக்கு சரியான பொருள் கூறவேண்டும். திரித்துகூடக் கூடாது. மூலக்கருத்தை மாற்றிக் கூறக்கூடாது. மதிநுட்பம் மிகுந்தவர்கள்தான் நல்ல நூலுக்குச் சரியான பொருள் கூறி நன்மை செய்ய முடியும். ஆகவே, மதிநுட்பம் இல்லாதவர்கள் உயர்ந்த நூலுக்கு பொருள்கூற முயலக்கூடாது என்பது கருத்து. சிலர் எப்போதும் தவறான வழிகளிலேயே செல்வார்கள். கொலை, கொள்ளை, விபச்சாரம் முதலான தொழில்கள் செய்து பிழைப்பவர்களிடம், ஏதேனும் வாங்கி உண்பதைவிட இறத்தல் மேலானது. ஏனெனில், தீயவர்களால்தான் இந்தச் சமுதாயம் துன்பம் அடைகிறது. ஏழை எளிய மக்கள் வதைக்கப்படுகிறார்கள். சான்றோர்கள் புண்படுகிறார்கள். சமுதாயம் நலிவுறுவதற்கு இத்தீயவர்களே காரணகர்த்தாவாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்களிடம் உதவி பெறுவதைவிட இறத்தல் மேலானது என்று கூறப்பட்டது.

அ.பொ.

அதர்சென்று-ஊரை விட்டு நாடோடியாகச் சென்று. குதர் சென்று கொள்ளாத கூர்மை-உயர்ந் நூல்களுக்குப் பொருள் சொல்லாதிருத்தல். உயிர்சென்று தான்படினும்-உயிரே போவதாக இருந்தாலும்; உண்ணார்கைத் துண்ணா-தீயவழியில் செல்பவர்களின் உணவை.

குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே
கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே
மயரிகள் அல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவும்நீர் வின்றேல் இனிது. 12

விளக்கவுரை

சிறு குழந்தைகள் நோய் நொடியில்லாமல் வாழ்வது மிகவும் இனிமையானதாகும். கற்றவர்கள் சபையில் சிறப்பான கல்வி கற்றவன் பேசுவது, கல்விக்கு இனிமை. வாழ்க்கையில் எவ்வளவு துன்பம் வந்தாலும் அதைக்கண்டு மயங்கக்கூடாது. அவ்வாறு மயங்காதவர்களிடம் செல்வம் நீங்காதிருந்தால் இனிமையாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. சிறு ழந்தைகள் நோய் நொடியின்றி வாழ்வது இனியது. ஆகவே, தொற்று நோய்கள் குழந்தைகளைப் பற்றாமல் இருக்க, நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். நீரில் தூய்மை, உணவில் தூய்மை, போன்றவற்றை எச்சரிக்கையுடன் கடைப்பிடித்து குழந்தைகட்குத் தரவேண்டும். குழந்தைகள் நோய்நொடியின்றி மகிழ்ச்சியாக இருப்பதைக் காண்பது இனிது. எச்சரிக்கை நடவடிக்கை மூலம் பெற்றோர்கள் இதனைச் செய்ய முடியும் என்பது கருத்து. கற்றவர்கள் சபையில் கல்வி கற்றவர் பேசுவது இனிமையாகும். அமெரிக்கா, கொலம்பியா அரங்கத்தில சர்வமத சபை கூடியது. அப்போது நமது பாரத தேசத்தி லிருந்து சுவாமி விவேகானந்தர் அங்குச் சென்று பேசினார். மறுகணம் கொலம்பியா அரங்கமே அதிரும் வகையில் ஆரவாரமும் கைத்தட்டலும் எழுந்தன. கற்றவர் சபையில் அந்தக் கற்றவர், நல்லவர், ஆன்மிக சிங்கம் கர்ஜனை செய்தது, இனிமைக்கும் இனிமை சேர்த்தது. ஆகவே, கற்றவர் சபையில் கற்றவர் பேசுவது இனிமை பயக்கும் என்பதாகும். வாழ்க்கை

என்பது இன்பம், துன்பம் கலந்தது. இவை மாறி மாறி வரும். இன்பம் வரும் போது சந்தோஷம் கொள்கிறவர்கள், துன்பம் வரும் போது மனம் ஒடிந்து போகிறார்கள். இது தவறு. துன்பத்தில் கலங்கக்கூடாது. மயங்ககூடாது. விரக்தி அடையக் கூடாது. இன்பம் எப்படி நிலையற்றதோ, அதேபோல் துன்பமும் நிலையற்றதுதான். நாம் விதைத்ததை அறுக்கிறோம். ஆகவே, இனி நல்லதையே விதைப்போம். எதிர்காலத்தில் மகிழ்ச்சியாக இருப்போம் என்பது கருத்து.

அ.பொ.

குழவி பிணியின்றி-குழந்தை நோயின்றி மகிழ்ச்சியுடன் இருத்தல். கழறும் அவையஞ்சான் கல்வி-சிறப்பு. மயரிகள் அல்ரராய்-மயங்குதல் இல்லாத. திருவும்நீர் வின்றேல்-செல்வம் நீங்காமல் நிற்றல்.

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே
தானம் அழியாமைத் தானடங்கி வாழ்வினிதே
ஊனம் ஒன்றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க்(கு) எல்லாம் இனிது. 13

விளக்கவுரை

தன்மானம் இழக்கும் நிலைவந்தால் உயிர் வாழ்வதை விட அதைத் துறப்பது இனிமையானது. ஒருவர் தன்னுடைய வருவாயைச் சரிபார்த்துக் கொண்டு, அது குறையாதபடி வாழக்கூடிய வாழ்க்கை இனிமையானது. ஒருவர்தான் இருக்கும் அடையாளம் வெளியில் தெரியும்படி, கௌரவமாகத் தெரியும்படி வாழவேண்டும். எந்த விதத்திலும் அந்தக் கௌரவம் சிதையாமல் அடக்கத்துடன் இருப்பது இனிமையானது. செல்வம் குறையக் கூடிய சூழல் ஏற்படும்போது, அதற்கான காரணத்தைக் கண்டு செல்வத்தைச் சமநிலைப் படுத்திக் கொள்வது இனிமையானது. இப்பொருளில் இப்பாடல் உள்ளது. தன்மானம் போகும் நிலை வந்தால் உயிர் வாழ்வதைவிட இறத்தல் நல்லது என்று கூறப்பட்டது. இதன் பொருள் யாதெனில், தன்மானத்திற்கு இழுக்கு வராமல் பார்த்துக் கொள்வது நம்மிடமே உள்ளது. நம்முடைய

நடத்தை, அணுகுமுறைகள்தான், தன்மானத்தை நிர்ணயம் செய்கின்றன. ஆகவே, தன் மானத்தைப் பறிகொடுக்கும் செயல்களை, நாம் ஒருபோதும் செய்யக்கூடாது. அப்படி செய்து உயிர் வாழ்வதைவிட இறத்தல் மேலானது என்பது பொருளாகும். ஒருவர் தன் வருமானம் குறையாமல் கவனமாக இருக்க வேண்டும். செலவு காரணமாகச் செல்வம் குறையும். அந்த செல்வத்தை மீண்டும் திரட்டி முன்போல் ஆக்க வேண்டும். இப்படி முயல்பவர்களுக்குத் துன்பம் வராது. செலவு செய்து கொண்டே இருந்தால், ஒருகட்டத்தில் செல்வம் முழுவதும் காலியாகி விடும். காலியான பிறகு செல்வத்தைத் திரட்டுவது கடினம். ஆகவே, குறைவு அடையும் போதே நிறைவு செய்யும் முயற்சிகளைச் செய்வதே விவேகம்; ஆளுமை என்பதாகும். ஒருவர்தான் இருக்கும் அடையாளம் கௌரவமாக இருக்கும்படி வாழவேண்டும் என்று கூறப்பட்டது. இருக்கும் போது மட்டுமல்ல. இறந்த பிறகும் மற்றவர்கள் புகழும் வகையில், நாம் ஒரு அடையாளத்தையாவது விட்டுச் செல்ல வேண்டும். மனித சமுதாயம் நலம் பெறும், வகையில் ஏதேனும் சாதனை செய்வதுதான் அடையாளம் என்பது. செல்வம் குறையும்போது அதற்கான காரணத்தை ஆராய வேண்டும். காரணம் தெரிந்ததும் அதை நிவர்த்தி செய்து, செல்வத்தைச் சமநிலைப்படுத்த வேண்டும். இதுவே மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வழியாகும்.

அ.பொ.

மானம் அழிந்தபின்-தன்மானத்திற்கு இழுக்கு நேர்ந்தால். தானம் அழியாமை-செல்வம் குறையாமல் பார்த்துக் கொள்ளல். ஊனம் ஒன்றின்றி-கௌரவம் குறையாமல். உயர்ந்த பொருளுடைமை-குறையாத செல்வம் எப்போதும் பெற்றிருத்தல்.

குழவி தளர்நடை காண்டல் இனிதே
அவர்மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து
மனையஞ்சான் ஆகல் இனிது. 14

விளக்கவுரை

குழந்தைகள் ஆடி அசைத்து நடந்து வரும் அழகை ரசிப்பது இனியது. இந்தக் குழந்தைகளின் மழலை வார்த்தைகள் தேவர்கள் விரும்பி சாப்பிடும் அமுதத்தைவிட இனிமையானது. தீவினை செய்த தீயவன் துன்பம் அடைவதைக் கண்டு, இரசிக்கப்பட தேவையில்லை. அதைக் கண்டு அஞ்சாமல் இருப்பதே மிகவும் இனியது.இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. குழந்தைகள் ஆடி அசைந்து நடந்து வரும் அழகை ரசிப்பது இனியது. அந்தக் குழந்தைகளின் மழலை வார்த்தைகள், தேவர்கள் உண்ணும் அமுதத்தை விட இனியது என்று கூறப்பட்டது. ஏனெனில், குழந்தைகளுக்கும் தெய்வத்திற்கும் வேறுபாடு இல்லை. வெள்ளை உள்ளம் கொண்ட குழந்தைகள் தெய்வத்திற்குச் சமமாக இருப்பதால், அவர்கள் நடப்பது, பேசுவது அமைத்துமே ஆனந்தத்தைத் தருவதாகும். தீவினை செய்த தீயவன் துன்பம் அடைவதைக் கண்டு இரக்கப்படத் தேவையில்லை. அதைக் கண்டு அஞ்சாமல் இருப்பதே இனியது என்று கூறப்பட்டது. ஒரு மனிதன் துன்பம் அடைகிறான் என்றால், அவன் பல பிறவிகளில் விதைத்ததையே அறுவடை செய்கிறான். ஆகவே, அதைக் கண்டு அஞ்சுதலோ, இரக்கம் கொண்டு அழுவதோ கூடாது. ஆனாலும் முடிந்தவரை அவர்கள் துன்பத்தை நீக்க முயலலாம். வேறு ஒன்றும் செய்யத் தேவையில்லை. துன்பத்தை அனுபவிப்பன் மூலம் அவர்களுடைய தீவினைப் பளு குறைகிறது. இனி தீவினைகள் செய்யாதபடி எச்சரிக்கையாக இருக்க வாய்ப்பு தரப்படுகிறது. யாரோ ஒருவர் நமக்குத் துன்பத்தைத் தருகிறார் என்று நினைப்பது தவறு. நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு நாமே காரணம். நாம் நினைத்தால் துன்பத்தை விரட்ட, நல்வினைகளையும் செய்து மாற்ற முடியும். ஆகவே, துன்பத்தைக் கண்டு அஞ்சுதல் கூடாது என்று கூறப்பட்டது.

அ.பொ.

குழவி தளர்நடை-குழந்தை அசைந்து வரும் நடையழகு. அவர்மழலை கேட்டல்-குழந்தையின் மழலைச் சொற்களை கேட்பது.

அமிழ்தினும் இனிது-தேவர்கள் உண்ணும் அமுதத்தைக் காட்டிலும் சிறந்தது. வினையுடையான்-தீய வினைகளை உடையவன். வெய்துறும் போது-துன்பம் அடையும்போது. மனையஞ்சான்-இரக்க மில்லாதிருத்தல்.

பிறன்மனை பின்னோக்காப் பீடினி(து) ஆற்ற
வறனுழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர்வு இனிதே
மறமன்னர் தங்கடையுள் மாமலைபோல் யானை
மதமுழக்கம் கேட்டல் இனிது. 15

விளக்கவுரை

மற்றவன் மனைவியை, திருமணமாகாத நிலையில் இருப்பவன், திரும்பிப் பார்க்காமல் இருப்பது பேராண்மை யாகும். அந்த வாழ்க்கை இனிமையானது. மழை நீரைப் பெறுவது வயல்களுக்கு இனிமையானது. செங்கோல் ஆட்சி நடத்தும் மன்னனின் அரண்மனையில் பெரிய யானைகள் இருக்கும். அந்த யானைகள் பெரிய சத்தத்துடன் பிளிரும் சப்தத்தைக் கேட்பது மன்னனுக்கு இனிமையாகும். இப் பொருளில் இப்பாடல் அடைந்துள்ளது. திருமணமாகாதவன் மற்றவருடைய மனைவி திரும்பிப் பார்க்காமல் இருப்பது பேராண்மை என்று கூறப்பட்டது. அதாவது ஒழுக்கம்தான் வீரம். ஒழுக்கம் தவறுதல் கோழைத்தனம் என்பது இதற்குப் பொருள். திருமணமாகாதவன் தனக்குத் திருமணம் ஆகும்வரை கட்டுப்பாட்டுடன் இருப்பதே பேராண்மை. சபலப்பட்டு பெண்கள் மீது மோகம் கொள்ளக்கூடாது என்பது பொருளாகும். மழை நீரைப் பெறுவது வயல்களுக்கு இனியது என்று கூறப்பட்டது. வயலில் நீர் பாய்ந்தால்தான் நெல், கரும்பு போன்ற பயிர்கள் நிறைந்து அழகு பெறும். மழை நீர் பாயாவிடில் வயல் வறண்டு அழகற்றுப் போகும். ஆகவே, மழை நீரே வயலின் அழகுக்கு அடிப்படையாகும். மன்னன் அரண்மனையில் யானைகள் பிளிரும் சப்தம் கேட்கும். அந்த மன்னன் நீதிநெறி தவறாமல் ஆட்சி செய்தால், அந்த சப்தம் இனிமையானதாக மாறும் என்பது கருத்து. அதாவது தனி மனிதனாக இருந்தாலும், மன்னனாக

இருந்தாலும் நீதி நெறி தவறாமல் வாழ்ந்தால் அவனைச் சார்ந்த அனைத்துமே இனிமையாக மாறிவிடும். செல்வம் படைத்தவர்கள் பலர் இகழ்ச்சியாக பேசப்படுவதை கேட்கி றோம். அறநெறி, தவறி செல்வம் சேர்த்தால் அந்தச் செல்வந் தர்களின் மனசாட்சியே துன்புறுத்தும். ஆகவே, அறநெறி யுடன் வாழ்வதே மன்னனுக்கு மகிழ்ச்சி தரும் என்று கூறப் பட்டது.

அ.பொ.

பிறன்மனை-மற்றவர் மனைவியை. பின்னோக்காப் பீடினிது-திரும்பிப் பார்க்காத ஆண்மை. வறனுழைக்கும் பைங்கூழ்க்கு வான்சோர்வு இனிதே-மழை நீரைப் பெறுவதே பயிர்களுக்கு இனிமை; மதமுழக்கம்-யானை பிளிறும் சப்தம்.

கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே
எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது. *16*

விளக்கவுரை

கல்வியின் தன்மையை கற்றோர்முன் சொல்லி வாழ்த்துப் பெறுதல் மிகவும் இனியது. அறிவுள்ளவர்களிடம் நட்பு வைத்து வாழ்வது வாழ்க்கைக்கு இனியதாகும். எந்தப் பொருளையும் யாசகமாக கேட்காமல், தன்னிடம் வந்து கேட்பவர்க்குக் கேட்டதைக் கொடுப்பதுஇனிமையாகும். கல்வியின் தன்மையைக் கற்றவர்களே அறிவார்கள். கல்லாத வர்களுக்கு அதன் பெருமை தெரியாது. ஆகவே, கல்வியின் தன்மையை, நன்கு கற்றவர்களிடம் சென்று வாழ்த்துப் பெறவேண்டும். இந்த உலகில் ஆன்மிகத்தைவிடச் சிறந்த கல்வி கிடையாது. ஆனால், அதை அறிந்தவர்கள் ஞானிகள் தான். தவசீலர்கள்தான். மற்றவர்களுக்கு அது தெரியாது. செல்வமும் போகமும்தான் பலரின் லட்சியமாக உள்ளது. அத்தகையோ ரிடம் சென்று ஆன்மிகக் கல்விக்கு வாழ்த்துப் பெறமுடியாது. அப்படி வாழ்த்துப் பெற்றாலும் பயன்

இல்லை என்பது பொருளாகும். அறிவுள்ளவர்களிடம் வைக்கும் நட்புதான், இனிமை தரும் என்று கூறப்பட்டது. அறிவுத்தளம் என்பது லௌகிக தளத்தைவிட மிகஉயர்வானது. சிற்றின்பம், உணவு இன்பம் போன்றவை கீழ்த்தளம். இந்த இன்பத்தைக் காட்டிலும் பலமடங்கு இன்பம் தருவது அறிவுத் தளம். ஆகவே, அறிவுள்ளவர்களிடம் நட்பு கொண்டால் மட்டுமே அந்த இன்பத்தை நாம்அறிய முடியும் என்பது பொருளாகும். எந்தப் பொருளையும் யாசகமாக கேட்காமல் தன்னிடம் வந்து கேட்பவர்க்கு கேட்பதைக் கொடுப்பதே இனியது என்று கூறப்பட்டது. யாசகம் கேட்பது தன்மானத் திற்கு இழுக்கை ஏற்படுத்துவது. ஆகவே, யாசகம் கேட்கும் நிலைக்கு நம்மை கீழ்நோக்கிச் செலுத்தக்கூடாது. மற்றவர் களுக்குக் கொடுக்கும் வகையில் நம் தகுதியை உயர்த்திக் கொள்ளவேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

கற்றார்முன்-கல்வி கற்றவர் முன்பு. மிக்காரைச் சேர்தல்-அறிவுள்ளவர்களுடன் சேர்தல். இரவாது-யாசகம் கேட்காமல். தான்ஈதல்-மற்றவருக்குக் கொடுத்தல்.

நட்டார்க்கு நல்ல செயலினிது எத்துணையும்
ஒட்டாரை ஒட்டிக்கொளல் அதனின் முன்இனிதே
பற்பல தானியத்த(து) ஆகிப் பலருடையும்
மெய்த்துணையும் சேரல் இனிது. 17

விளக்கவுரை

எப்போதும் நல்லவர்களைத் தேடிக் கண்டறிந்து நட்புக் கொள்ள வேண்டும். அவ்வாறு நட்புக் கொண்டவர்களுக்கு இனிய செயல்களைச் செய்வது சிறந்த இனிமையாகும். தன்னிடம் நண்பராக இருப்பவர். தன்னுடைய பகைவரிடமும் பகைவராக இருப்பார். அந்த நட்பு தான் இனிமையானது. எப்போதும் தன்னைப் பாதுகாக்கும் வீரர்கள் சூழ்ந்திருக்க, மிகப் பெரிய அரண்மனையில் வாழும் வாழ்க்கை மிகவும் இனிமையாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. நல்லவர்

களைத் தேடிக் கண்டு பிடித்து நட்புக் கொள்ளவேண்டும். அவ்வாறு நட்புக் கொண்டவர்களுக்கு இனிய செயல்களைச் செய்வது இனியது என்று கூறப்பட்டது. அனுமனின் புத்தி சாதுரியத்தால் சுக்ரீவனுக்கு இராமனின் நட்புக் கிடைத்தது. அதனால் இராஜ்ஜியத்தைச் சுக்ரீவன் பெற்றான். வெற்றி தேவதை அவனை வலம் வந்தாள். நட்பின் பெருமைக்கு இது மிகச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது. ஆகவே, நட்பு என்பது ஆராய்ந்து கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும் என்பது, பொருளாகும். நண்பரின் பகைவர் தனக்கும் பகைவரே என்று நினைப்பதுதான் இனிமையான நட்பு என்று கூறப் பட்டது. வாலியின் மகன் அங்கதன் இலங்கை வந்து இராவ ணனுக்கு எச்சரிக்கை செய்கிறான். அப்போது இராவணன் சூழ்ச்சியாகப் பேசுகிறான். உன் தந்தையைக் கொன்றவனுக் காகப் பரிந்து பேச வந்திருக்கிறாயே! உனக்கு வெட்கமாக இல்லையா? நீ என்னிடம் சேர்ந்துகொள். அந்தக் சுக்ரீவனைக் கொன்று உன்னை அரசனாக்குகிறேன் என்றான். அதற்கு அங்கதன் அதர்மத்தின் மொத்த வடிவமான நீயா எனக்கு அறிவுரை கூறுகிறாய். தருமத்தின் வடிவான இராமபிரானின் பகைவன் நீ! அவருக்கு நண்பர்களான நாங்கள் உனக்குப் பகைவர்கள் என்றான். இதுவே உண்மையான நட்பு. நம் நண்பருக்குப் பகைவர் நமக்கும் பகைவரே. இதுவே உயர் நட்பு என்பது பொருளாகும்.

அ.பொ.

நட்டார்க்கு-நட்புக் கொண்டவர்களுக்கு. நல்ல செயலினிது-இனிய செயல்களைச் செய்வது நல்தது. எத்துணையும் ஒட்டாரை-நண்பர்களாய் இருப்பவரை பகைப்பவரை. பற்பல தானியத்தது-பல உணவு தானியங்களை; மெய்த்துணையும் சேறல் இனிது-பாதுகாக்கும் வீரர்கள் சூழ்ந்திருக்க.

மன்றின் முதுமக்கள் வாழும் பதிஇனிதே
தந்திரத்தின் வாழும் தவசிகள் மாண்பினிதே
எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்
கண்டெழுதல் காலை இனிது. 18

விளக்கவுரை

பெரியோர்கள் அதிகமாக வாழும் ஊரில் வாழ்வதே இனிமையான வாழ்க்கை. அறநூல்களைக் கற்று அதன்படி வாழ்தல் இனிமையானது. தாய், தந்தையைத் தேடிச் சென்று அவர்களின் பாதங்களில் விழுந்து வணங்கி எழுவது இனிமைகளில் எல்லாம் சிறந்த இனிமையாகும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. பெரியோர்கள் அதிகமாக வாழும் ஊரில் வாழ்வதே இனியது என்று கூறப்பட்டது. பெரியோர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தால், அந்த ஊரில் அட்டூழிய காரியங்கள் நடக்காது. அப்படியே நடந்தாலும் உடனே அது அடக்கப்படும். தீயவர்கள் அதிகமாக இருந்தால் தீமையின் கரமே உயரும். தருமத்தை நிலை நிறுத்துவது கடினமான இருக்கும். அதனால் பாமர மக்களும், நல்லோர்களும் பல்வேறு துன்பம் அடைவார்கள். ஆகவே, சான்றோர்கள் அதிகம் இருக்கும் ஊரில் வாழ்வதே இனிமையாகும். அறநூல்களைக் கற்று அதன்படி வாழ்ந்தால் இனிமையாகும். அறநூல்கள் என்பது தெய்வம் நமக்குள்ளே இருக்கிறது. மற்ற எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கிறது. ஆகவே, எவ்வுயிருக்கும் தீமை செய்யக்கூடாது என்ற மெய்ஞ்ஞானத்தைப் பெறுவதாகும். இந்த மெய்ஞ்ஞானத்தையும் போதிக்கும் அறநூல்களை வாசித்து வாழ்க்கையில் அதனைச் செயல்படுத்த வேண்டும். அதுவே மண்ணுலகில் பிறந்ததன் பெருமையாகும். இந்த அறநெறியை அறியாதவர்கள் பூமிக்குப் பாரமாக வாழ்பவர்கள் என்பது பொருள். தாய், தந்தையைத் தேடிச் சென்று, அவர்கள் பாதங்களில் விழுந்து வணங்குவது இனியது என்று கூறப்பட்டது. ஆதிபராசக்தி, ஒவ்வொரு உயிர்களிடமும் சென்று அன்பு காட்டவேண்டும் என்பதற்காகவே தாயாக வடிவெடுத்து வருகிறாள். ஆகவே, தாய் என்பவள் சக்தியின் வடிவம். தந்தை சிவ வடிவம். அந்த சிவசக்தியின் பாதங்களில் விழுந்து வணங்குவது சாட்சாத் சிவபெருமானையும், உமா தேவியையும் வணங்குவது போல் என்பது பொருளாகும்.

அ.பொ.

முதுமக்கள்-பெரியோர்கள். பதி இனிதே-ஊர் இனிது. தந்திரத்தின் வாழும் தவசிகள்-தவ வாழ்க்கை மேற்கொள்ளக் கூடியவர்கள். மாண்பு-சிறப்பு. இருமுதுமக்கள்-தாய், தந்தை. கண்டெழுதல்-பாதம் கண்டு பணிதல். காலை இனிது-இனிமையான காலைப் பொழுதாகும்.

நட்டார்ப் புறங்கூறான் வாழ்தல் நனிஇனிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகல் முன்இனிதே
முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால் மற்றது
தக்குழி ஈதல் இனிது. 19

விளக்கவுரை

நண்பர்களுடன் எப்போதும் இனிமையாகப் பழக வேண்டும். அவர் இல்லாதபோது குறைகள் கண்டு, புறம் பேசாமல் இருப்பது மிகவும் இனிமையானது. சத்தியத்தின் வழி செல்பவர்களைப் பின்பற்றி, அவர் காட்டிய வழியில் வாழ்வது இனிமையாகும். செல்வத்தைத் தானமாக வழங்கும் போது அவர்கள் பெறுவதற்குத் தகுதியானவர்கள்தானா என்பதைக் கண்டறிந்து வழங்குவது இனிமையானது. இப் பொருளில் இப்பாடல் உள்ளது. நண்பர்களுடன் இனிமை யாகப் பேசவேண்டும். அவர் இல்லாதபோது குறைகூறி புறம் பேசாமல் இருப்பது இனியது என்று கூறப்பட்டது. இனிமை யான பேச்சுதான் எல்லா நலன்களையும் தரவல்லது. இனிமை யான சொற்களால் இமாலய சாதனைகளைச் செய்யலாம். கடும் சொற்களும், நண்பர் இல்லாத நேரத்தில் குறை கூறி புறம்பேசுவதும் இழுக்காகும். அதனால் தீமையே வரும் என்பது கருத்து. சத்தியத்தின்வழி செல்பவர்களைப் பின்பற்றிச் செல்வது இனியது என்று கூறப்பட்டது. சத்திய வழி என்பது தெய்வத்தை நோக்கிச் செல்லும் வழி. மற்ற வழிகள் அனைத் தும் சத்தியமில்லாத வழியே ஆகும். நாம் அனைவரும் தெய்வத்திடமிருந்தே வந்திருக்கிறோம். திரும்பவும் அவரி டமே சென்று ஐக்கியமாக வேண்டும். அதுவே நிலையான பேரானந்த வாழ்வு, இத்தகைய சத்திய பாதையில் செல்கின்ற

ஞானிகள், சித்தர்கள், அவதாரப் புருஷர்கள் காட்டும் வழியில் நாம் செல்ல வேண்டும். செயலில்தான் வெற்றி அடங்கியிருக் கிறது. சத்தியப்பாதை என்பது தியானம், ஒழுக்கம், சுயநல மின்மை. இந்தப் பாதையில் தொடர்ந்து செல்வதே இனிமை யாகும். செல்வத்தைத் தானமாக வழங்கும்போது அதைப் பெறுவதற்கு அவர்கள் தகுதியுள்ளவர்கள்தான் என்பதை அறிந்து வழங்கவேண்டும் என்று கூறப்பட்டது. வறுமையில் இல்லாதவர்கள்கூட செல்வத்தைக் குறுக்கு வழியில் பெற முயலக்கூடும். வறுமையுள்ளவர்களுக்குச் சேரவண்டிய செல்வம் தவறுதலாக மற்றவர்கள் கையில் சென்றுவிடக் கூடாது என்பது கருத்து.

அ.பொ.

நட்டார்-நட்புக் கொண்ட நண்பர்கள். புறங்கூறான்-குற்றங்களை பிறரிடம் கூறாதிருத்தல். பட்டாங்கு பேணி பணிந்தொழுகல்-சத்தியத்தைப் பின்பற்றும் பெரியோர்களைப் பணிவது. முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால்-நேர்மையான வழியில் செல்வத்தைச் சம்பாதித்த பிறகு. தக்குழி ஈதல் இனி-தகுதியானவர்களா என்று பார்த்து. கொடை வழங்க வேண்டும்.

சலவரைச் சாரா விடுதல் இனிதே
புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது. 20

விளக்கவுரை

உள்ளத்தை மறைத்து வஞ்சக வேடம் போட்டு வாழ்பவர் களை நீங்கி இருப்பது இனிமையானது. பெரியோர்களின் அறிவுரைகளை தங்களைக் காப்பாற்றிக் கொள்ள பயன் படுத்திக் கொள்வது இனிமையானது. உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் பொருளாதாரத்தில் சமஅளவில் வாழ்வது மிகவும இனிமையானதாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. உள்ளத்தை மறைத்து வஞ்சக வேடம் போட்டு வாழ்பவர்களை நீங்கி இருப்பது இனிமை என்று

கூறப்பட்டது. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசு பவர்கள் பாம்பு போன்றவர்கள். விஷத்தை உள்ளே வைத்து நாவில் தேன் போல இனிமையாகப் பேசுபவர்களை அடை யாளம் கண்டு நீக்க வேண்டும். துரியோதனனை அழிக்க வந்தவன் சகுனி. ஆனால், அவனுக்கு நன்மை செய்பவன்போல் இனிமையாகப் பேசி கௌரவர் குலத்தையே அழித்தான் வஞ்சக சகுனி அந்த சகுனியைப் போல் வங்சகர்கள் நம்மை சுற்றியிருக்கக் கூடும். அறிவாற்றலால் அதனை அறிந்து நீங்க வேண்டும் என்று இனியவை நாற்பது வலியுறுத்துகிறது. பெரியோர்களின் அறிவுரைகளால் நம்மை பாதுகாத்துக் கொள்வது இனியது என்று கூறப்பட்டது. ஒருகட்டத்தில் நாராயண அஸ்திரத்தை அஸ்வத்தாமன் பாண்டவர்கள் படைமீது ஏவினான். உடனே பகவான் ஸ்ரீகிருஷ்ணன் அனைவரும் ஆயுதங்களை பூமியில் போடுங்கள் என்றார். அதேபோல் அனைவரும் போட்டனர். ஆனால் பீமன் மட்டும் கோபமுடன் போடாம் நின்றால் அவனையும் கட்டாயப் படுத்தி போட வைத்தார் கிருஷ்ணர் ஆயுதம் இல்லாதவர்களை நாராயண அஸ்திரம் தாக்காது. என்பதால் இந்த அறிவுரையை பகவான் கூறினார். அவர் கூறியதை கேட்காமல் போயிருந்தால் பாண்டவர் படை அனைத்தும் அழிந்திருக்கும். ஆகவே, நம்மை காப்பாற்றிக் கொள்ள பெரியோர் அறிவுரையை கேட்க வேண்டும் என்பது கருத்து. எல்லா உயிர்களும் செல்வ வளத்தில் சமமாக இருந்தால் இனியது என்று கூறப்பட்டது. அப்படி நடந்து விட்டால் இந்த பூமியே சொர்க்கமாகி விடும் என்பது கருத்து.

அ.பொ.

சலவரை-வஞ்சக எண்ணம் கொண்டவர்களை. சாரா விடுதல் இனிது-சேராமல் நீங்குவது இனியது. புலவர் தம் வாய்மொழி-அறிவுடைய சான்றோர் கூறும் சொற்கள். மலர்தலை ஞாலத்து-வானத்தின் கீழ் உள்ள பூமியில். மன்னுயிர்க்கெல்லாம்-பூமியில் வாழும் எல்லா உயிர் களுக்கும். தகுதியால் வாழ்தல் இனிது-சமபொருளாதாரத்தில் வாழ்வது இனியது.

பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்தல் இனிதே
அறம்புரிந்(து) அல்லவை நீக்கல் இனிதே
மறந்தேயும் மாணா மயரிகள் சேராத்
திறம்தெரிந்து வாழ்தல் இனிது. 21

விளக்கவுரை

பிறர் பொருள்மீது ஆசைப்படாமல், தனக்கு உரிமை யுள்ள பொருள்களை மட்டும் கைப்பற்றி வாழ்வது இனிமை யானது. பாவங்கள் செய்வதைப் பற்றி நினைக்காமல் இருப்பது இனியது. அறிவற்றவர்களைக் கண்களால் பார்ப்பதைக்கூட தவிர்த்து விட்டு வாழ்வது மிகவும் இனியது. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. பிறர் பொருள் மீது ஆசைப் படாமல், தனக்கு உரிமையுள்ள பொருள்களை மட்டும் கைப்பற்றி வாழ்வது இனிமை என்று கூறப்பட்டது. மகா பாரதத்தில் பங்காளிகனின் சொத்தைக் கௌரவர்கள் கைப் பற்ற நினைத்தனர். பூண்டோடு அழிந்தனர். இராமாயண காவியத்தில் அடுத்தவர் மனைவியைக் கைப்பற்ற இராவணன் முயன்றான். அவனும் அழிந்தான். வாலி தன் தம்பிக்குச் சேர வேண்டிய உரிமைகளைப் பறித்தான். அவனும் அழிந்தான். இந்த இதிகாசங்கள் எல்லாம், நாம் வாழும் முறையை நிர்ணயம் செய்ய எழுந்தவைகளாகும். நம்முடைய வாழ்க்கை யில் நமக்கு உரிமையுள்ளவற்றையே கைப்பற்றி மகிழ்ச்சி யோடு வாழவேண்டும். மாறாக, மற்றவர்கள் சொத்தில், உடமைகளில் ஆசை வைத்தால், நாமும் பல துன்பங்களை அனுபவிக்க நேரும் என்பது கருத்தாகும். பாவங்கள் செய்ய நினைக்காமல் இருப்பது இனியது என்று கூறப்பட்டது. கொலை, களவு, பிறர் பொருள் மீது ஆசை ஆகியவை, பாசச் செயல்கள். இந்தப் பாவச் செயல்களே நம்முடைய துன்பத் திற்கு வித்தாக இருக்கிறது. விதி என்று சொல்வது நம்முடைய செயல்களால் வருபவையே. ஆகவே, நல்ல செயல்களைச் செய்து, தீவினைகளை அழிக்க வேண்டும். பாவச் செயல் களைச் செய்ய நினைப்பது மேலும் துன்பங்களை வரவழைத் துக் கொள்வதாகும். அறிவற்றவர்களைப் பார்ப்பதைக்கூட

தவிர்ப்பது இனியது என்று கூறப்பட்டது. அறிவற்றவர்களின் தொடர்பு நமக்குப் பழியைக் கொண்டு வரும். நஷ்டத்தைக் கொண்டு வரும். பாவமூட்டைகளைப் பெருகச் செய்யும். வாழ்க்கை முழுவதும் துன்பம் அனுபவிக்க வைக்கும். ஆகவே, அறிவற்றவர்களின் தொடர்பை அறவே நீக்கவேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

பிறன்கைப் பொருள்-மற்றவன் பொருள் மீது. வெளவான்-ஆசைப்படாமல். அறம்புரிந்து-தரும காரியங்களைச் செய்து. அல்லவை நீக்கல்-தீயவற்றை நீக்குதல். மறந்தேயும்-மறந்தும்கூட. மாணா மயரிகள்-நற்செயல்கள் செய்யாதவர்கள். திறம்தெரிந்து வாழ்தல் இனிது-அறிவற்றவர்களின் அடையாளம் கண்டு அவர்களை நீக்கி வாழ்வது இனிது.

வருவாய் அறிந்து வழங்கல் இனிதே
ஒருவர்பங் காகாத ஊக்கம் இனிதே
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்தல் இனிது. 22

விளக்கவுரை

வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்தி, முடிந்த அளவுக்கு மற்றவர்களுக்குக் கொடுப்பது இனியது. எந்தக் காரியத்திலும் நடுநிலையுடன் ஆராய்ந்து அணுகுவது இனிமை யான செயலாகும். எப்போதும் பெரியளவு நோக்கங்களைக் கொண்டு, முயற்சி செய்ய வேண்டும். பெரிய நோக்கங்கள் முழுவதுமாக நிறைவேறா விட்டாலும் வேண்டிய அளவு நிறைவேறும். ஆகவே, பெரிய நோக்கங்களைச் செய்ய முயல்வது இனியது. இப்பொருளில் இப்பாடல் உள்ளது. வருவாய்க்குத் தக்கவாறு. வாழ்க்கை நடத்தி, முடிந்த அளவுக் குப் பிறருக்கு உதவுவது இனிமை என்று கூறப்பட்டது. மற்ற வர்களுக்கு உதவுவதுதான், நாம் வாழ்கிறோம் என்பதற்கு அடையாளம். சுயநலத்துடன் தானே உண்டு கொழுத்து வாழ் வது மிருக இயல்பு. மனிதர்களாகப் பிறந்த நாம், மனிதாபி

மானத்துடன் வாழவேண்டும் இரக்கமும், கருணையும் நம் பலமாக அமைய வேண்டும். ஒவ்வொரு உயிர்களுக்குள்ளும் இறைவன் உறைகிறான். நம் கண்முன்னே காட்சியளிக்கும் உயிர்களிடம், தெய்வத்தைக் காண முடியாதவர்கள். வேறு எப்படி இறைவனைத் தரிசிக்கமுடியும். ஆகவே, வருவாய்க்குத் தக்கபடி வாழ்ந்து, பிறரையும் நாம் வாழ வைக்க வேண்டும் என்பது பொருளாகும். எந்தக் காரியத்திலும் நடுநிலையுடன் ஆராய்ந்து அணுகுவது இனியது என்று கூறப்பட்டது. இறைவன் நடுநிலையானவர். அதனால்தான் அவர் இறைவன். அவருடைய படைப்புகளாகிய நாமும் அவர்போல் இருக்க வேண்டும். மாறாக சுயநலப் பேய்களாக வாழ்ந்து, நடுநிலைமை தவறி வாழ்வது இழுக்கு. தெய்வ தரிசனம் பெறவேண்டுமா னால் நாம் தெய்வீகக் குணங்களைப் பெறவேண்டும். சுயநலத்தை ஒழிக்க வேண்டும். தரும தேவதைபோல் சமநீதி யுடன் வாழ்ந்து காட்ட வேண்டும். அதுவே, பேரானந்த வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செயலும் புனிதப் பாதை யாகும். ஒரு முயலை குறிவைத்து வெற்றி அடைவதைவிட, வெட்ட வெளியில் நின்று யானை மீது வேல் எறிந்து, அது தவறினாலும் சிறந்தது. அதுபோல் நம்செயல்கள் மிகஉயர்ந்த நோக்கத்துடன் இருக்க வேண்டும். அது நடக்கவில்லை என்றாலும், தொடர்ந்து முயன்றால் வெற்றி அடைவோம் என்பது கருத்து.

அ.பொ.

வருவாய் அறிந்து-தன் வருமானத்தைக் கணக்கிட்டு. வழங்கல்-மற்றவர்களுக்குத் தானம் செய்வது. ஒருவர் பங்காகாத ஊக்கம்-எவர் பக்கமும் சாயாத நடுநிலையை. பெருவகைத்தாயினும்-பெரிய நோக்கங்களை. திரிபின்றி வாழ்தல் இனிது-முயற்சியுடன் வாழ்தல்.

காவோ(டு) அறக்குளம் தொட்டல் மிகஇனிதே
ஆவோடு பொன்னீதல் அந்தணர்க்கு முன்இனிதே
பாவமும் அஞ்சாராய்ப் பற்றுந் தொழில்மொழிச்
சூதரைச் சோர்தல் இனிது. *23*

விளக்கவுரை

ஒரு காரியத்தைத் தொடங்கும் போது, முதலில் செய்ய வேண்டியதை இரண்டாவதாகச் செய்யக்கூடாது. முதலில் செய்ய வேண்டியதை முதலிலேயே செய்வது இனியது. வேதங்களை மற்றவர்களுக்காக தருகிறவர்களுக்குக் காணிக்கையாகப் பசு, பொன் ஆகியவற்றைக் கொடுப்பது இனியது. இம்மை, மறுமை ஆகிய இரண்டுக்கும் நன்மை தருவதை ஆராய்ந்து செய்வது இனியது. இப்பொருளில் இப்பாடல் உள்ளது. ஒரு காரியத்தைத் தொடங்கும்போது முதலில் செய்ய வேண்டியதை இரண்டாவதாகச் செய்யக்கூடாது என்று கூறப்பட்டது. வீடு கட்டும்போது முதலில் அடித்தளம் அமைப்பார்கள். அடித்தளப் பணியை முடிக்காமல் சுவர் கட்ட முடியாது. கட்டக்கூடாது. அதேபோல் நாம் தொடங்கும் காரியத்தில் முதலாவதாகச் செய்ய வேண்டிய வேலையைச் செய்யாமல், இரண்டாவது கட்டத்திற்குப் போகக் கூடாது. போதுமான பணத்தைச் சேகரித்த பின்தான் திருமண ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். திருமண ஏற்பாடுகளைச் செய்து விட்டு, பணத்தைச் சேகரிக்க முயன்றால் அது கடினமாகும். பள்ளியில் அட்மிஷன் கிடைத்த பிறகு அந்தப் பகுதியில் வாடகைக்கு வீடு பார்க்கலாம். முதலில் வீடு பார்த்துக் குடியேறி விட்டு அட்மிஷனுக்காக முயலக்கூடாது. அட்மிஷன் கிடைக்காமல் போகலாம். அதனால் வீடு எடுத்தது வீணாகும். இப்படி, எல்லா விஷயங்களிலும் முதலில் செய்ய வேண்டியதை முதலில் செய்ய வேண்டும். இரண்டாவதாகச் செய்ய வேண்டியதை இரண்டாவது செய்ய வேண்டும் என்று பொருளாகும். வேதங்களைக் கற்றுத் தருகிற பெரியோர்களுக்குப் பசு, பொன் ஆகியவற்றைக் கொடுப்பது இனியது என்று கூறப்பட்டது. வேதம் என்பது எல்லாவற்றிற்கும் வழிகாட்டும் தெய்வ நூலாகும். அதைக் கற்பிப்பவர்களைத் தெய்வமாகவே கருதி பசு, பொன் ஆகியவற்றைக் காணிக்கையாகத் தந்து அவர்கள் மகிழ்வடையும்படி செய்ய வேண்டும் என்பது கருத்து. இம்மை, மறுமை ஆகியவற்றிற்கு நன்மை தருவனவற்றை ஆராய்ந்து செய்ய

வேண்டும் என்று சொல்லப்பட்டது. இவை இரண்டுக்கும் நன்மை பயக்கக்கூடியது அறச் செயல்களே. அறச் செயல்கள் மூலம் தீவினை அழியும். அது அழிந்தால் இம்மையில் சுகம் வரும். மறுமையில் சுவர்க்கம் கிட்டும் என்பது பொருள்.

அ.பொ.

கா-சோலை. அறக்குளம்-நீருக்குரிய குளம்; ஆவோடு பொன்னீதல்-பசுவோடு பொன் தருதல். பாவமும் அஞ்சாராய்-பாவம் செய்வதற்கு அஞ்சாதவர்களாய். சூதர்-சூதாடிகள். சோர்தல் இனிது-நீங்குதல் நல்லது.

வெல்வது வேண்டி வெகுளாதான் நோன்பினிதே
ஒல்லுந் துணையும் ஒன்(று) உய்ப்பான் பொறை இனிதே
இல்லது காமுற் றிரங்கி இடர்ப்பட்டார்
செய்வது செய்தல் இனிது. 24

விளக்கவுரை

பாதிப்பை ஏற்படுத்தும் கோபத்தை அடக்கி ஆள்வது தவத்தைப் போல் இனியது. வெற்றிக்குத் தீவிர முயற்சி செய்ய வேண்டும். அந்தச் செயல் வெற்றி யடைந்தாலும், அடையா விட்டாலும் அதற்குச் செய்த முயற்சியும், ஆற்றலும் இனிமை யானது. தனக்குக் கிடைக்காத ஒன்றுக்காக ஏங்காமல், தனக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைவது இனியது. பாதிப்பை ஏற்படுத்தும் கோபத்தை அடக்கி ஆள்வது, தவத்தைப் போல் இனியது என்று கூறப்பட்டது. கோபம் என்பதை நம் உடலைக் கெடுக்கும். வெளிப் பகையை வளர்க் கும். ஆபத்தில் நம்மைச் சிக்கவைக்கும். அவசர கோபத்தால் கொலை செய்து விட்டுச் சிறைக் கம்பிகளை எண்ணிக் கொண்டிருப்பவர்களைக் காண்கறோம். ஆகவே, பாதிப்பை ஏற்படுத்தும் கோபத்தை அடக்கி ஆள்வது இனியது. வெற்றிக்குத் தீவிர முயற்சி வேண்டும் என்று கூறப்பட்டது. முயற்சி என்றால் எதிர்த்தல் என்று பொருள். அதாவது செய்யும் காரியத்திற்கு வரும் எல்லாத் தடைகளையும் எதிர்த்தல் முயற்சி ஆகும். வெற்றி கிடைக்கும் வரை விடாமல் செய்யும்

பிரயத்தனமே முயற்சிக்கு இலக்கணம். இந்த இலக்கணத்தைச் சரியாகச் செயல்படுத்தினால் வெற்றி உறுதி என்பது கருத்து. சிலசமயங்களில் வெற்றி தாமதம் ஆனாலும், அதற்கான முயற்சியும், ஆற்றலை வெளிப்படுத்திய விதங்களும் இனிமை யாகும். தனக்குக் கிடைக்காத ஒன்றை நினைத்து ஏங்காமல் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைவது இனிமை யானது. துரியோதனனின் தந்தையாகிய திருதராட்டிரன் பார்வையற் றவன். ஆனால் அறிவில் சிறந்தவன். துரியோதனன். பாண்டவர் களை வெல்ல தேவர்களாலும் முடியாது. அவர்களைப் பகைத்து அழிந்து போகாதே. உனக்குக் கிடைத்திருக்கும் இராஜ்ஜியத் தைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்க. பாண்ட வர்கள் இராஜ் ஜியத்தை விரும்பாதே. அவர்கள் உன் சகோதரர்கள். அவர் களை அனுசரித்து வாழ்ந்தால் உன்னை வெல்ல எவராலும் முடியாது என்று பலமுறை அறிவுரை கூறினான். ஆனால், மூடனான துரியோதனன் தந்தை சொல்லை கேட்க வில்லை. பொறாமை காரணமாக பாண்டவர் இராஜ்ஜியத்தை யும் கைப்பற்றி வாழ நினைத்தான். ஆனால் அவனுடைய ராஜ்ஜிய மும் பாண்டவர் பக்கம் போனது. ஆகவே, இருப் பதைக் கொண்டு திருப்தி அடையவேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

வெல்வது வேண்டி-வெற்றி பெறவேண்டுமாயின். வெகுளாதான் நோன்பினிதே-கோபம் கொள்ளாமல் இருப்பது இனியது. ஒல்லும் துணையும்-ஒவ்வொரு செயலிலும். ஒன்று உய்ப்பான்-தீவிர முயச்சி செய்தல். இனிது-நல்லது. இல்லது-கிடைக்காத ஒன்றுக்காக. காமுற் றிரங்கி-ஆசைப்பட்டு ஏங்காமல்.

ஐவாய வேட்கை அவா அடக்கல் முன்இனிதே
கைவாய்ப் பொருள்பெறினும் கல்லார்கண் தீர்வினிதே
நில்லாத காட்சி நிறையில் மனிதரைப்
புல்லா விடுதல் இனிது. *25*

விளக்கவுரை

ஐம்புலன்களுக்கும் ஒவ்வொரு விதமான இன்பம் தேவைப்படுகிறது. அதிக இன்பம் துன்பமாகவும் மாறும்.

ஆகவே, அந்த இன்பங்களை அளவோடு கட்டுப்படுத்தி வாழ்வது இனியது. கல்வி கற்காதவர்களிடம் ஒரு பொருளை வாங்காமல் இருப்பது இனியது. நிலையற்ற பேச்சையும், செயலையும் கொண்டவர்களுடன் நட்புக் கொள்ளாமல் இருப்பது இனியது. இப்பொருளில் இப்பாடல் அமைந் துள்ளது. காது இசையை விரும்பும். நாக்கு ருசியை விரும்பும். மூக்கு வாசனையை விரும்பும். உடல் சிற்றின்ப சுகத்தை விரும்பும். கண்க்காட்சிகளை, காண விரும்பும். இவ்வாறு ஐம்புலன்களுக்கும் ஒவ்வொரு இன்பம் தேவை. இந்த இன்பம் அதிகமானால் துன்பமாக மாறும். ஆகவே, ஐம்புலன்களை யும் கட்டுப்படுத்தி இறைவன் மீது கவனத்தைத் திருப்ப வேண்டும். அப்படித் திருப்புவது இனியது; நல்லது என்பது பொருளாகும். கல்வி கற்காதவர்களிடம் ஒரு பொருளை வாங்காமல் இருப்பது நல்லது என்று கூறப்பட்டது. மூடர் களிடம் வாங்கும் பொருளால் நமக்குப் பெருமை ஏற்படாது. நன்கு கற்றவர்கள், அறிவாற்றல் உள்ளவர்கள் நமக்கு பொருள் அளித்தால் அதுவே பெருமை. நம்முடைய திறமைக்கு அங்கீகாரம் அதுவே என்பது கருத்து. நிலையற்ற பேச்சையும், செயலையும் உடையவர்களிடத்தில் நட்புக் கொள்ளாமல் இருப்பது இனியது என்று கூறப்பட்டது. குடிகாரன் நிலையான பேச்சுகளைப் பேசமாட்டான். குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சு என்று சொல்வார்கள். அத்தகைய நிலையற்ற சொற் களைப் பேசுபவர்களுடன் நட்பு வைக்க கூடாது. சிலர் குடிப் பழக்கம் இல்லாவிட்டாலும், மனஉறுதியில்லாதவர்களாக இருப்பார்கள். ஒரு செயலை உருப்படியாகச் செய்யமாட் டார்கள். தாவி, தாவிச் சென்று கொண்டே இருப்பார்கள். நம்மையும் அதேபோன்ற நிலைக்கு ஆக்கி விடுவார்கள். அதனால், நாம் துன்பமும் நஷ்டமும் அடைய நேரும். நன்கு ஆராய்ந்து முடிவெடுத்த பிறகு செயலில் உறுதியாக இறங்க வேண்டும். செயலில் இறங்கிய பிறகு ஆராயலாம் என்பது கூடாது. அத்தகைய அறிவிளிகளின் நட்பை விட்டு நீங்க வேண்டும் என்று இனியவை நாற்பது கூறுகிறது.

அ.பொ.

ஐவாய வேட்கை-ஐம்புலன்களால் உண்டாகும் ஆசை; அடக்கல் முன்இனிதே-கட்டுப்படுத்தல் இனியது. கைவாய்ப் பொருள்பெறினும்-ஒரு பொருளை மற்றவர்களிடம் பெறவேண்டியிருந்தாலும். கல்லார்கண்-படிக்காதவர்களிடம். நில்லாத காட்சி நிறையில் மனிதரை-கொள்கை, செயல் ஆகியவற்றை அடிக்கடி மாற்றும் நிலையற்ற மனிதர்களை. புல்லா விடுதல் இனிது-நட்புக் கொள்ளாமல் இருப்பது இனியது.

நச்சித்தற் சென்றார் நசைகொல்லா மாண்பினிதே
உட்கில் வழிவாழா ஊக்கம் மிகஇனிதே
எத்திறத் தானும் இயைவ கரவாத
பற்றினின் பாங்கினிய தில். 26

விளக்கவுரை

ஒருவர் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான பொருளை நம்மிடம் பெறவிரும்பும்போது, அவருக்கு அதைக் கொடுத்து உதவுவது இனியது. நாம் செல்லும் இடங்களில் நம்மை மதிக்காதவர்களிடம் சேராமல் இருப்பது இனியது. நம்மிடம் அத்தியாவசியமான ஒரு பொருளைக் கேட்டவர்க்கு அன்புடன் அதை வழங்கிப் பயன்படும்படி செய்வது இனியது. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. ஒருவர் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான பொருளை நம்மிடம் பெற விரும்பும் போது, அதைக் கொடுப்பது இனியது என்று கூறப்பட்டது. திருமணத்திற்குத் தாலி வாங்க வேண்டும். அதை வாங்கித் தரும்படி ஒருவர் கேட்கிறார். உடனே அதை நாம் நிறை வேற்ற வேண்டும். திருமணத்திற்குத் தாலி மிகவும் முக்கியமானது. இல்லாமை காரணமாக அவர் நம்மிடம் அதை எதிர்பார்க்கும்போது உதவுவது இனிமையானது. ஒருவர் தன் மகனுக்குப் பீஸ்கட்ட பணம் கேட்கிறார். பீஸ்கட்ட வில்லை என்றால் பள்ளிக்குப் போகமுடியாது. அந்த நிலையில் நாம் உதவி செய்ய வேண்டும். இப்படிப் பல அத்தியாவசிய மான விஷயங்களுக்கு நாம் உதவுவதே இனிமையாகும். நாம் செல்லும் இடங்களிலெல்லாம் நம்மை

மதிக்காதவர்களைச் சேராமல் இருப்பது இனியது என்று கூறப்பட்டது. நாம் வியாபார நிமித்தமாகப் பல இடங்களுக்குச் செல்லலாம். அல்லது வேறு பல விஷயங்களுக்காகப் பல ஊர்களுக்குச் செல்லலாம். நம்மை மதிப்பவர்களின் இடமாகப் பார்த்து செல்ல வேண்டும். மதிக்காதவர்களைக் காண்பது வீண். அவமானமும்கூட. ஆகவே, மதிக்காதவர்கள் நட்பு விலக்கப்பட வேண்டியதாகும். வாழ்க்கைக்கு அவசியமான பொருளை நம்மிடம் ஒருவர் கேட்கும்போது மறுக்கக்கூடாது. அதை வழங்க வேண்டும். அதுவே இனியது. மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காகவே இறைவன் நம்மை இந்தப் பூமிக்கு அனுப்பியிருக்கிறார். இல்லாதவர்களுக்கு வழங்குபவர்கள், இறைவனின் பிள்ளைகள் என்று அடையாளம் காணலாம். இல்லாதவர்களுக்குக் கொடுப்பவர்கள் இறைவனை மகிழ்விக்கிறார்கள். இறைவனின் மகிழ்ச்சி, நம் தளர்ச்சிகளையும், தாழ்வுகளையும் நீக்கும் மாமருந்து என்பதை மறக்ககூடாது. ஆகவே, மற்றவர்களுக்கு உதவி செய்வதே இனிமை.

அ.பொ.

நச்சித்தற் சென்றார்-விரும்பிய பொருளைப் பெறவருவோர். நசை சொல்லா-இல்லையென்று கூறாத. மாண்பினிதே-குணம் நல்லது. இயைவ கரவாத-புரிந்து கொள்ளாத.

தானங் கொடுப்பான் தகையாண்மை முன்இனிதே
மானம் படவரின் வாழாமை முன்இனிதே
ஊனங் கொண் டாடார் உறுதி உடையவை
கோள்முறையால் கோடல் இனிது. *27*

விளக்கவுரை

பாதுகாப்பற்ற சூழலில் இருப்பவர்கள் ஒரு வீரனிடம் சரண் புகுந்தால், அவனுக்கு அந்த வீரன் அபயம் அளிப்பது இனியது. தன்மானத்திற்கு இழுக்கு ஏற்பட்டால் உயிரை விடுதல் இனியது. எப்போதும் வாழ்க்கையில் குற்றங்களை நீக்கி, குணங்களையே காண்பது இனியது. இப்பொருளில்

இப்பாடல் உள்ளது. பாதுகாப்பற்ற சூழலில் இருப்பவர்கள் ஒரு வீரனிடம் சரண் புகுந்தால், அவனுக்கு அந்த வீரன் அபயம் அளிப்பது இனியது. இருள் என்ற ஒரு இருந்தால் ஒளியுண்டு. பகை என்ற ஒன்று இருந்தால் துணையுண்டு. இது இறைவனின் நியதி. ஆகவே, பாதுகாப்பவர்கள் ஒரு வீரனிடம் சரணடையும்போது, அந்தவீரன் அபயம் அளிக்கவேண்டும். அப்படி அளிக்க வேண்டும் என்பதற்காகவே இறைவன் அவனுக்குப் பலத்தையும், ஆற்றலையும் வழங்கியிருக்கிறார். சரண் அடைந்தவர்களைக் கைவிடுபவன், பாவ மூட்டையை ஏற்கிறான். செல்வம், கல்வி, வீரம், ஆற்றல், மதிநுட்பம் எல்லாமே இறைவன் கொடுத்த கொடைகள். அதை மற்ற வர்கள் நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும். துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் எல்லாச் சிறப்புகளும் நீங்கும். ஆகவே, நம்மைச் சரண் அடைந்தவர்களைக் காப்பது நம் கடமை. அதுவே இனியது எனப்பட்டது. தன் மானத் திற்கு இழிவு நேர்ந்தால் உயிரை விடுதல் இனியது என்று கூறப்பட்டது. இதன் பொருளைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். தன்மானம் போகும்படியான காரியங் களை நாம் செய்யக்கூடாது. பகைவர்கள் நமக்குத் துன்பம் செய்ய முயல்வார்கள். அந்த துன்பம் தன்மானத்துக்கு இழுக்கு என்று உயிரை விடக்கூடாது. அதை எதிர்த்துப் பகைவர்களை முறியடிக்க வேண்டும். தன்மானம் போகும் படியே அற்ப காரியங்களைச் செய்து உயிர்வாழ்வதைவிட, இறப்பது மேல் என்பது பொருளாகும். குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை. ஆகவே, குற்றங்களைப் பொருட்படுத்தாமல் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

தானம் கொடுப்பான்-அபயம் அளிப்பவன். தகையாண்மை-சரண் அடைந்தோரைக் காத்தல். முன்இனிதே-மிகவும் நல்லது. மானம் பட்டவரின்-தன்மானம் இழந்தவர். வாழாமை முன்இனிதே-உயிர் வாழாமை இனியது. ஊனங்கொண்டாடார் கோள் முறையால் கோடல் இனிது-குணங்களை மட்டும் நோக்கல் இனிது.

ஆற்றானை ஆற்றென்(று) அலையாமை முன்இனிதே
கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே
ஆக்கம் அழியினும் அல்லவை கூறாத
தேர்ச்சியின் தேர்வினிய (து) இல். 28

விளக்கவுரை

விரும்பாத தொழிலை அவரை விரும்பிச் செய்யுமாறு சொல்லாதிருப்பது இனியது. உயிர்களைப் பறிக்க ஒவ்வொரு வீட்டிற்கும் விருந்தினனாக எமன் வருவான். ஆகவே, அவன் வருவதற்கு முன்பே நல்ல நெறியில் நின்று வாழப் பழகிக் கொள்வது இனியது. செல்வம் இருப்பது இனியது. இப் பொருளில் இனியவை நாற்பது பாடல் அமைந்துள்ளது. ஒருவர் விரும்பாத தொழிலைச் செய்யுமாறு சொல்லாம லிருப்பது இனியது என்று கூறப்பட்டது. அவ்வாறு வற்புறுத் தினால் தொழில் சரியாக அமையாது. அத்தொழிலால் செய்ப வருக்கும் பயன் இருக்காது. ஒருவருக்கு எந்தத் தொழிலில் ஆர்வம் இருக்கிறதோ, அதையே செய்ய விடவேண்டும். அப்போதுதான் அத்தொழிலில் திறமை வெளிப்படும். நன்மைகள் அதிகரிக்கும் என்பதாகும். ஒரு பெண் கூடை முடைவதில் சாமர்த்தியம் பெற்றவள். ஆனால், பூமாலை கட்ட அவளுக்குத் தெரியாது. நீ பூமாலை கட்டித் தான் ஆகவேண்டும் என்று சொன்னால், மாலை அழகாக வருமா? என்பதைச் சிந்திக்க வேண்டும். அவரவர்களுக்குத் தெரிந்த தொழில், விரும்பும் தொழில் ஆகியவற்றையே செய்யும்படி உற்சாகப்படுத்த வேண்டும் என்பதும் கருத்து. ஒவ்வொரு வீட்டிற்கும் விருந்தினராக எமன் வருவான் அவன் வருவதற்கு முன்னே அறச் செயல்களைச் செய்வது இனியது என்று கூறப் பட்டது. எமன் அஞ்சத்தக்கவன் அல்லன். அவன் தருமத்தின் தலைவன். அவரவர் செயலுக்குத் தகுந்தவாறு பலன்களைத் தரும் இறைவனின் அதிகாரி. அறச் செயல்களைச் செய் வோரை அவனால் கொடுமைப்படுத்த இயலாது. மார்க்கண் டேயனுக்காகச் சிவபெருமானே அந்த எமனையே வதைத்து எமனுலகு அனுப்பினார். ஆகவே, எமனுக்கு அஞ்சுவது அறியாமை. பேதைமை. ஆனால், நாம் தூயவர்களாக அறச் செயல்களைச் செய்பவர்களாக இருக்க வேண்டும். எமன் வரும்போது எதை வேண்டுமானாலும் செய்யட்டும். இறை வனின் கண்காணிப்பில் செயல்படுபவன் எமன். நல்லோர் களை அவனால் ஒன்றும் செய்ய முடியாது என்பது பொரு ளாகும். செல்வம் அனைத்தும் நீங்கினாலும் அறநெறியை விட்டு நீங்கக்கூடாது என்பதன் பொருளும் இதுவே.

அ.பொ.

ஆற்றானை-ஒருதொழிலைச் செய்யவிரும்பாதவனை. ஆற்றென்று -செய் என்று வற்புறுத்தாமல். அலையாமை முன்இனிதே-வற்புறுத் தாமல் இருப்பது இனிமையானது. கூற்றம் வரவுண்மை சிந்தித்து-எமன் வரப்போவதை அறிந்து. வாழ்வினிது-அறச் செயல்களைச் செய்வது இனியது. ஆக்கம் அழியினும்-செல்வம் அழிந்தாலும். அல்லவை கூறாத-பாவச் செயல் செய்யாத. தேர்ச்சியின் தேர்வினியது-நல்ல நெறியில் வாழ்வது இனியது.

கயவரைக் கைகழிந்து வாழ்தல் இனிதே
உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே
எளியர் இவரென்(று) இகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது. 29

விளக்கவுரை

வாழ்க்கையில் கீழ் மக்களை விட்டு நீங்கி, அவர்களுடன் சேராமல் வாழக் கூடியது மிகவும் இனியது. வாழ்க்கையில் கஷ்டப்பட்டு வாழ நிற்பவர்களை உற்சாகப்படுத்தி நலம் பெறவைப்பது இனியது. ஏழை எளியவர்களை இகழ்ந்து, பேசாமல் இருப்பது இனியது. இப்பொருளில் இப்பாடல் உள்ளது. வாழ்க்கையில் கீழ்மக்களை விட்டு நீங்கி வாழ்வது இனியது என்று கூறப்பட்டது. கீழ்மக்கள் என்பது ஜாதியால் அல்ல. குலத்தால் அல்ல. அழகால் அல்ல. தீய செயல்களைச் செய்பவர்கள் எந்த ஜாதியானாலும் அவர்கள் கீழ்மக்களே. பெருந்தன்மை இல்லாதவர்கள், கோள்சொல்கிறவர்கள், திருடுகிறவர்கள், கொலை செய்ய அஞ்சாத கொடியவர்கள், பெற்றோர்களை மதிக்காதவர்கள், கற்றோர்களை அவமதிப் பவர்கள், உடன் பிறந்தவரைத் துன்பம் செய்கிறவர்கள், எந்த நல்ல செயலும் செய்யாமல் மரம் போல் நிற்பவர்கள் ஆகிய அனைவருமே கீழ்மக்கள்தான். இவர்களை விட்டு நீங்கி வாழ்ந்தால்தான், நமக்கு நன்மை. இல்லாவிடில் தீமையே விளையும் என்பது உட்பொருளாகும். வாழ்க்கையில் விரக்தி அடைந்து வாடி நிற்பவர்களை உற்சாகப்படுத்துவது, இனியது என்று கூறப்பட்டது. சம்பிரதாயத்திற்காக உற்சாகப்படுத்துவது அல்ல. உண்மையைப் புரியவைத்து உற்சாகப்படுத்தவேண்டும். ஒவ்வொருவருக்குள்ளும் ஆத்மா உறைகிறது. ஆத்மாவால் முடியாத காரியம் எதுவுமே இல்லை. ஆகவே, தன்னம்பிக்கை கொண்டு அந்த ஆற்றலை வெளிப்படுத்துங்கள். துன்பங்கள் அனைத்தும் தூளாகும். வளம் பெருகும். பலம் பெருகும். நல்லவையெல்லாம் கைகூடும். இந்த வார்த்தைகள் ஒவ்வொரு

மனிதனின் செவிகளுக்கும் செல்ல வேண்டிய வேத வார்த்தைகளாகும். இந்த வார்த்தைகளைக் கூறி வாடி நிற்பவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்பது கருத்து. ஏழை எளியவர்களை இகழ்ந்து பேசாமல் இருப்பது இனியது என்று கூறப்பட்டது. ஏழை அழுத கண்ணீர் சுட்டெரிக்கும் என்று சொல்வார்கள். ஆகவே, அவர்களை அலட்சியப்படுத்தாமல், கடுமையான சொற்களால் அவர்கள் மனதைப் புண்படுத்தாமல் அன்புடன் வாழ்வதே இனிது என்பது கருத்து.

அ.பொ.

கயவரைக் கைகழிந்து-கீழ்மக்களை நீக்கிவாழ்வது. உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே-வாழ்க்கையில் சோர்ந்து கஷ்டப்படுபவர் களை உற்சாகப்படுத்துதல் இனியது. எளியர் இவரென்று-இவர்கள் எளியவர் என்று. இகழ்ந்துரையாராகி-இகழ்ச்சியாகப் பேசாமல் இருப்பது. ஒளிபட வாழ்தல் இனிது-ஆறுதல் கூறி வாழ்வது இனியது.

நன்றிப் பயன்தூக்கி வாழ்தல் நனிஇனிதே
மன்றக் கொடும்பா(டு) உரையாத மாண்பினிதே
அன்றறிவார் யாரென்(று) அடைக்கலம் வெளவாத
நன்றியின் நன்கினிய(து) இல். *30*

விளக்கவுரை

ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொருவருடைய உதவி நமக்குத் தேவைப்படும். அந்த உதவிகளைப் பெற்று எப்போதும் மறக்காமல் நன்றியுடன் நினைத்திருப்பது இனியது. நியாய சபைகளில் சென்று சாட்சி சொல்பவன் எந்தப் பக்கமும் சாயாமல் நடுநிலையுடன் இருப்பது இனியது. ஒருகட்டத்தில் இரக்கப்பட்டு ஒருவருக்கு ஒரு பொருளை வழங்குகிறோம். அப்பொருளைத் திரும்பக் கேட்காமல் இருப்பது இனியது. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவருடைய உதவி தேவை. அந்த உதவிகளைப் பெற்று நன்றியுடன் வாழ்வது இனியது என்று கூறப்பட்டது. ஒரு எறும்பு நீரில் தத்தளித்துக் கொண்டிருந்தது. அதைக் கண்ட புறா மரத்திலிருந்தஇலையைத் தன் அலகால் கிள்ளி போட்டது. அந்த இலையில் ஊர்ந்து ஏறிய எறும்பு கரை சேர்ந்தது. ஒரு சமயம் அந்தப் புறாவைக் கொல்ல ஒரு வேடன் அம்பு பூட்டி குறிவைத்தான். அன்று புறாவால் உயிர் பிழைத்த எறும்பு, அந்தச் சமயம் பார்த்து வேடனின் காலை கடுமையாகக் கடித்தது. வேடன் காலை உதறினான். அம்பு,

குறி தவறி இலையில் பட்டது. அந்தச் சப்தம் கேட்டு புறா தப்பித்துப் பறந்தது. இந்தக் கதையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். புறா செய்த நன்றியை மறவாமல் எறும்பு புறாவைக் காப்பாற்றியது. அதே போல் மனிதர்கள் ஒவ்வருக்கொருவர் உதவி கொண்டு நன்றி மறக்காமல் வாழ்வது இனியது என்பதாகும். நியாய சபையில் சாட்சி சொல்பவன் எந்தப் பக்கமும் சாயாமல் உண்மையை சொல்வது இனியது என்று கூறப்பட்டது. பணம் வாங்கிக் கொண்டு பொய்சாட்சி சொல்வது தீயவினையாகும். அதற்கான தண்டனை வேறுவடிவில் வந்தேதீரும். ஒருவனின் நிழல் எப்படி அவனைத் தொடர்கிறதோ அதுபோல அவரவர் செய்த செயல்கள் தொடர்ந்து வந்தே தீரும். அதை நிறுத்த எந்த சக்தியாலும் முடியாது. ஆகவே, பொய்சாட்சி சொல்லா திருப்பது இனியதாகும். இரக்கப்பட்டு ஒரு பொருளை மற்றவர்களுக்குத் தருகிறோம். அதைத் திருப்பி கேட்காமல் இருப்பது இனியது என்று கூறப்பட்டது. வறுமையில் வாடுபவர்கள், நாம் கொடுத்த பொருளை திருப்பிக்கொடுக்கும் சக்தியற்றவர்களாக இருப்பார்கள். ஆகவே, அவர்கள் வருத்தம் அடையும்படி செய்யக்கூடாது என்பது கருத்து.

அ.பொ.

நன்றி பயன்தூக்கி-உதவி செய்தவர்களை மறக்காமல் நினைத்து. நனி இனிதே-வாழ்தல் சிறந்தது. மன்றக் கொடும்பாடு உரையாத-நியாய சபையில் ஒரு சார்பாக இல்லாமல் நடுநிலை யுடையவராக. அடைக்கலம் வெளவாத-கொடுத்ததைத் திருப்பிக் கேட்காத. நன்றியின் நன்கினியது-நன்றியில் சிறந்தது.

அடைந்தார் துயர்கூடா ஆற்றல் இனிதே
கடன்கொண்டும் செய்வன செய்தல் இனிதே
சிறந்தமைந்த கேள்விய ராயினும் ஆராய்ந்து
அறிந்துரைத்தல் ஆற்ற இனிது. *31*

விளக்கவுரை

துன்பம் கொண்டவர்களுக்கு, ஆபத்து காலத்தில் மகிழ்ச்சி உண்டாக்குவது இனியது. அவசியம் செய்யக் கூடிய காரியங்களைக் கடன் வாங்கியாவது செய்வது இனியது. தாம் அறிந்த உண்மையை மற்றவர்களும், அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, அவற்றை விளக்கமாக எடுத்துக் கூறுவது மிகவும் இனியது. இப்பொருளில் இப்பாடல் உள்ளது. துன்பம் கொண்டவர்களுக்கு ஆபத்துக் காலத்தில் மகிழ்ச்சி உண்டாகுவது இனியது என்று கூறப்பட்டது.

ஆபத்திலும், துன்பத்திலும் சிக்கியிருப்பவர்களுக்குப் பணம் கொடுத்துதான் ஆறுதல் ஏற்படுத்தவேண்டும் என்பதல்ல. அன்பும், ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லமுடியும். எல்லா ஆபத்தும் நீங்கி விடும் என்று நம்பிக்கை தரும் வார்த்தைகளைச் சொல்ல முடியும். இவ்வாறு துன்பத்தில் மூழ்கியிருப்பவர்களுக்கு மகிழ்ச்சியும், நம்பிக்கையும் ஏற்படும் வகையில்பேசுவது, உதவுவது இனியது. அவசியம் செய்யக் கூடிய காரியங்களுக்கு கடன் வாங்கியாவது, முடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. உயிர்காக்கும் மருந்து, மாணவர்களுக்குக் கட்டவேண்டிய பீஸ் தொகை, திருமணம் நடப்பதற்குத் தேவையான அத்யாவசியப் பொருள்கள் ஆகிய நிகழ்வுகளுக்குக் கடன் வாங்கியாவது முடிக்க வேண்டும் என்பது பொருளாகும். தாம் அறிந்த உண்மையை மற்றவர் களும் அறியச் செய்வது இனியது என்று கூறப்பட்டது. மிகச் சிறந்த உண்மை என்பது, ஒவ்வொரு உயிர்களுக்குள்ளும் ஆத்மா ஜோதியாக இறைவன் வீற்றிருக்கிறார் என்பதுதான். இதை அறியாததால் மனிதர்கள் விரக்தியிலும், துன்பத்திலும் அவநம்பிக்கையிலும் நடைப் பிணங்களாக திரிந்து கொண் டிருக்கிறார்கள். பட்டுப்போன மரத்தையும் துளிர்க்கச் செய்யும் இந்த அமுத வார்த்தையை, சத்தியத்தை, எளிய மக்களும் அறியும்படி செய்ய வேண்டும். இந்த அமுத வார்த்தையைப் பாமரர்களிடம் சேர்ப்பவர்கள் பேறு பெற்றவர்கள். இந்தக் காரியத்தைத் தவிர முக்கியமான சேவை எதுவுமே இல்லை. ஆத்மா அழியாது. அனைத்து ஆற்றல் களும் உடையது என்ற சத்தியத்தை உலக மக்கள் அறியும்படி செய்வது இனியதிலும் இனியது.

அ.பொ.

அடைந்தார்-அடைக்கலமாக வந்தவரை. ஆற்றல் இனிதே-உதவி செய்தல் இனியது. கடன் கொண்டும்-கடன் வாங்கியாவது. செய்வன செய்தல்-செய்ய வேண்டிய அவசியமான காரியங்களை. சிறந்தமைந்த கேள்விய ராயினும்-சிறந்த நூல்களைக் கற்ற வேதவிற்பன்னராக இருந்தாலும். ஆராய்ந்து அறிந்துரைத்தல்-மற்றவர்களுக்குப் புரியும்படி விளக்கமாகக் கூறுதல்.

கற்றறிந்தார் கூறும் கருமப்பொருள் இனிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்இனிதே
தெற்றென இன்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்
பத்திமையில் பாங்கினிய(து) இல். *32*

விளக்கவுரை

காலந்தோறும் நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அவற்றின் பொருளைக் காலத்திற்கு தகுந்தவாறு புரிந்து கொண்டு, பயன் அடைவது இனியது. கொடுங்கோலன் ஆளும் நாட்டில் இருப்பதைவிட வெளியேறுவது இனியது. தீங்கு செய்தவர்களைப் பழிக்கு பழிவாங்காமல், அன்பு காட்டுவது இனியது. இப்பொருளில் இப்பாடல் உள்ளது. காலந்தோறும் நூல்கள் வெளிவந்தவண்ணம் உள்ளன. அவற்றின் பொருளைக் காலத்திற்குத் தகுந்தவாறு புரிந்து கொண்டு பயன் அடைவது இனியது என்று கூறப்பட்டது. கடந்த காலங்களில் வெளிவந்த நூல்கள் பாமர மக்களுக்குப் புரியாத நிலையில் இருக்கிறது. ஆனால் சத்தியம் அதில் உள்ளது. அந்த சத்தியத்தை இந்தக் காலத்திற்குத் தகுந்தவாறு மூலக்கருத்து சிதையாமல் புரிந்து கொள்ள வேண்டும். மார்க்கண்டேயருக்காகச் சிவபெருமான் எமனை உதைத்தார் என்று புராணம் கூறுகிறது. மார்க்கண்டேயர் சிவலிங்கத்தைத் தழுவிய நிலையில், எமன் பாசக் கயிற்றை வீசினான். அக் கயிறு சிவலிங்கத்தின் மீதும் பட்டது. அதனால் சினம் கொண்ட சிவபெருமான், அங்குத் தோன்றி எமனை உதைத்தார் என்று கூறப்பட்டிருக்கிறது. சிவ தியானத்தில் எப்போதும் மூழ்கியிருப்பவர்களை, எமன் நெருங்க அஞ்சுவான் என்பது பொருளாகும். திருமாலும், பிரம்மாவும் சிவபெருமானின் அடிமுடியைக் காணமுடியாமல் தோற் றார்கள் என்று புராணம் கூறுகிறது. செல்வத்தாலும், கல்வி யாலும் இறைவனை அறிய முடியாது. ஆணவம் நீங்கிய தூய அன்பின் மூலம்தான் இறைவனை அறிய முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதுவே காலத்திற்கு ஏற்ப நூல் களைப் புரிந்து கொள்ளுதலாகும். கொடுங்கோல் மன்னன் ஆளும் நாட்டில் அதர்ம காரியங்களே நடக்கும். ஆகவே, அந்நாட்டில் வாழ்வதைவிட, வெளியேறுவது நல்லது என்று கூறப்பட்டது. தீமை செய்தவர்களைப் பழிக்குப் பழிவாங்க வேண்டும் என்று நினைப்பது தவறு. அன்பு காட்டி அவர் களைத் திருத்துவது இனியது. இதனால், பகை அழியும் என்பது கருத்து.

அ.பொ.

கற்றறிந்தார் கூறும் கருமப் பொருள்-காலத்திற்கு ஏற்றவாறு நூல்களைப் புரிந்து கொள்வது. பற்றமையா வேந்தன்-கொடுங்கோல்

மன்னன். கீழ் வாழாமை முன் இனிது-வாழமல் வெளியேறுவது இனியது. தெற்றென இன்றித் தெளிந்தாரைத்-நமக்குக் கெடுதல் செய்தவரை. பத்திமையில் பாங்கியது இல்-அன்பு மொழிகளைத் திருத்துவது இனியது.

ஊர்முனியா செய்தொழுகும் ஊக்கம் மிகஇனிதே
தானே மடிந்திராத் தாளாண்மை முன்இனிதே
வாள்மயங்கு மண்டமருள் மாறாத மாமன்னர்
தானை தடுத்தல் இனிது. 33

விளக்கவுரை

ஊரார்கள் வெறுக்காத காரியத்தைச் செய்வது இனியது. தலைவனாக இருக்கக் கூடியவன் சுறுசுறுப்புடன், முயற்சி யுடைய ஆளும் தன்மை பெறல் இனியது. இரு மன்னர்களுக் கிடையே போர் நடக்கும்போது ஒருசான்றோர், சண்டையை நிறுத்தி சமாதானத்தை உண்டாக்குவது மிகவும் இனியது. இப் பொருளில் இப்பாடல் உள்ளது. ஊர் மக்கள் வெறுக்காத செயல்களை செய்வது இனியது என்று கூறப்பட்டது. ஊர் மக்கள் எதை விரும்புவார்கள்? ஊருக்கு வசதிகள் செய்து தருபவர்களை விரும்புவார்கள். ஊருக்குப் பெருமை சேர்க்கும் செயல்களை விரும்புவார்கள். ஏதேனும் அட்டூழியம் நடந்தால், அதை தட்டிக்கேட்கும் ஆண்மை மிகுந்தவர்களை விரும்புவார்கள். ஆலயப்பணி, கல்விப்பணி, திருமணசேவை போன்ற பொது சேவை செய்பவர்களை விரும்புவார்கள். ஆகவே, ஊரார் விரும்பும் செயல்கள் செய்வது இனிதாகும். சுறுசுறுப்புடன் கூடிய ஆளுந்தன்மை இனியது என்று கூறப்பட்டது. சுறுசுறுப்புடைய புலிக்கு யானையும் அஞ்சும். ஆகவே, சுறுசுறுப்புதான் வலிமை. சோம்பல் பலவீனம். சுறுசுறுப்பில் தான் ஆளும் தன்மை உதயமாகிறது. இந்த உலகத்தில் பிறந்ததற்கு அடையாளமாக எதையேனும் விட்டுச் செல்ல வேண்டும். சோம்பல் உள்ளவர்களாய்க் கல் போன்று வாழ்வதால் பயன் இல்லை. ஆகவே, சுறுசுறுப்பு, ஆளும் தன்மை ஆகியன இனியது என்று கூறப்பட்டது. இரு மன்னர் களுக்கிடையே சண்டை நடக்கும்போது ஒரு சான்றோர் தலையிட்டு சமாதானம் செய்வது இனியது. ஏனெனில், பல உயிர்கள் பலியாவது தவிர்க்கப்படும். இரு நாட்டின் பொருளாதாரம் சீர்கெடாமல் இருக்கும். இரு மன்னர்களும் நட்புப் பாராட்டி வாழ வழி பிறக்கும். ஆகவே, போருக்கு இடையே சமாதானம் செய்வது இனியதிலும் இனியது ஆகும்.

அ.பொ.

ஊர்முனியா செய்தொழுகும்-ஊருடட்ன ஒத்துவாழும் ஒழுக்கம். மடிந்திராத் தாளாண்மை-சோம்பலை அகற்றி முயற்சியுடையவாகி. வாள்மயங்கு மண்டமருள்-யுத்த நடக்கும் போது. மாமன்னர் தானை தடுத்தல் இனியது-இருமன்னர்களையும் சமாதானப்படுத்துவது இனியது.

எல்லிப் பொழுது வழங்காமை முன்இனிதே
சொல்லுங்கால் சோர்வின்றிச் சொல்லுதல் மாண்பினிதே
புல்லிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை
கொள்ளா விடுதல் இனிது. 34

விளக்கவுரை

ஒருவர் செல்ல வேண்டிய இடங்களுக்குப் பகலில் செல்வது நல்லலது. இரவு நேரங்களில் நடைப் பயணம் செய்வதைத் தவிர்த்தல் இனியது. சபையில் சொல் குற்றமோ, பொருள் குற்றமோ இல்லாமல் பேசுவது இனியது. பொருள்கள் கூட சில பயன்பாட்டுக்கு உதவலாம். ஆனால், கயவர்கள் எதற்கும் உதவமாட்டார்கள். ஆகவே, கயவர்கள் நட்பை விடுதல் இனியது. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. ஒருவர் செல்ல வேண்டிய இடங்களுக்கு பகலில் செல்வதே பாதுகாப்பு. இரவில் பல இடர்கள் வரலாம். சமூக விரோதிகள் காரணமாக துன்பம் வரலாம். ஆகவே, செல்ல வேண்டிய இடங்களுக்குப் பகலில் செல்வது இனியது என்று கூறப்பட்டது. சபையில் சொல்லக்கூடிய சொற்கள் சொல்குற்றமோ, பொருள் குற்றமோ இல்லாமல், கவனமாக பேசுவது, இனியது என்று கூறப்பட்டது. நாம் கூறும் சொற்கள் எல்லா மக்களுக்கும் நன்மை செய்வதாக இருக்க வேண்டும். நல்வழி காட்டுவதாக இருக்க வேண்டும். அந்தச் சொற்களில் குற்றம் எவரும் கூறாதபடி கவனமாகப் பேசுவது இனியதாகும். பொருள்கள்கூட சில பயன்படலாம். ஆனால், கயவர்கள் எதற்கும் பயன்படமாட்டார்கள். ஆகவே, அக்கயவரை விட்டு நீங்கி வாழ்வது இனியது என்று கூறப்பட்டது. கயவர்கள் பஞ்சமா பாதங்களைச் செய்ய அஞ்சமாட்டார்கள். அவர்களால் மக்களுக்குத் துன்பம் வருமே ஒழிய, எந்தப் பலனும் கிட்டாது. கயவர்களின் நட்பு துன்பத்தைத் தரும். அவர்கள் செய்யும் குற்றங்கள் நம்மீதும் சந்தேகக்கண் கொண்டு பார்க்கப்படும். ஆகவே, கயவர்களை நட்பாகக் கொள்ளக்கூடாது. கயவர்கள் பூமிக்குப் பாரமானவர்கள். தீவினையின் தாக்கத்தால் அவர்கள் இந்த

நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பல பிறவிகளில் துன்பத்தை அனுபவித்துதான், அவர்கள் கடைத்தேற முடியும். ஆகவே, இப்பிறவில் நாம் அவர்களை விட்டு நீங்கி வாழ்தலே பாதுகாப்பு; இனியது என்பதாகும்.

அ.பொ.

எல்லிப் பொழுது-இரவுப் பயணம் தவிர்ப்பது இனியது. சொல்லுங்கால்-பேசும்போது; சோர்வின்றிச் சொல்லுதல்-குற்றமின்றி உறுதியாகப் பேசுதல். புல்லிக் கொளினும்-பொருள்கள் பயன்படலாம். பொருளல்லார் தங்கேண்மை-ஒன்றுக்கும் உதவாத கயவர்களை.

ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரிதல் மாண்பினிதே
முற்றான் தெரிந்து முறைசெய்தல் முன்இனிதே
பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்
வெற்றிவேல் வேந்தர்க்(கு) இனிது. *35*

விளக்கவுரை

யுத்தம் செய்வதற்கு முன்பு எதிரியின் பலம், பலவீனம் ஆகியவற்றை ஒற்றர் மூலம் அறிவது மன்னர்க்கு இனியது. ஒருவருக்குத் தண்டனை வழங்கும்முன் அவர் செய்த குற்றம், அதற்கான காலம், காரணம் ஆகியவற்றை ஆராய்ந்து அளிப்பது இனியது. பற்றின்றி நடுநிலையுடன், மற்றவர்கள் செய்யும் குற்றத்தைச் சீர்தூக்கி அறிதல் இனியது. யுத்தம் செய்வதற்கு முன்பு எதிரியின் பலம், பலவீனம் ஆகியவற்றை ஒற்றர் மூலம் அறிவது மன்னருக்கு இனியது என்று கூறப் பட்டது. பலம் அறிந்தால்தான் அந்தப் பலத்தை எப்படி அழிப்பது? என்பதைத் தீர்மானம் செய்ய முடியும். பலவீனம் எது என்பதை அறிந்தால்தான் அந்த இடத்தைக் குறிபார்த்துத் தாக்கமுடியும். இதுவே வெற்றிக்கான உபாயமாகும். ஆகவே இம்முறை இனியது என்று சொல்லப்பட்டது. ஒருவருக்குத் தண்டனை வழங்குவதற்கு முன்பு அவர் செய்த குற்றம், அதற்கான காலம், காரணம் ஆகியவற்றை ஆராய்ந்து அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. கற்பைக் காத்துக் கொள்ள ஒரு பெண் முரடனைக் கத்தியால் குத்தியிருக்கலாம். தற்காப்புக்காக ஒருவரைத் துப்பாக்கியால், மற்றொருவர் கட்டிருக்கலாம். பாதையில் திடீரென்று குறுக்கிட்டதால் பஸ்ஸோ, லாரியோ மோதி ஒருவர் இறந்திருக்கலாம். இதையெல்லாம் ஆராய்ந்து தவறு யார் மீது என்பதைத் தீர விசாரித்து அறிந்து தண்டனை வழங்குவது இனியதாகும். மற்றவர் குற்றத்தை நடுநிலையுடன் ஆராய்ந்து முடிவு செய்ய

வேண்டும் என்று கூறப்பட்டது. எவர் பக்கமும் சாயாமல், நடுநிலையுடன் குற்றத்தை ஆராய வேண்டும். நமக்கு உறவினர் என்பதால் அவர் குற்றத்தை மறைக்க முயலக்கூடாது. மற்றொருவர் அயலார் என்பதால், குற்றத்தை அவர்மீது பலவந்தமாகத் திணிக்கக்கூடாது. நடுநிலையுடன் உண்மையை ஆராய்ந்து முடிவு எடுத்தால், மக்கள் அவரைத் தெய்வமாகப் போற்றி வணங்குவார்கள். ஆகவே, அவ்வாறு நடப்பது இனியதாகும்.

அ.பொ.

ஒற்றிப் பொருள்தெரிதல்-ஒற்றர்கள் மூலமாக எதிரியின் பலம், பலவீனம் அறிதல். முற்றான் தெரிந்து முறைசெய்தல்-குற்றம் செய்தவனைத் தீர விசாரித்துத் தீர்ப்பு சொல்லுதல். பற்றிலனாய்-ஒரு பக்கமாகச் சாயாத நடுநிலை உள்ளவனாய். பாத்துற்றுப் பாங்கறிதல்-சீர்தூக்கி அறிந்து கொள்ளல்.

அவ்வித்து அழுக்கா(று) உரையாமை முன்இனிதே
செவ்வியனாய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே
கவ்வித்தாங் கொண்டுதாங் கண்டது காமுற்று
வவ்வார் விடுதல் இனிது. 36

விளக்கவுரை

பொறாமையை வெளிப்படுத்தக்கூடிய சொற்களைச் சொல்லாமல் இருப்பது இனியது. தனக்கு ஏற்படும் கோபத்தை நீக்கிவிட்டு வாழ்வது இனியது. ஒரு பொருளை அபகரித்து, தான் பெற முடியும் என்ற சூழல் வந்தால், அந்தப் பொருளை விட்டு விடுதலே இனியது. இப்பொருளில் இப்பாடல் அமைந் துள்ளது. பொறாமையை வெளிப்படுத்தக் கூடிய சொற்களைச் சொல்லாமல் இருப்பது இனியது என்று சொல்லப்பட்டது. மனிதனின் இழிவுக்கு மூலகாரணமாக இருப்பது பொறாமை தான். இப்பொறாமைதான் பல குடும்பங்களைச் சின்னா பின்னமாக்குகிறது. துரியோதனன் பாண்டவர்களின் சிறப் பைக் கண்டு பொறாமை கொண்டான். அவர்களை அழிக்க முயன்று அவனே அழிந்தான். ஆகவே, சிறப்புப் பெற்றவர் களைக் கண்டு பொறாமைப் படக்கூடாது. நாமும் சிறப்புப் பெற சரியான உபாயங்களைக் கையாண்டு முயலவேண்டும். அதுவே, விவேகம். அதுவே, ஆண்மை என்பது கருத்து. கோபம்தான், பல ஆபத்துகளில் சிக்க வைக்கிறது. குடும்பத் தைத் தவிக்க விட்டு, பலர் சிறைச்சாலைகளில் இப்போது அடைபட்டு இருப்பதற்குக் காரணம் கோபமே ஆகும்.

கோபத்தால் நெருங்கிய உறவுகள்கூட விவாகரத்து நிலைக்குச் செல்வதைக் காண்கிறோம். பண்பாடு, கலாச்சாரம் அழிவது கோபத்தால் விளைகிறது. ஆகவே, கோபத்தை அடக்குதல் இனியதாகும். ஒரு பொருளை அபகரித்து தான் பெற முடியும் என்ற சூழல் வந்தால், அப்பொருளை விட்டுக் கொடுத்து விடுதல் இனியது என்று கூறப்பட்டது. கைகேயி சூழ்ச்சியால் இராமர் இராஜ்ஜியத்தை இழந்தார். அவர் நினைத்திருந்தால், அதைக் கைப்பற்றியிருக்க முடியும். அவரை வெல்வதற்கு யாரும் அங்கு இல்லை. ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. சிற்றன்னையின் கட்டளையை ஏற்று, கானகம் சென்றார். அதனால் அவர் புகழ் ஓங்கியது. ஆகவே, நாமும் விட்டுக் கொடுக்கும் பண்பைப் பெறவேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

அழுக்காறு உரையாமை-பொறாமை கொள்ளாமை. சினங் கடிந்து-கோபத்தை நீக்கி. கவ்வித்தாங்-அபகரித்துதான். விடுதல் இனிது-விட்டுக் கொடுப்பது இனியது.

இளமையை மூப்பென்(று) உணர்தல் இனிதே
கிளைஞர் மாட்(டு) அச்சின்மை கேட்டல் இனிதே
தடமென் பணைத்தோள் தளிரிய லாரை
விடமென் றுணர்தல் இனிது. *37*

விளக்கவுரை

இளமைப் பருவத்தில் இருக்கும்போது, தான் முதுமைப் பருவத்தில் இருப்பதாக நினைத்து, பெருந்தன்மையுடன் வாழ்வது இனியது. சுற்றத்தாருடன் சேர்ந்து வாழ வேண்டும். அப்படி வாழும்போது அவர்களுக்குப் பயத்தை உண்டாக்கும் சொற்களைப் பேசாமல் வாழ்வது இனியது. மென்மையான மூங்கிலைப் போன்ற தோள்களை உடையவர்கள் பெண்கள். மென்மையான பூக்களைப் போன்ற உடல் அழகு உள்ளவர்கள். அவர்களைத் தங்கள் விருப்பத்திற்கு உரியவர்கள் என்று நினைக்கக்கூடாது. தங்கள் வாழ்க்கையை அழிக்கவந்த கொடிய பாம்புகள் என்று நினைப்பது இனியது. இப்பொரு ளில் இப்பாடல் உள்ளது. இளமைப் பருவத்தில், முதுமை அடைந்த நினைவில் பெருந்தன்மையுடன் நடப்பது இனியது என்று கூறப்பட்டது. வயதானால்தான் பெருந்தன்மை வர வேண்டும் என்பதல்ல. இளமை காலத்திலேயே அப்பண்பை நிலை நிறுத்த முடியும். சேரன் செங்குட்டுவனும், இளங்கோ வடிகளும் சகோதரர்கள் அரண்மனைக்கு ஒரு சோதிடர்

வந்தார். மன்னருக்குப் பிறகு மூத்தவனான செங்குட்டவன் அரசனாக முடியாது. இளையவனான இளங்கோவன் அரசர் ஆவார் என்று அவர் கூறினார். அதைக்கேட்ட இளவரசன் செங்குட்டுவன் முகம் மாறியது. அதைக் கண்ட இளங்கோ, இந்த சோதிடர் கூறியது பலிக்காது. நான் இப்போதே துறவறம் செல்கிறேன் என்று கூறிச் சென்றார். செங்குட்டுவனே அரசன் ஆனார். இந்தப் பெருந்தன்மைப் பண்பு இளம் வயதிலே இளங்கோவுக்கு இருந்தது. சிலப்பதிகாரம் என்ற அழியாக் காவியத்தை அளித்த இளங்கோவடிகளே அவர். ஆகவே, இளமைப் பருவத்திலேயே முதுமைக்குரிய பெருந்தன்மை பண்பைப் பெறுவது இனியதாகும். அழகிய பெண்கள் தங்களுக்கு உரியவர்கள் என்று நினைக்கக்கூடாது. நம் வாழ்க்கையை அழிக்க வந்த பாம்புகள் என்று எச்சரிக்கை யுடன் இருக்க வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

இளமையை மூப்பென்று-இளமைப் பருவத்தில் இருக்கும்போது முதுமைப் பருவத்தில் இருப்பதாகக் கருதி. கிளைஞர் மாட்டு-உறவினர் களோடு. தடமென் பணைத்தோள் தளிரியலாரை-அழகுள்ள பெண்களை. விடமென் றுணர்தல் இனிது-விஷம் என்று ஒதுக்குவது இனியது.

சிற்றாள் உடையான் படைக்கலம் மாண்பினிதே
நட்டார் உடையான் பகையாண்மை முன்இனிதே
எத்துணையும் ஆற்ற இனிதென்ப பால்படுங்
கற்றா உடையான் விருந்து. *38*

விளக்கவுரை

யுத்த களங்களில் பல்வேறு ஆயுதங்கள் பயன்படுத்தப் பட்டாலும், சிற்றாள் உடையான் என்னும் ஆயுதத்தைப் பெறு வது இனியது. உறவினர்களுக்குத் துன்பம் ஏறிப்பட்டால் அத்துன்பத்தை நீக்குவது இனியது. பசுவையும், கன்றையும் வளர்த்து, அது தரும் உணவை அருந்துவது இனியது. இப் பொருளில் இப்பாடல் உள்ளது. யுத்தகளத்தில் பல்வேறு ஆயுதங்கள் பன்பட்டாலும், சிற்றாள் உடையான் என்னும் ஆயுதத்தைப் பெறுவது இனியது என்று கூறப்பட்டது. சிற்றாள் ஆயுதம் என்பது பாதுகாப்புக் கவசமாய் வழிகாட்டும் பெரியோரைக் குறிக்கும். இளைஞர்களிடம் வீரம் இருக்கும். யுத்தகளத்தில் எப்படிச் செயல்படுவது என்று திட்டம் இருக்காது. அந்தத் திட்டத்தை வகுக்கும் சான்றோரின்

அறிவுரையே சிற்றாள் ஆயுதமாகும். இந்த ஆயுதத்தைத் பெற்றிருப்பது மன்னனுக்கு இனியதாகும். உறவினர்களுக்குத் துன்பம் நேர்ந்தால் அதை நீக்குவது இனியது என்று கூறப் பட்டது. குடும்பப் பிரச்சனை காரணமாக உறவினர் துன்பம் அடையலாம். சொத்துத் தகராறு காரணமாகத் துன்பப்பட லாம். நோய் காரணமாகத் துன்பம் அடையலாம். வஞ்சகர் காரணமாக துன்பம் வரலாம். அந்தச் சூழலில் விவேகத்துடன் செயல்பட்டு அத்துன்பங்களை நீக்குவது இனியதாகும். பசுவையும், கன்றையும் வளர்த்து, பசுதரும் பாலைப் பருகுவது இனியது என்று கூறப்பட்டது. கன்றுக்குப் பால் தராமல் சுயநலமாக இருக்கக்கூடாது. பசுவும் கன்றும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். உபரியாக கிடைக்கும் பாலைப் பருகுதல் மகிழ்ச்சி தரும் என்பது, கருத்தாகும். பசுவுக்குத் தகுந்த உணவுகளைத் தரவேண்டும். அதனால் பசு பால் நிறையச் கரக்கும் தன்மையைப் பெறும். அவ்வாறு சுரக்கும் பாலை முதலில் கன்று குடிக்க வேண்டும். அதன் பிறகு உபரி பாலை நாம் கொள்வது மகிழ்ச்சி தரும். அதுவே தரும நெறியும் ஆகும்.

அ.பொ.

சிற்றாள் உடையான்-அறிவுரை கூறும் பெரியோர் பலம் உடையவன். படைக்கலம்-படைக்கருவி. நட்டார்-உறவினர். பகை-பகைவர்கள். பால்படுங்-பால் தரும் பசு.

பிச்சைபுக்(கு) உண்பான் பிளிற்றாமை முன்இனிதே
துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே
உற்றபே ராசை கருதி அறனொரூஉம்
ஒற்கம் இலாமை இனிது. *39*

விளக்கவுரை

கோபம் துன்பமானது. பிறரிடம் உணவு வாங்கி உண்ப வர் கோபமே இல்லாமல் இருப்பது இனியது. எப்போதும் கோபம் இருக்கும் வீட்டில் தங்குவது கூடாது. இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கும் வீட்டில் குடியிருப்பது கொடுமை. இவற்றையெல்லாம் தவிர்த்து, தக்க இடத்தல் வாழ்வது மிகவும் இனியது. பேராசை கொண்ட அறநெறி சிந்தனையில்லாதவர்களைப் பிரிந்து தூரமாக இருப்பது இனியது. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. பொதுவாகக் கோபம் துன்பம் தரும். பிறரிடம் உணவு வாங்கி உண்பவர் கோபம் இல்லாமல் இருப்பது இனியது. ஏனெனில்

அங்குக் கோபம் செல்லாது. அவமானம்தான் ஏற்படும். ஆகவே, பிறரிடம் உணவு வாங்கி உண்ணும் இடத்தில் கோபம் கூடாது என்பதாகும். எப்போதும் கோபம் கொள்கிறவர்கள் வீட்டில் தங்கக்கூடாது என்று கூறப்பட்டது. கோபம் குடியைக் கெடுக்கக் கூடியது. அந்தக் குடும்பம் எந்த நேரத்திலும் சிதறி விடும். ஆகவே, அங்குத் தங்குவது பெருந் துன்பத்தைத் தரும். என்பதால், விலகியிருப்பதே சிறந்தது என்பதாகும். இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கும் வீட்டில் குடியிருப்பது, கொடுமை என்று கூறப்பட்டது. ஏனெனில், எப்போது வேண்டுமானாலும் வீடு இடிந்து அங்கு வாழ்பவர்கள் மேல் விழலாம். காயம் ஏற்படலாம். அல்லது உயிரே கூடப் போகலாம். ஆகவே, அப்படிப்பட்ட வீட்டில் தங்கக்கூடாது என்பது கருத்து. அறநெறி சிந்தனையில்லாத பேராசைக்காரர்களை விட்டு, விலகியிருப்பது இனியது என்று கூறப்பட்டது. பேராசைக்காரர்கள் சுயநலப் பேய் பிடித்தவர்கள். அந்தப் பேய் எவருக்கும் நன்மை செய்யாது. மற்றவர்கள் மீது குற்றங்களையே கூறும். இத்தகைய கயவர்களால் சமுதாயத்திற்கு எந்த நன்மையும் கிடைக்காது. ஆகவே, அத்தகைய பேராசைப் பேய்களிடமிருந்து விலகி வாழ்வதே நன்மை பயக்கும் என்பது கருத்து.

அ.பொ.

பிச்சைபுக்கு உண்பான்-யாசித்து உணவு புசிப்பவர். பிளிற்றாமை- கோபம் கொள்ளாது. உற்ற பேரோசை-பேராசை கொண்டவர்கள். ஒற்கம் இலாமை-நட்பு வைக்காமல் இருப்பது. இனிது-நல்லது.

பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே
வித்துக்குற் றுண்ணா விழுப்பம் மிகவினிதே
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலில் காழினிய(து) இல். 40

விளக்கவுரை

தொழில் நிமித்தமாகப் பல ஊர்களுக்குச் செல்பவர்கள் உண்டு. ஆனால், தாங்கள் சம்பாதித்த பொருட்கள் அனைத்தையும் செலவழித்தாவது, அவர் சொந்த ஊரில் வாழ்வது இனியது. விதை நெல்லை எக்காரணம் கொண்டும் குத்தி, உணவு சமைத்துச் சாப்பிடாமல் இருப்பது இனியது. அறிவு நூல்களைப் படிப்பதுபோல இனிமையானது எதுவும் இல்லை. ஆகவே, அந்நூல்களைக் கற்பது எப்போதும் இனியது. இப்

பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. தொழில் நிமித்தமாக வெளியூர் செல்பவர்கள் உண்டு. ஆனால், தாங்கள் சம்பாதித்த பொருட்கள் அனைத்தையும் செலவழித்தாவது, சொந்த ஊரில் வாழ்வது இனியது என்று கூறப்பட்டது. சொந்த ஊரில் வாழ்ந்தால்தான் நம் திறமைகள் அந்த ஊருக்குப் பயன்படும். ஆகவே, பணத்தை இழந்தாலும்கூட, சொந்த ஊரில் வாழ்ந்து அந்த ஊரைப் பெருமைக்குரியதாக செய்ய வேண்டும் என்பது பொருளாகும். விதை நெல்லை அரிசியாக்கி உண்ணக்கூடாது என்று சொல்லப்பட்டது. சிலபேர் மழை பொழியவில்லை என்பதற்காக, விதைக்காக வைத்திருந்த நெல்லை உணவாக்கிக் கொள்வார்கள். ஆனால், மழை எப்போது பொழியும் என்பதைச் சரியாகக் கணக்கிட முடியாது. விதைநெல் போனபிறகு நல்ல மழைபொழியலாம். அப்போது விதைப்பதற்கு நெல் இல்லாமல் துன்பம் அடை யநேரும். பல மடங்கு நெல் மூட்டைகளைத் தரும் விதை நெல்லை, சில நாட்கள் உணவுக்காகச் செலவழிப்பது விவேகம் ஆகாது என்பதாகும். அறிவு நூல்களைப் படிப்பது போல், இனியது வேறுஇல்லை என்று கூறப்பட்டது. அறிவுநூல்கள் என்பவை நமக்குள்ளே இருக்கும், எல்லாப் பல்கலைக் கழகங்களையும் தூண்டிவிடக் கூடியதாகும். எல்லா அறிவும் நமக்குள்ளே இருக்கிறது. ஆனால், அதைத் தூண்ட அறிவு நூல்கள் பயன்படுகின்றன. ஆகவே, அறிவு நூல்களைக் கற்பது இனியது என்று கூறப்பட்டது.

அ.பொ.

பத்துக் கொடுத்தும்-சம்பாதித்த பொருள்கள் அனைத்தையும் கொடுத்தும். பதியிருந்து-சொந்த ஊரில் இருந்து. வாழ்வினிதே-வாழ்வது இனிமையானது. வித்து-விதைநெல். குற்றுண்ணா-குத்தி உண் ணாமை. பற்பலநாளும்-எப்போதும் நிலையாக. பழுதின்றி-குற்ற மின்றி. பாங்குடைய-அழகுடைய. கற்றலில் காழினியது இல்-அறநூல் களைப் படித்துக் கொண்டிருப்பதைப்போல் இனியது எதுவும் இல்லை.

□ □ □

திருமதி.அம்சவேணி பெரியண்ணன்

“திருக்குறளை மக்களிடம் பரவலாக எடுத்துச் செல்வதில் புதிய முறையைக் கையாண்டவர். திருக்குறளை ஓலைச்சுவடிபோல் பதிப்பித்தும் திருமணப் பரிசாகவும் நண்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியவர். வாழ்க்கைத் துணைநலம் என்ற வள்ளுவர் பெருந்தகையின் கருத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன்.”

- சுதந்திரப் போராளி தோழர்.இரா.நல்லகண்ணு
மூத்த தலைவர், தேசியக் குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

“நூல்களுக்காக வாழ்ந்தவர் இப்போது நூலாகவே வாழ்கிறார்! அந்தக் காலத்தில் பாடப்புத்தகங்களைத் தாண்டி பல்வேறு துறைகள் சார்ந்த புத்தகங்களை அச்சிட்டு, அனைவரையும் படிக்க வைத்தார். ஒரு பெண்மணி என்றால் நம்ப முடிகிறதா? அந்த சாதனையைப் படைத்தவர்தான் அம்சவேணி பெரியண்ணன். சாதனைப் பெண்மணி அம்சவேணி பெரியண்ணன் பல விஷயங்களில் முதல்வர்.”

- மருத்துவர் அன்புமணி இராமதாஸ்
தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர்

“பதிப்பகத்துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன். ஒரு பெண் பதிப்பாளராக 1000 நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது வியக்கத்தக்க ஒன்றாகும். பதிப்பகத் துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் வனிதா பதிப்பகம் திருமதி.அம்சவேணி பெரியண்ணன் அவர்கள். பெண்ணுலகின் அணிகலனாக ஒளிரும் அம்மையாருக்கு நன்றி!”

- கி.வீரமணி
தலைவர், திராவிடர் கழகம்

“நான் எழுதிய மக்களிசைப் பாடல்கள், பழமொழிக் கதைகள், சிறுவர் பாடல்கள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு என்னை எழுத்தாளராக உயர்த்தியவர். என் மனைவி அனிதா குப்புசாமி அவர்களுடன் ஏற்பட்ட நெருங்கிய பழக்கத்தில் அவர்கள் செய்கின்ற சமையல்களைப் பார்த்து ‘ஏன் நீங்கள் சமையல் நூல்கள் எழுதக் கூடாது’ எனக் கேட்டு உயர்தரமிகு சைவ சமையல், டிபன் சமையல், இனிப்பு வகைகள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு பெருமைப்படுத்தியவர். பதிப்புத்துறையில் இவர் செய்த சாதனைகள் எண்ணிலடங்கா.”

- கலைமாமணி முனைவர் புஷ்பவனம் குப்புசாமி,
கிராமிய இசைக் கலைஞர்.